கல்கி

KALKI 18.1.2004 ரூ.6.00

திருமதி விருமாண்டி
பேசுகிறார்



"முதல்வர் நாற்காலிக்கு என் ஆசைப்படக் கூடாது?"


-விஜயகாந்த் பேட்டி

Simply Solid Wood Furniture

simply™
F U R N I T U R E
The way of life!

Email - simplyfurn@hotmail.com

rajani
Rs. 8300/-
(without storage & side table)



nisha
Rs. 7800/-
(without storage & side table)



storage
Rs. 2450/- (each)

saj
Rs. 1450/-

niwant
Rs. 4999/-



kona
Rs. 1850/-


mejwani
Rs. 9999/-



asan
Rs. 12,999/-

twins
Rs. 799/-





triveni Rs. 3399/-

baisak
Rs. 1050/-



Anush : T.Nagar 24338021, **Imperial Furniture :** Teynampet 24349644, **Choice Decors :** Purasawalkam 26422841, **Sathya :** Mylapore 24982930, Padi 26544929, Velachery 22551129, **Living In Style** Guindy 22201742, **Selection :** Aminjikarai Market 52183266, **Furniture Town :** Anna Nagar 26207644 **Maruthi Decore :** Medavakkam 22240177, **Spencer's Super Store :** Spencer Plaza 28419252, **Decorum** Anna Nagar 26201822, **Furn World :** Kodambakkam 24806687, **Modern Decors :** Nungabakkam 28274427

HA SIMPLY/K/JAN04

prices excluding accessories

உள்ளே...



'மன்மதன்' படத்திற்கு கதை, திரைக்கதை எழுதி நடிக்கும் சிம்புவிடம் "சிறுகதை எழுதத் தெரியுமா?" என்று கேட்டதுதான் தாமதம், "என்ன தலைவா, இப்படிக் கேட்டுட்டீங்க?" என்று படப்பிடிப்பு இடைவேளையில் குளுகுளு கேரா வேனில் இருந்தபடி எழுதித் தந்தார் ஒரு ஜில்ஜில் கதை.

வாய்விட்டுச் சிரித்தாள் இளவரசி. ஆணவம் ப்ளஸ் ஏளனம் கலந்திருந்த அவளது சிரிப்பு, நந்தவனம் முழுக்க டி.டி.எஸ். எஃபெக்டில் எதிரொலித்தது. எப்போதும் அடக்கமாகச் சிரிப்பவள், எப்போதாவது இப்படித் துடுக்காகச் சிரிப்பாள். திருமண வயதைத் தொட்டு நின்ற இளவரசிக்கு, தானொரு பேரழகி என்ற ஈகோ இருந்தது. மாமன்னருக்கோ தன் மகளைக் கவர்வதற்காகவே பன்னாட்டு மன்னர்கள் படையெடுத்து வந்து விடுவார்களோ என்ற டென்ஷன். பார்த்தார்! சுயம்வர மண்டபத்தை சூப்பராய் அலங்கரிக்க ஆணை பிறப்பித்தார்.

இந்த நேரத்தில் தோழியர் இளவரசியிடம் ஓடி வந்து, "குதிரை லாயத்து குப்பன் உங்களைக் காதலிக்கிறானாம். உங்களைத்தான் கல்யாணம் செய்து கொள்வானாம். நாட்டின் தளபதியே தடுத்தாலும், சுயம்வர மண்டபத்திற்குள் நுழைவதற்கு யாரும் தடைபோட முடியாது என்று 'நான் ஸ்டாப்'பாய் உளறுகிறான் இளவரசி!" என்று சொன்னபோதுதான் இப்படிச் சிரித்தாள். சிரித்து முடித்த கையோடு எக்ஸ்ப்ளோசிவாக வெடித்தாள்.

"என்ன திமிர் அவனுக்கு! என் முக அழகிற்கு முன்னால் அவன் நிற்க முடியுமா? சரி, அதை விட்டுத் தள்ளு! அவனது கூன் முதுகு?



அடீ


–சிம்பு எழுதிய சிறுகதை

எப்போதும் மெட்ரிகுலேஷன் ஸ்கூல்பேக்கைச் சுமந்து வருவது போல், அவலட்சணமாக கூன் முதுகைச் சுமந்து திரியும் அவனுக்கு இளவரசி வேண்டுமா? வானம் பார்த்து நடக்க முடியாதவனின் வேடிக்கைப் பேச்சுக்கு நான்தான் கிடைத்தேனா? இழுத்து வாருங்கள் அவனை!" அடுத்த கணம் இளவரசியின் முன் நிறுத்தப்பட்டான் குப்பன். அவளது முகத்தைக் கூட அவனால் நிமிர்ந்து பார்த்துப் பேச முடியவில்லை. ஆனால் அவனது பேச்சு கம்பீரமாக இருந்தது.

"இளவரசி, கொஞ்சம் பொறுமையாக எனக்குப் பேச வாய்ப்புத் தாருங்கள்" என்றான்.

"முதுகெலும்பு இல்லாதவன் என்பதை முன்னமே நிரூபித்து விட்டாய். இனி எதற்கு உனக்கு இன்னொரு வாய்ப்பு. கடைசி ஆசை இருந்தால் மட்டும் சொல்" என்று மிரட்டினாள். "சாவைக் கண்டு நான் அஞ்சமாட்டேன். அதற்கு முன், நான் ஏன் உங்களைக் காதலிக்கிறேன் என்பதைச் சொல்லிவிட்டுச் சாகிறேன்" என்று அவன் கெஞ்ச, இளவரசி மனமிரங்கினாள். குப்பன் பேசத் தொடங்கினான். "ஒருவருக்கு உடல் குறைபாட்டைக் கொடுக்கும் முன், கடவுள் அழைத்துக் கேட்பார். என்னையும் கூப்பிட்டார். உனது காதலிக்கு கூன் முதுகைக் கொடுக்கப் போகிறேன். சம்மதமா? என்றார். அய்யோ எல்லோரும் அவளை கேலி செய்தே கொன்று விடுவார்களே! இந்தத் தண்டனை வேண்டாம். கூன் முதுகை எனக்குத் தந்து விடுங்கள் என்றேன். அப்படியே தந்தார். என்னை நீ மணக்காவிட்டால் பரவாயில்லை. உன்னை அவமானங்களிலிருந்து காப்பாற்றிய ஆத்ம திருப்தி எனக்கு இருக்கிறது. அது போதும்" என்று முடித்த போது, இளவரசியின் இதயத்தில் இரண்டு கிலோ, பாரம் எக்ஸ்ட்ராவாக ஏறியிருந்தது. "யாரங்கே! குப்பனை நம் நாட்டின் குதிரைப்படைத் தலைவராக நியமிக்கிறேன். இதை முரசறிந்து சொல்லுங்கள்" என்றாள். குப்பன் மெல்ல தலையைத் தூக்கி இளவரசியைப் பார்த்தான். முயற்சித்தால் முதுகு நிமிர்ந்து விடும் என்று அவனுக்குத் தோன்றியது.

தி என்ட்.



கல்கி

பரதன் பப்ளிகேஷன்ஸ்
பிரைவேட் லிமிடெட்டிற்காக
பரதன் அச்சகத்தில்
அச்சிட்டு வெளியிடுபவர் :
கி.ராஜேந்திரன்

கல்கி பில்டிங்க்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 97

ஆசிரியர் :
சீதா ரவி

ஆசிரியர் குழு :
செ. ஏக்நாத் ராஜ்
அனுராதா சேகர்
ஆர்.சி. ஜெயந்தன்

வடிவமைப்பு :
எஸ். ஸ்டீஃபன்
பி.ஆர். ராஜன்

தொலைபேசி :
22345622, 23, 24
தொலைநகல் :
044 - 22345621

மின்னஞ்சல் :
ஆசிரியர் குழு :
kalki@kalkiweekly.com
சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com
பிற தகவல்களுக்கு :
info@kalkiweekly.com
கல்கி இன்டர்நெட் முகவரி :
www.kalkionline.com

சந்தா விவரம் :
உள்நாடு :
ஒரு வருடம் : ரூ.330/-
ஆறு மாதம் : ரூ.165/-
வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : 62 யு.எஸ். டாலர்
இலங்கை : ரூ.2000/-

Bharathan Publications Private Limited,
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 097.

ஒவ்வொரு இதழும் உங்கள் மேன்மைக்கு

முதுகில் குத்தும் விளையாட்டு!



‘கில்லி’ படத்தில் கபடி வீரராக நடித்துக் கொண்டிருந்த விஜய்யிடம், அவருக்குப் பிடித்த விளையாட்டுகள் பற்றிக் கேட்டோம். தனக்குப் பிடிக்காத விளையாட்டுகள் பற்றியும் இங்கே சொல்கிறார் விஜய்.

கள்ளன்-போலீஸ்:

எனக்கு விவரம் தெரிந்து வீட்டுக்குள்ளேயே நண்பர்களோடு விளையாடிய முதல் விளையாட்டு இதுதான். நமக்கு போலீஸ் வாய்ப்பு வரும் போது தான் ரொம்ப சுவாரஸ்யம். ஒளிந்திருப்பவர்களைக் கண்டுபிடித்தவுடன், சுட்டுவிரலை நீட்டி கட்டை விரலை உயர்த்தி, துப்பாக்கி போல் ‘டுமீல்’ என்று கத்திக் கொண்டே திருடர்களைச் சுட வேண்டும். அவர்களும் ‘ஆ’ என்று கத்தியபடி நாக்கைக் கொஞ்சம் வெளியே நீட்டி இறந்து போவது போல் கீழே விழுந்து நடிப்பார்கள். சில குறும்புக்காரப் பையன்கள், ஒருமுறை சுட்டால் விழ மாட்டார்கள். பலமுறை சுட வேண்டும். போலீஸ்காரனாக இருந்து எல்லாத் திருடர்களையும் கண்டுபிடித்தாலும், இந்த விளையாட்டில் பதவி உயர்வு கிடையாது. திரும்பவும் நம்மை திருடர்களாக்கி விடுவார்கள் என்பதுதான் இதில் சோகம்.

கோ-கோ:

பள்ளிப் பருவத்தில் எனக்கு அறிமுகமான முதல் விளையாட்டு. இதை கோ-கோ என்று சொல்வதற்குப் பதிலாக, கொக்கோ என்று தவறாக உச்சரிப்போம். ஆடுகளத்திற்குத் துரத்திப் பிடித்து எதிரியை அவுட் ஆக்குகிற விளையாட்டு என்பதால் சுவாரஸ்யம் அதிகம். இருந்தும் பிரபலமாகாத விளையாட்டு.

ஹாண்ட்ஃபால்:

உயர்நிலைப் பள்ளியில் எனது நண்பர்கள் எல்லாம், கால்பந்து அணியில் சேர்ந்து விட, எனக்கு மட்டும் கைப்பந்து ரொம்பப் பிடித்துப் போய் அதில் சேர்ந்தேன். இரண்டு முறை மாநில அளவிலான போட்டியில் எங்கள் பள்ளியின் அணி கலந்து கொண்டிருக்கிறது. அதில் நானும் முக்கியமான பிளேயர். கால்பந்

தைப் போலவே, இதிலும் நிறைய அடி படும். கால்பந்து எனக்குப் பிடிக்காது.

கபடி:

பன்னிரெண்டாம் வகுப்பு படிக்கிற போது கபடி மீது ஆர்வம் வந்தது. ஆனால் பங்கேற்க முடியவில்லை. கபடி மேட்சுகளை ஆர்வமாகப் பார்த்திருக்கிறேன். இப்போது கில்லி படம் மூலம், கபடி விளையாட்டை முழுமையாகக் கற்றுக் கொண்டிருக்கிறேன். இதற்காக, பல மாநில அளவிலான கபடி சாம்பியன்களை அழைத்து வந்து, ஒரு பெரிய மேட்சை வீடியோவில் படம்பிடித்தோம். அதைப் போட்டுப் பார்த்து, ஒவ்வொரு வீரரிடமிருந்தும் ஒரு ஸ்டைலை எடுத்துக் கொண்டு, படம் முழுவதும் பின்பற்றி இருக்கிறேன். ஆட ஆடத்தான் கபடியின் சுவாரஸ்யம் தெரிகிறது. தமிழர் கண்டுபிடித்த விளையாட்டு என்பதில் நாம் பெருமைப்படலாம். ஆனால் சர்வதேச அளவில் பிரபலமாகாதது நமது துரதிர்ஷ்டம்.



டென்னிஸ்:

எனக்கு டென்னிஸ் மீது அப்படியொரு விருப்பம். ஆனால் அதற்கு சிறு வயது முதலே பயிற்சி எடுத்திருக்க வேண்டும். எனது மகனுக்கு டென்னிஸ் பயிற்சி கொடுக்கலாம் என்று முடிவு செய்திருக்கிறேன். ஆனால் அவன் டி.வி.யில் இப்போதே கிரிக்கெட் மேட்ச் பார்க்கிறான். நான் அதிகம் வெறுக்கும் விளையாட்டு என்றால் அது கிரிக்கெட்தான். எனக்கு டி.வி.யில் மேட்ச் பார்க்கப் பிடிக்காது என்றாலும், பெரிய போட்டிகளின் நிலவரத்தை, மற்றவர்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்வேன். நம்ம கில்லித்தண்டுதான் கிரிக்கெட்டாகி விட்டது. அதனால்தான் கிரிக்கெட்டில் நாம் ஜொலிக்கிறோம்.

வீடியோ கேம்ஸ்:

படப்பிடிப்பு இடைவேளையில் எனது கம்ப்யூட்டரில் வீடியோ கேம்ஸ் விளையாடுவதுதான் ஒரே பொழுதுபோக்கு. குறிப்பாக செஸ்தான் அதிகம் விளையாடுகிறேன். கம்ப்யூட்டரும் நானும் விளையாடுவோம். மொத்தமுள்ள பத்து லெவலில் இதுவரை ஐந்து லெவலைத் தாண்டியிருக்கிறேன். கம்ப்யூட்டரில் ஃபார்முலா கார் ரேஸ் விளையாடவும் ரொம்பப் பிடிக்கும்.

பிடிக்காத விளையாட்டுக்கள்:

பல நூறு ஏக்கர் நிலத்தை ஒரு விளையாட்டுக்காகப் பயன்படுத்துவது எனக்குப் பிடிக்கவில்லை. அதனால் எனக்கு கோல்ஃப் பிடிக்காது. இன்னொரு கொடுமையான விளையாட்டு, புல் ஃபைட்டிங். நம்ம நாட்டில் காளைகளை அடக்குகிற ஜல்லிக்கட்டிலே வீரம் இருக்கும். ஆனால் மெக்ஸிகோ, போலந்து மாதிரி நாடுகளில் புல் ஃபைட்டிங் என்ற பெயரில் காளை மாடுகளின் முதுகில் ஒவ்வொரு அம்பாகக் குத்தி, காளையைக் கொன்று விட்டு, அடக்கினேன் என்று மார் தட்டுகிறார்கள். இது முதுகில் குத்தும் விளையாட்டு. இதில் வீரம் இல்லை. கோழைத்தனமும் கொலை வெறியும்தான் இருக்கின்றன.

— ஸ்ரீசக்கரம்





"தி.மு.கவுக்கு காங்கிரஸ் சுமையா...?"

தி.மு.க.- காங்கிரஸ் கூட்டணி உறுதியாகிவிட்ட நிலையில், தமிழக காங்கிரஸ் தலைவர் ஜி.கே.வாசன் படு பிஸி. அடிக்கடி தில்லிக்குப் பயணம், உள்ளூர் தலைவர்களுடன் ஆலோசனை, தோழமைக் கட்சிகளுடன் பேச்சுவார்த்தை என்று பரபரப்பாக ஓடிக் கொண்டிருந்தவரைச் சந்தித்தோம்.

தி.மு.க. - காங்கிரஸ் கூட்டணி வலுவாக இருந்தாலும், உங்கள் கட்சியில் நிலவும் கோஷ்டிப் பூசல், வெற்றிக்கு வேட்டு வைக்கும் ஆபத்து இருக்கிறதே?

மக்கள் நம்பிக்கையை முற்றிலுமாக இழந்த மத்திய பா.ஜ.க. தலைமையிலான ஆட்சி, அ.தி.மு.க. ஆட்சி, இரண்டையும் விரட்டுவதற்காக, இந்தக் கூட்டணி அமைக்கப்பட்டிருக்கிறது. எங்கள் மேலிடத் தலைமையின் வழிகாட்டுதலின் பேரில், தமிழக காங்கிரஸ் தலைவர்கள் ஒட்டுமொத்தமாக இணைந்து நின்று கூட்டணிக்கு வலு சேர்ப்போம். இந்தக் கூட்டணியின் வெற்றிக்கு வேட்டு வைக்கும் விதமாக தமிழக காங்கிரஸ் தலைவர்கள் செயல்பட வாய்ப்பே இல்லை.

"கோஷ்டி இல்லை என்கிறீர்கள். மன்மோகன்சிங் வந்த போது இளங்கோவன் தரப்பைச் சேர்ந்தவர்கள் தனியே அவரைச் சந்தித்தார்களே!

"அவரைப் பல தலைவர்கள் தனியே சந்தித்தார்கள். கட்சியை வெற்றிப் பாதையில் கொண்டு செல்ல ஒவ்வொருவரும் அவரவர் யோசனைகளைத் தனித்தனியே தெரிவித்தார்களே தவிர, யாரைப் பற்றியும் புகார் கூறுவதற்காக அல்ல.

மன்மோகன் சிங் சென்னைக்கு வருவதற்கு முன்னால், குறிப்பிட்ட காங்கிரஸ் தலைவர்களை, அதுவும் முன்னாள் த.மா.கா.வினர், அழைத்துக் கூட்டம் போட்டீர்களே? அது சரியா?

"பத்திரிகையில் வந்த அடிப்படையில்லாச் செய்தி அது. எல்லோருக்கும் அழைப்பு விடப்பட்டது. முன்னாள் தலைவர்கள் கலந்து கொண்ட சாதாரணச் சந்திப்பு அது. ஊரிலிருந்தவர்கள் கலந்து கொண்டார்கள். தேர்தலை எதிர்நோக்கியிருக்கும் தருணத்தில் இது போன்ற சந்திப்புகள் பல நடக்கும். பல்வேறு கருத்துக்களைப் பேசி தெளிவுபடுத்திக் கொள்ள, தமிழக காங்கிரஸின் கருத்துக்களை மேலிடத்துக்குச் சொல்ல, இது போன்ற சந்திப்புகள் பயன்படும். மேலும் நான் தலைவரான பிறகு இதுவரை யாருடைய மனதையும் புண்படுத்தும் செயலில் ஈடுபட்டதும் கிடையாது, பேசியதும் கிடையாது.

இந்தக் கோஷ்டிப் பூசல் வேட்பாளர்களைத் தேர்ந்தெடுப்பதிலும் எதிரொலிக்க வாய்ப்பு இருக்கிறதே! அந்தச் சூழலில் உள்ளூர் கோஷ்டிப் பூசலில் தி.மு.க. அணிக்கு நீங்கள் சுமையாகிப் போகும் வாய்ப்பும் உள்ளதே! அதை எப்படி சமாளிப்பீர்கள்?

நான் தலைவரான பின்பு இதுவரை நடுநிலையாகத் தான் நடந்து வந்திருக்கிறேன். அதே போல் என்னுடைய பங்களிப்பைப் பொறுத்தவரை மனசாட்சியுடன் வெற்றி வாய்ப்பைக் கணக்கில் கொண்டு, எந்தவித பாரபட்சமும் இல்லாமல் வேட்பாளர்களைத் தேர்ந்தெடுக்க மேலிடத்துக்கு உதவி புரிவேன். இறுதி முடிவு அவர்கள் கையில்தான்.

சந்திப்பு: ப்ரியன்

மீண்டும் மறுபதிப்பு!

கல்கி அவர்களின் காலத்தால் அழியாத நாவல்கள்!!

கையடக்கப் பதிப்பாக மிகக் குறைந்த விலையில்!!!

பொன்னியின் செல்வன்

6 தொகுதிகள் 2728 பக்கங்கள் விலை ரூ. 390.00 சலுகை விலை ரூ.195.00

சிவகாமியின் சபதம்

4 தொகுதிகள் 1242 பக்கங்கள்

விலை ரூ. 200.00

சலுகை விலை ரூ. 135.00

பார்த்திபன் கனவு

424 பக்கங்கள்

விலை ரூ. 49.00

சலுகை விலை ரூ. 45.00

தனித்தனியாகத் தபால் மூலம் பெற பொன்னியின் செல்வன்; சிவகாமியின் சபதம்; அலை ஓசை; பார்த்திபன் கனவு நூல்களுக்கான தபால் மற்றும் கட்டுச் செலவு முறையே ரூ.35, ரூ.25, ரூ.25, ரூ.10 ஆகும்.

அலை ஓசை

4 தொகுதிகள்

1064 பக்கங்கள்

விலை ரூ. 175.00

சலுகை விலை ரூ. 120.00

நான்கு நூல்களையும் ஒரே சமயத்தில் தபால் மூலம் பெறுவது மிகச் சிக்கனமானது. அதாவது நான்கு நூல்களின் சலுகை விலை ரூ. 495.00, தபால் மற்றும் கட்டுச் செலவு ரூ.65.00 சேர்த்து ரூ.**560.00** மட்டும் தபால்காரரிடம் செலுத்தி நூல்களைப் பெறலாம்.



தபாலில் பெற கடிதம் எழுத வேண்டிய முகவரி
வர்த்தமானன் பதிப்பகம்
40, சரோஜினி தெரு.
தியாகராய நகர், சென்னை 17.
(உஸ்மான் ரோடு கீதாஞ்சலி ஹோட்டல் அருகில்)

நேரில்.

சென்னை **வர்த்தமானன்** (✆ : 24350561) ;
கோவை **விஜயா** (✆ : 2382614 / 2394614);
சேலம் **சந்திரா** (✆ : 2265635);
தருமபுரி **திருவள்ளுவர்** (✆ : 268769);
திருச்சி **புக் ஹவுஸ்** (✆ : 2705098 /2764198);
மதுரை **செல்வி** (✆ : 2343510 / 2345169);
நெல்லை **அருள் நந்தி சிவம்** (✆ : 2339692 / 3100710)

ஆகிய இடங்களில் சலுகை விலையினை மட்டும் ரொக்கமாகச் செலுத்தி உடனே பெற்றுக் கொள்ளலாம்.

நேரம் காலை 10.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை (உணவு இடைவேளையின்றி) ஞாயிறு விடுமுறை

பொய் சொல்லுவது பிடிக்கும்!

பத்து கிலோ எடையைக் குறைத்திருக்கிறார் பார்த்திபன்.

"'கண்ணாடிப் பூக்கள்' படத்திற்காக என்னைத் தயாரித்திருக்கிறேன். என்றாலும், எழுத்தாளன் நலங்கிள்ளி எனக்குள்ளிலிருந்து வெளியேற மறுக்கிறான். அவனது தார்மீகக் கோபமும், கேள்விகளும் இன்னும் எனக்குள் எரிந்து கொண்டிருக்கின்றன" என்று தென்றல் பட நாயகனைப் பற்றி பிரமிக்கிறார். அந்தப் பாத்திரத்தின் பாதிப்பிலிருந்து மீள்வதற்காக 'மௌனத்தின் ஓசை' என்ற ஜென் தத்துவத்தின் தமிழ்மொழி பெயர்ப்பைப் படித்துக் கொண்டிருந்தவரிடம், "நண்பர்களுக்கு நீங்கள் கொடுத்தனுப்பிய புத்தாண்டுப் பரிசில் 'கேள்விகளை வெறுக்கிறேன்' என அச்சடித்து அனுப்பியிருந்தீர்களே? அப்படியென்ன சுசப்பான அனுபவம்?" என்று பேச்சுக் கொடுத்தோம்.

"பொய் சொல்வது பிடிக்கும். ஆனால் சொல்வது நானாக இருக்க வேண்டும். கேள்விகள் கேட்பதும் எனக்குப் பிடிக்கும். கேள்விகளைக் கேட்பது நானாக இருக்க வேண்டும்" - தனது பாணியில் பதில் சொன்ன பார்த்திபன், "எந்தச் சமயத்தில் என்னைக் கேள்விகளால் துளைத்து எடுத்திருக்க வேண்டுமோ, அந்தச் சமயத்தில் என்னிடம் எந்தக் கேள்வியும் கேட்காத பத்திரிகை நண்பர்களையும், அவர்கள் என் மீது வைத்திருக்கும் நம்பிக்கையையும் எண்ணி கர்வம் கொள்கிறேன்" என்று கசப்பான தருணங்களைச் சூசகமாய்ச் சுட்டிக்காட்டி விட்டுச் சகஜமாகி விடுகிறார்.

ஹவுஸ்ஃபுல், அழகி படங்களில் பாத்திரமாக மட்டும் தன்னை வெளிப்படுத்திய பார்த்திபன், அவருக்கென்று அடிக்கடி உருவாக்கப்படும் பிராண்டெட் கதைகளிலும் இன்னொரு பக்கம் ஜமாய்க்கிறார். இதற்குத் தற்போதைய உதாரணம், வெற்றிகரமாக ஓடிக் கொண்டிருக்கும் 'காதல் கிறுக்கன்' படம்.

முரண்பட்ட இவரின் இருவேறு முகங்களையும் ரசிகர்கள் ஏற்றுக் கொள்கிறார்கள்.

"தமிழ் ரசிகர்கள் ரஜினியிடம் சில விஷயங்களை எதிர்பார்ப்பார்





■ 'தென்றல்' படத்தில்

கள். அவருடைய உயரம் வேறு. அது போலத்தான் என்னிடமும் சில வற்றை எதிர்பார்க்கிறார்கள். இன்னொரு பக்கம் அழகி போன்ற ஆஃப் பீட் படங்களில், ரசிகர்கள் என்னைப் பாத்திரமாக ஏற்றுக் கொள்வதற்கு முதல் காரணம், அந்தப் பாத்திரத்தை முழுமையாகப் படைத்த இயக்குனரின் திறமை. இரண்டாவது, தொடக்கம் முதலே நான் தீர்மானித்துக் கொண்ட பாதை. 'சுகமான சுமைகள்' தோற்ற பிறகு, 'உள்ளே வெளியே' பொழுது போக்குப் படம் தந்தேன். அதற்கு அமோக வரவேற்பு. ஆனால் இந்தப் பாணியிலேயே நான் தொடர்ந்து எடுத்திருந்தால், என்னிடம் அதைத் தான் எதிர்பார்ப்பார்கள். அந்தத் தவறை நான் செய்யவில்லை. என்னைப் போன்ற கமர்ஷியல் நடிகன், தரமான படங்களில் நடிக்கிற போது, அதற்கு மேலும் வியாபார மதிப்பு கூடி விடுவதில் எனக்கு ஆத்ம திருப்தி" என்கிறார்.

இப்போது இவர் நடித்துக் கொண்டிருக்கும் 'கண்ணாடிப் பூக்கள்' படம், ஜெயராமும், சுஹாசினியும் நடித்து உள்ளூர் சந்தை, உலகப் பட விழாக்கள் இரண்டையும் ஒருசேரக் கலக்கி விட்டு வந்திருக்கும் 'என்டே வீடும் அப்பூண்டும்' என்ற மலையாளப் படத்தின் தமிழ்ப் பதிப்பு. தென்றலில் கோபமான இளம் எழுத்தாளன் என்றால், இதில் தளர்ந்து போன கிழவன்.

" 'அழகி'யில் தங்கர்பச்சானுடன் தகராறு என்று பேச்சு வந்ததே? மீண்டும் அவருடன் இணைந்த மர்மம் என்ன?" என்றால், 'அழகி வெளியாகி ஐம்பது நாட்கள் வெற்றி கரமாக ஓடிய பிறகு சின்னத் தகராறு" என்கிறார்.

"முதலில் உங்கள் ஆர். பார்த்திபன் நடிக்கும் என்று தான் பத்திரிகைகளில் விளம்பரப்படுத்தினார்கள். ஐம்பது நாட்களுக்குப் பிறகு விளம்பரத்தில் என் பெயர் இல்லை. அதற்காகத்தான் தகராறு செய்தேன். மற்றபடி தங்கர்பச்சான் தகுதியும், தன்மானமும் மிகுந்த கலைஞன். எங்கள் இருவருக்குமே குழாயடிச் சண்டைகளில் நம்பிக்கையில்லை" என்று வாய் விட்டுச் சிரித்த நடிகர் பார்த்திபனிடம், "எங்கே இயக்குனர் பார்த்திபன்? ஆளையே காணோம்?" என்றோம்.

"இரண்டாயிரத்து நான்கு, ஏப்ரல் பதினான்காம் தேதி அவரை நீங்கள் நிச்சயம் சந்திக்கலாம்" என்கிறார். அன்று அவர் இயக்கப் போகும் புதிய படம் ரிலீஸ்!

பார்த்திபனின் 'கிறுக்கல்கள்' கவிதை நூலுக்குப் பிறகு வரப்போகும் புத்தக ரிலீஸ்? 'சும்மா'.

சந்திப்பு, படம் : ஜெய்

நடக்குமென்பார்; நடக்கும்!

மேஷம்: குழப்பங்கள், பிரச்னைகள் விலகும். தெய்வீக ஈடுபாடு, தெய்வபலம் ஏற்படும். புதிய பதவி கிடைக்கும். கூட்டுத் தொழிலில் லாபம் உண்டு. பெண்களுக்கு அனுகூலமான வாரம்.

ரிஷபம்: புதியவர்கள் அறிமுகமும், அனுகூலமும் கிட்டும். சுமூகமான உத்தி யோகச் சூழ்நிலை நிலவும். வியாபாரத்தில் சாதகமான திருப்பம் ஏற்படும். குடும்பத்தில் செலவு, பிரச்னை ஏற்பட்டு விலகும். பெண்களுக்குப் பொருள், ஆபரணச் சேர்க்கை ஏற்படும்.



நடிகை சுஷ்மிதா சென்னுக்கு (விருச்சிகம்) எதிர்பார்த்த உதவிகள் கிடைக்குமாம்!

மிதுனம்: கல்வி, ஆராய்ச்சிகளில் உள்ள வர்களுக்கு முன்னேற்றம் உண்டு. உத்தி யோகத்தில் நிதானம் தேவை, வாக்குவாதம் கூடாது. சுயதொழில், வியாபாரம் முன்னேறும். ஆபரணத் தொழிலில் எதிர் பாராத லாபம் ஏற்படும். பெண்களுக்கு உற்சாகமான வாரம்.

கடகம்: குடும்பத்தில் ஒற்றுமை நிலவும். சக ஊழியரின் ஆதரவும், மேலதிகாரிகளின் பாராட்டும் கிட்டும். பழைய கடன்கள் நீங்கி, கையிருப்பு கூடும். கலைத்துறை யிலிருப்பவர்கள் முன்னேற்றம் காண் பார்கள். மாணவர்களுக்கு அனுகூலமான வாரம்.

சிம்மம்: துணிவு, தன்னம்பிக்கை கூடும். உத்தியோக விஷயங்களில் எச்சரிக்கை தேவை. வெளிநாட்டுத் தொடர்பு அனு கூலம் தரும். அரசியல்வாதிகளுக்கு அனு கூலமான வாரம். பெண்களுக்கு உறவினர் வருகையால் ஆதரவு பெருகும்.

கன்னி: புதியவர்கள் அறிமுகம் அனு கூலம் தரும். உத்தியோக விஷயங்களில் தாமதம், தடைகள் ஏற்படும். வீண் அலைச்சல், பண நெருக்கடி வர வாய்ப் பிருக்கிறது. குடும்பத்தில் சிறு சலசலப்பு ஏற்பட்டு விலகும். பிரிந்தவர்கள் ஒன்று சேர்வதால், மகிழ்ச்சி கூடும்.

துலாம்: துணிவும் நம்பிக்கையும் கூடும். உத்தியோக பயணங்கள் லாபகரமாக அமையும். புதிய தொழில்கள் தொடங்க வாய்ப்பு உண்டு. அரசியல்வாதிகளுக்குப் புதிய திருப்பம் ஏற்படலாம். ஸ்பெகு லேஷன் துறையிலிருப்பவர்களுக்கு லாபம் கிடைக்கும்.

விருச்சிகம்: எடுத்த காரியங் களில் வெற்றி கிடைக்கும். புதிய பொறுப்பு, பதவி உயர்வு, இடமாற் றம் ஏற்படும். எதிர்பார்த்த உத விகள் கிடைக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி, அமைதி நிலவும். கோர்ட், வழக்கு, விவகாரங்கள் அனுகூலமா கும்.


தனுசு: பண நெருக்கடி விலகி, சுபிட் சம் உண்டாகும். உத்தியோகத்தில் முன் னேற்றமும் அதிர்ஷ்டமும் ஏற்படும். வியா பாரத்தில் மேன்மையும் ஆதாயமும் கிட்டும். அரசாங்க ஆதரவு கிடைக்கும். திருமணமாகாதவர்களுக்கு யோகம் கூடி வரும்.

மகரம்: மறைமுக, நேர்முக எதிர்ப்புகள் நீங்கும். புதிய உத்தியோக முயற்சிகள் வெற்றி பெறும். வரவேண்டிய பணம் வந்து, கடன்கள் குறையும். குடும்பத்தில் சுபகாரி யங்கள் நிகழும். பெண்களுக்கு அனு கூலமான வாரம்.

கும்பம்: தெய்வீக ஈடுபாடு, ஸ்தல யாத் திரை கூடும். உத்தியோகத்தில் தாமதமாகி வந்த கோரிக்கைகள் நிறைவேறும். எதிர் பார்த்த உதவிகள் கிடைத்து கையிருப்பு அதி கரிக்கும். திருமண வாய்ப்புகள் கூடி வரும். பெண்களுக்கு ஆரோக்கியம், ஆதரவு கூடும்.

மீனம்: புதிதாக வரும் அறிமுகங்களில் எச்சரிக்கை தேவை. புதிய உத்தியோக முயற்சி பலன் தரும். கொடுக்கல் வாங்கல் சுமூகமாக இருக்கும். குடும்பத்தில் உற்சாகச் சூழ்நிலை நிலவும். மாணவர்களுக்கு ஏற்றமான வாரம்.


கல்கி
அடுத்த இதழில்...
கொடி கொடி மின்னல்கள்
பூஞ்சிட்டு நடையில் ராஜேஷ்குமார் எழுதும்
புதிய தொடர்கதை ஆரம்பம்!



சார்க் திருப்புமுனை!

"நீங்கள் இன்று அழைத்தால் நாளையே வந்து விடுவேன் பேச்சுவார்த்தைக்கு" என்கிறார் முஷாரஃப்! "எங்கள் கட்டுப்பாட்டில் உள்ள தேசத்தில், பயங்கரவாதம் பதுங்கவும் வளரவும் அனுமதிக்கவே மாட்டோம்" என்று சூளுரைக்கிறார்! இஸ்லாமாபாத்தில் நடந்த சார்க் உச்சி மாநாடு, இந்தோ - பாக். நல்லுறவு மாநாடாக மாறிவிட்டது. இத்தனைக்கும் இங்கிருந்து புறப்படும் வரையில் பிரதமர் வாஜ்பாயும் அதிபர் முஷாரஃப்பும் தனியே சந்தித்து உரையாடப் போவதில்லை என்றே பறைசாற்றப்பட்டது. ஆனால், சென்ற இடத்தில் வாஜ்பாயின் நல்லுணர்வுக்கு வலை வீசப்பட்டிருக்கிறது. அவரும் மகிழ்ச்சியோடு பாகிஸ்தான் நீட்டிய நேசக் கரத்தைப் பற்றியிருக்கிறார்.

நமது பிரதமர் அயலுறவுத் துறையில் வல்லுனர்தான். எனினும் இந்தத் திடீர் நட்புச் சூழலுக்கு அவரது முயற்சி காரணம் அல்ல. பாக். எடுத்து வைத்த முதல் அடியே காரணம்.


தேர்தல் நெருங்குகிற வேளையில் பா.ஜ.க.வின் இமேஜை உயர்த்த உதவும் என்கிற நோக்குடன், பாக். நீட்டிய கரத்தை பிரதமர் உடனே பற்றியிருக்கக் கூடும். ஹிந்து ஆதரவுக் கட்சியான பா.ஜ.க ஒரு முஸ்லிம் நாட்டுடன் நட்பு கொள்ளத் தயங்காது என்பதைக் காண்பிக்கவும் அவர் விழைந்திருக்கலாம். நீண்ட காலச் சிக்கலாக நாட்டின் வரலாற்றில் விளங்கி வரும் இந்தோ - பாக். பிரச்னையைத் தீர்வு நோக்கி திசை திருப்பியதாகச் சாதனைப் பட்டியலில் குறிப்பிட்டு, பிரசாரத்துக்குப் பயன்படுத்தலாம் என்கிற அரசியல் கண்ணோட்டமும்



கல்கி

2004 ஜனவரி 18
சுபானு தை 4
மலர் : 62
இதழ் : 25

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.



இருக்கக்கூடும்.

எவ்வாறாயினும், எடுக்கப்பட்டுள்ள முடிவும் நடவடிக்கைகளும் வரவேற்கப்பட வேண்டியவை என்பதில் சந்தேகம் இல்லை.


ஆனால், இந்தத் திருப்புமுனையின் தொடர்ச்சியாக பிப்ரவரி மாதம் பேச்சுவார்த்தைகள் நடக்கும்போது, சில முக்கியமான விஷயங்களை இந்தியா கவனத்தில் கொள்ள வேண்டும்:

முஷாரஃப், பாகிஸ்தானின் ராணுவ அதிபர். மக்கள் தேர்வு செய்த தலைவர் என அவரை ஏற்க முடியாது. ஆகவே, முஷாரஃபின் வார்த்தையே இந்தப் பேச்சுவார்த்தைகளில் இறுதி வார்த்தை என்று நாம் கொண்டுவிட முடியாது. பாகிஸ்தானின் இன்றைய பிரதமருக்குச் சமமான முக்கியத்துவம் தந்து, ஒவ்வொரு கட்டத்திலும் அவர் ஒப்புதலையும் பெற வேண்டும்.

இன்று தொடங்கி, காஷ்மீர் மற்றும் இதர இந்தோ - பாகிஸ்தான் எல்லைப் பகுதிகளில் பயங்கரவாதம் தலைதூக்குகிறதா? கட்டுப்படுகிறதா? குறைகிறதா? என்பதைக் கண்காணிக்க வேண்டும்.

பாகிஸ்தான், உள்நாட்டில் சில பயங்கரவாத அமைப்புகளுக்குத் தடை விதித்து, வெகு விரைவிலேயே அத்தடைகளை ரத்தும் செய்தது. இப்போது மீண்டும் தடைகள் அமலுக்கு வருகின்றனவா? சட்டங்கள் கடுமையாகப் பிரயோகிக்கப்படுகின்றனவா என்பதைக் கண்காணிக்க வேண்டும். தமது பேரிலேயே பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்திக் கொல்ல முயன்றதால், முஷாரஃப் சற்று ஆடிப் போயிருக்கிறார். பயங்கரவாத அமைப்புகளைத் தடை செய்ய அவர் மனத்தளவில் தயாராக இருப்பார். இந் நிலையை இந்தியா தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

சார்க் மாநாட்டில் இப்படியொரு புரட்சிகரமான திருப்பம் நிகழ்ந்த பிறகும், நமது பாதுகாப்பு அமைச்சரும் உள்துறை அமைச்சரும் பேசா மடந்தையராக இருக்கின்றனர். பாகிஸ்தானின் முனைப்புகளை அவர்கள் வரவேற்பதற்கான அறிகுறிகள் ஏதும் தெரியவில்லை. இந்த அமைச்சர்களின் உற்சாகமான பங்கேற்பு இல்லாமல் இந்தோ - பாக். உறவுகள் பலப்பட முடியாது. எனவே இவ் விஷயத்தில் தமது சக அமைச்சர்களுக்கு நம்பிக்கை ஊட்டி, அரவணைத்துத் தம்முடன் அழைத்துச் செல்லும் பொறுப்பு வாஜ்பாய்க்கு இருக்கிறது. இன்னும்



சொல்லப் போனால், சர்வகட்சித் தலைவர்களின் ஆலோசனையும் பங்கேற்பும் பெற்று இயங்குவதுதான் அறிவுடைமை. இந்தோ - பாக். உறவுப் பிரச்னை என்பது, இரு அரசுகளிடையேயான பிரச்னை மட்டும் அல்ல. அது இரு தேசத்து மக்களுக்கிடையேயான சிக்கல். உணர்வு ரீதியான சிக்கல்.

இந்தோ - பாக். பிரச்னையின் மையமே காஷ்மீர்தான். காஷ்மீர் பிரச்னை குறித்து விவாதிப்போம் என இரு நாடுகளும் ஒப்புக் கொண்டிருப்பது பெரிய முன்னேற்றமே. இதுநாள் வரை 'முதலில் எல்லை கடந்த பயங்கரவாதத்தைக் கட்டுப்படுத்துங்கள், அப்புறம் பேச்சுவார்த்தை நடத்தலாம்' என்று இந்திய அரசு கூறி வந்தது. இப்போது, 'பயங்கரவாதத்தைக் கட்டுப்படுத்துகிறோம்' என்று சொல்லாவிட்டாலும், 'எங்கள் பூமியில் பயங்கரவாதிகள் இயங்க அனுமதிக்க மாட்டோம்' என்கிற அளவில் பாகிஸ்தான் தரப்பு கூறியிருக்கிறது. கூடவே 'ஒரு கட்டத்தில் காஷ்மீர் மக்களின் நம்பிக்கையைப் பெற்றுச் செயல்பட வேண்டிய அவசியம் ஏற்படும்' என்றும் முஷாரஃப் தெளிவாகப் பேசியிருக்கிறார்.

நமது அரசும், காஷ்மீர் பிரச்னையை ஒரு கௌரவப் பிரச்னையாக மட்டுமே அணுகாமல், துன்பத்தில் உழலும் காஷ்மீர் மக்களின் பிரச்னையாகக் கருதி, தீர்வைச் சிந்திக்க வேண்டும். காஷ்மீரில் அமைதியை உத்தரவாதம் செய்யாத எந்தவொரு இந்தோ - பாக். ஒப்பந்தமும் அர்த்தமற்றதாகத்தான் அமையும்.

இவையெல்லாம் செய்யப்படுகிற வேளையில், இந்தோ - பாக் எல்லையில் ராணுவ நடமாட்டத்தையும் பாதுகாப்பையும் குறைத்துவிடலாகாது. பரஸ்பர நம்பிக்கையைப் பெறும் முயற்சியில், பாதுகாப்பில் கோட்டை விட்டு விடக் கூடாது. பயங்கரவாதம் கட்டு மீறியதால் தான், பாகிஸ்தானே மனம் மாறி, பேச்சு வார்த்தைக்கு இறங்கி வந்துள்ளது என்பதை ஞாபகம் வைத்துக் கொள்ள வேண்டும். அந்தப் பயங்கரவாதம் இன்னும் ஒடுக்கப்படவில்லை என்பது கசப்பான உண்மை. அதனை இரு நாடுகளும் இணைந்து ஒடுக்குவதற்கான செயல்திட்டத்தை இந்தோ - பாக். ஒப்பந்தத்தின் முக்கிய அம்சமாக அறிவித்து, விரிவான வழிமுறைகளைப் பட்டியலிட்டால், சார்க் திருப்புமுனை ஆசிய கண்டத்தின் அமைதித் திருப்புமுனைக்கே வழிகோலிய பெருமையைப் பெற்றுவிடும். ○

'பிட்'டா படிங்க!



பத்து கவிதைத் தொகுப்புகளை வெளியிட்டிருக்கிற அறிவுமதி, புதிய பார்வை, சுபமங்களா போன்ற பத்திரிகைகளில் தாம் எழுதிய சிறுகதைகளை 'வெள்ளைத் தீ' என்ற தலைப்பில் தொகுப்பாக்கியிருக்கிறார். இது இவரது முதல் சிறு கதைத் தொகுதி.



நியூட்டனின் மூன்றாவது விதி' என்ற நா. முத்துக்குமாரின் கவிதைக்காக சர்வதேச கவிஞர்கள் அமைப்பு, 'சிறந்த இந்தியக் கவிஞர்' என்ற பட்டத்தை அவருக்கு அளித்திருக்கிறது. இந்தச் சந்தோஷத்தில் 'சில்க் சிட்டி' என்ற ஆங்கில நாவலை எழுத ஆரம்பித்து விட்டார் அவர். நான்கு தலைமுறை கதையாம் இது.




இந்த வருட புத்தகக் கண்காட்சிக்கு 'ஒன்று', 'இரண்டு', 'தெப்பக் கட்டை', 'காதல் பிசாசே' என யுகபாரதியின் நான்கு புத்தகங்கள் வெளிவருகின்றன.



'புத்தகம்', 'இப்படியும் இருக்கலாம்' - என்ற இரண்டுப் புத்தகங்களை சமீபத்தில் வெளியிட்டார் சினேகன். வெளியீட்டு விழாவுக்குப் பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரத்தின் மனைவி தலைமை தாங்கினார். கணவரின் மறைவுக்குப் பிறகு முதன்முதலாக அவர் பங்கேற்ற நிகழ்ச்சி இது!



'பவர்' படத்தில் பெண் விடுதலையைப் பற்றி இரண்டு பவர்ஃபுல் பாடல்களை எழுதியிருக்கிறார் பழனிபாரதி. இந்தப் பாடலை ஹிந்தியில் மொழி பெயர்த்துக் கேட்ட கவிஞர் ஜாவித் அக்தர், 'என்ன அருமையான வரிகள்பா!' என்று பாராட்டியிருக்கிறார்.



பா.விஜயின் 'உடைந்த நிலாக்கள்' புத்தகம் இது வரை பன்னிரண்டாயிரம் பிரதிகள் விற்றிருக்கிறதாம். (அம்மாடியோவ்) அதன் இரண்டாவது பாகத்தை விரைவில் வெளியிட இருக்கிறார்.



கானா பாடல்களைப் பற்றி எம்.ஃபில் ஆய்வு செய்திருக்கிற கபிலன், அதே தலைப்பில் முனைவர் பட்ட ஆய்வும் செய்யப் போகிறார்.

- ஏக்ஜி



பூச்செண்டுக்கு மேக்கப்பா?

கன்னட சினிமாவின் தற்போதைய முன்னணி தேவதைகள் மூவரில் ஒருவர் ரம்யா! சூப்பர் ஹிட் படங்களை அள்ளிக் கொடுக்கும் இவர், தமிழில் குத்தப் போகிறார். அதாங்க 'குத்து' படத்தில் நடிக்கிறார். பெங்களூர் தாஜ் வெஸ்ட் எண்ட் ஹோட்டலின் பியூட்டி பார்லரில் அவரைச் சந்தித்தோம். பூச்செண்டுக்கெல்லாம் எதுக்கு மேக்கப் என்று கேட்க நினைத்ததை மனத்திலேயே வைத்துவிட்டு ஆரம்பித்தோம்.

உங்கள் பெயர் ஸ்பந்தனாவா? ரம்யாவா?

இயற்பெயர் ஸ்பந்தனா! ஆனா பர்வதம்மா ராஜ்குமார், ரம்யான்னு பெயர் வச்சிட்டா லக்னு சொல்லி வச்சாங்க. கன்னடத்தில் ஸ்பந்தனா தான்.



ஏற்கெனவே ரம்யா கிருஷ்ணன், தெண்டுல்கர் கணக்கா அடிச்சு நொறுக்கிட்டிருக்காங்களே?

நோ... நோ... அவங்க, ஐட்டம் ஸாங் பண்றாங்க. இப்ப எங்க மெயின் ரோல் பண்றாங்க?

தமிழ் தெரியுமா?

ஹலோ... படிச்சது ஊட்டி ஹில்டால் கான்வென்டில்! சூப்பரா கலாய்ப்பேன்!

தமிழ் சினிமாவில் யாருடன் நடிக்க இஷ்டம்?

சூர்யா, விக்ரம், தனுஷ். அதுவும் தனுஷ் ஆடுகிற ஆட்டத்திற்கு நான் அடிமை!

'மன்மத ராசா' மாதிரி 'குத்து'வில் ஏதேனும் உண்டா?

'சாப்பிட வாடா'ன்னு ஒரு ஸாங். நானும் சிம்பும் சும்மா கலக்கியிருக்கிறோம். அது மட்டுமல்ல, 'நிபுணா நிபுணா'ன்னு வெரி ஹாட் ஸாங் இருக்கு. தமிழ்நாட்டு இளசுங்க மொத்தமும் மந்திரிச்சு விட்ட கோழி மாதிரி ஆகப் போறாங்க! சாலஞ்ச்!!

நெடுநாளைய கனவு?

மணி ரத்னம் படத்துல நடிக்கணும். அதுதான் என்னுடைய கடைசி படம். தெலுங்குப் படத்தில் சுஹாசினி எனக்கு அம்மாவாக நடிச்சிருக்காங்க. ரொம்ப இனிமையான பெண். கொஞ்சம் கூட அலட்டலோ கர்வமோ கிடையாது.

(கண்டிப்பா மணி ரத்னம் படம் கிடைக்குங்க. அம்மா கொஞ்சம்கூடவா சிபாரிசு பண்ணாம இருப்பாங்க?) கனவு மெய்பட வேண்டும்!

- லதா சேகர்

திரை வணக்கம்!

'இருபத்தாறு ஹீரோக்கள், பதினோரு ஹீரோயின்களை வைத்து ஒரு படம் எடுக்க முடியுமா?' என்று வியப்பவர்களுக்கு 'எல்.ஓ.சி. கார்கில்' படம்தான் பதில்.

சஞ்சய்தத், சுனில் ஷெட்டி, அக்ஷய் கன்னா, அபிஷேக் பச்சன், அஜய் தேவ்கான், நாகர்ஜுனா என்று ஹீரோக்கணக்கு தொடங்கி, கரீனாகபூர், ராணி முகர்ஜி, மகிமா சௌத்ரி, ஈஷா தியோல், நர்மதா ஷிரோக்கர், இஷா கோபிகர், பிரியா கில் என்று செல்கிறது ஹீரோயின் கணக்கு.

முப்பத்தைந்து கோடி ரூபாய் செலவில் இப்படியொரு மெகா படத்தை (மூன்றரை மணி நேரம்) எடுத்திருக்கிறார், பிரபல இந்தி டைரக்டரும் தயாரிப்பாளருமான ஜே.பி. தத்தா. கார்கில் போரின்போது நம் தேசத்துக்காகத் தங்கள் இன்னுயிரைத் தியாகம் செய்த ராணுவத்தினரது உண்மைக் கதைகளின் அடிப்படையில் எடுக்கப்பட்டிருக்கிறது இந்தப் படம்.

''கார்கில் ஹீரோக்களுக்கு நான் செலுத்தி இருக்கும் திரை வணக்கம் இது'' என்று பெருமை பொங்கச் சொல்கிறார் டைரக்டர் ஜே.பி. தத்தா.

இந்தப் படம் எடுக்க இவர்பட்ட கஷ்டங்கள் கொஞ்ச நஞ்சமில்லை. உறைய வைக்கும் குளிர் கொண்ட காஷ்மீரின் லடாக் பகுதிக்குப் போய், சுமார் எண்பது நாட்கள் நேரடியாகப் படம் பிடித்திருக்கிறார். பகலிலேயே கடும் குளிராக இருந்தது என்றால், இரவில் கேட்க வேண்டுமா என்ன?

உயிர்த்தியாகம் செய்து, அரசாங்கத்தால் வீர சாகச விருது வழங்கி கௌரவிக்கப்பட்டவர்கள், மற்றும் சாகசம் புரிந்து, உயிரோடு இருப்பவர்கள் என்று சிலரின் நிஜக் கதைகளை ஒருங்கிணைத்து, சில சென்டிமெண்ட்களையும் கலந்து, அவர்களின் குடும்ப உறவுகளை இணைத்து, இந்தப் படத்தை உருவாக்கி இருக்கிறார் தத்தா.

இந்தியா - பாக் போரின் அடிப்படையில் 1997ல் இவர் எடுத்த 'பார்டர்' சக்கைப்போடு போட்டது. தத்தா சந்தித்த பல ராணுவ வீரர்கள், 'பார்டர்' படம்தான் தங்களை ராணுவத்தில் சேரத் தூண்டியது என்று சொல்லக் கேட்டு, நெகிழ்ந்து போய் விட்டார் தத்தா.

"ஹாலிவுட்டில் போர்ப் பின்னணி கொண்ட படங்களை மிகவும்



பிரம்மாண்டமான முறையில் எடுப்பார்கள். அவர்களைப் போல நம்மால் எடுக்க முடியாது. ஆனால், நமக்குள்ள வாய்ப்புகளை, வசதிகளை முழுமையாகப் பயன்படுத்திக் கொண்டு, இந்திய சினிமா உலகத்தில் பேசக் கூடிய படமாக ஒன்று எடுக்க நான் விரும்பினேன். அதுதான் என்னை இந்தப் படம் எடுக்கத் தூண்டியது. ராணுவத்தினர் பயன்படுத்தும் நிஜ ஆயுதங்களையே, ஷூட்டிங்கின் போதும் பயன்படுத்தினோம். இதற்காக, நடிகர்களுக்கு, பிரத்யேகமாய் துப்பாக்கிகளைக் கையாளப் பயிற்சி அளித்தோம். எங்கள் உழைப்புக்கு நல்ல பலன் கிடைத்துள்ளது" என்றார் தத்தா.

கார்கில் பகுதியில் உள்ள பாயிண்ட் 5140 என்ற இடத்தை ஆக்கிரமித்துக் கொண்ட பாக். ஊடுருவல்காரர்களுடன் தீரமுடன் போரிட்டு மரண







மடைந்தவர் கேப்டன் விக்ரம் பாட்ரா. எல்.ஓ.சி. கார்கில் படத்தில், கேப்டன் விக்ரம் பாட்ராவாக நடிப்பவர் அபிஷேக் பச்சன். "நான் விக்ரம் பாட்ராவின் உடன் பிறந்த இரட்டைச் சகோதரரைச் சந்தித்தேன். அது என் வாழ்வில் மறக்க முடியாத ஒரு சந்திப்பு. நான் படத்தில் கேப்டன் விக்ரமாக நடிக்கலாமேயொழிய, நிஜத்தில் அவர் செய்த பெரும் தியாகத்துக்குக் கண்ணீர் மல்க மரியாதை செலுத்துவது தவிர, வேறு எதும் செய்ய முடியவில்லை" என்று கண் கலங்குகிறார் அபிஷேக்.

"ஷூட்டிங்கிற்காக சில தினங்கள் அங்கே இருப்பதே நமக்கு இவ்வளவு கஷ்டமாக இருக்கிறதே, இங்கே ஆயிரக் கணக்கான வீரர்கள், நம் தேசத்தின் பாதுகாப்புக்காக மாதக் கணக்கில் இருக்கிறார்களே! அவர்கள் எவ்வளவு கிரேட்!" என்று மனம் பூரிக்கிறார் சஞ்சய்தத்.

கடும் குளிர் தாங்காமல், ஷூட்டிங்கிற்குச் சென்ற இரண்டுபேர் மரணமடைந்திருக்கிறார்கள்.

கார்கில் ஹீரோக்களின் காதல், மற்றும் குடும்ப விஷயங்களும் ஃப்ளாஷ்பேக்கில் சொல்லப்பட்டிருப்பது, யதார்த்தமாக இருக்கிறது. ஒவ்வொருவரும் நிஜமாகவே உயிரைக் கொடுத்து நடித்திருக்கிறார்கள்.

'பாரதப் பிரதமர், 'ஆபரேஷன் விஜய்' என்கிற வியூகத்தால் கார்கில் போரில் வெற்றி பெற்றதாக அறிவித்தார்' என்ற வாசகத்துடன் படம் முடிகிறது.

- மானஸா

எப்போதும் விஜயகாந்தின் கண்களில் நெருப்பு பறக்கும். இப்போது சாந்தமும் குளுமையும் கூடவே குடியேறித் தளும்பு கிறது. நடிப்பு, நடிகர் சங்கம், வீடு, மனைவி, குழந்தைகள், ரசிகர்கள் என எல்லாவற்றுக்கும் நேரம் ஒதுக்குவதாலோ என்னவோ, வேலைகள் அதிகமாகி வெயிட் குறைந்திருக்கிறார். மறுபடியும் ஒரு ஆக்ஷன் படம் செய்வார் போல, உடலில் இலேசாக முறுக்கும் இருக் கிறது.

எல்லாக் கேள்விகளுக்கும் யோசித்து கவனத்துடன் வருகிறது பதில்...

சினிமாத் துறைக்கு வந்து இருபத்தைந்து வருஷமாச்சு. நீங்க நடிச்ச இத்தனைப் படங் கள்ல உங்களுக்குத் திருப்தியா எத்தனை படம் பண்ணியிருப்பீங்க?

கதையைக் கேட்டுட்டுதான் நடிக்க ஒத்துக் கறேன். அதனால 'காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு'ங்கற மாதிரி எல்லாப் படமுமே எனக்கு நல்ல படம்தான். அந்தந்தக் கால கட் டத்துல வந்த என்னோட படங்கள் பேசப்



"நடிகை கிரண்ட்ட போய் அரசியலுக்கு வருவீங்களான்னு கேட்கறீங்க?"

"முதல்வர் நாற்காலிக்கு ஏன் ஆசைப்படக் கூடாது?"

-விஜயகாந்த் பேட்டி

பட்டதாகத்தான் இருக்கு. குறிப்பிட்டுச் சொல்ல முடியாத ஆக்ஷன் சென்டிமென்ட் கலந்த என்னோட பல படங்களை, மெய் மறந்து லயிக்கிற மாதிரி திருப்தியா பண்ணியிருக்கேன்.

படம் பார்க்கறது இளசுங்கன்னு ஆயிப் போச்சு. நிறைய இளம் ஹீரோக்கள் புதுசு புதுசா வந்துட்டிருக்காங்க...

ஒரு நிமிஷம். சினிமா கடல் மாதிரி. நிறையப் பேர் வருவாங்க. வரணும். வந்துட்டே இருக்கணும். அப்படி வந்ததுனாலதான் இன்னைக்கு உங்களுக்குப் பேட்டி கொடுக்க நான் கிடைச்சிருக்கேன். அதுக்காக இப்போதைய என் வயசை ஒப்பிட்டுப் பேசக் கூடாது. எனக்கான கதைகள்ல அவங்க நடிக்க முடியாது. அவங்க பண்றதை நான் ஏற்கெனவே பண்ணிட்டேன். இதைவிட இன்னைக்கு இருக்கிற பெரிய விஷயம், அவங்கவங்க மார்க்கெட்டைத் தக்க வச்சிக்கிறதுதான். அதனால யார் வேணாலும் வரலாம்.

இந்த இருபத்தைந்து வருஷத்துல சினிமாவுல என்ன சாதிச்சதா நினைக்கறீங்க?

இத்தனை வருஷம் ஃபீல்டுல இருக்கறதே சாதனைதான். என்னோட சாதனைகளை நானே சொல்றது, அவ்வளவு நல்லா இருக்காது. தமிழ் தவிர பிற மொழியில நடிக்கக் கூடாதுன்னு ஆரம்பத்திலிருந்தே ஒரு முடிவோட இருக்கேன். பல்வேறு அழைப்புகள் வந்தும் போகலை. சினிமாவுல தினம் தினம் புதுசா கத்துக்கறதுக்கான விஷயங்கள் நிறைய இருக்கு. ஒரு படத்துல நல்லா நடிச்சிருப்பேன். டப்பிங்ல கோட்டை விட்டுருவேன். அடுத்த படத்துல அதைச் சரிப்படுத்தலாம்னு நினைப்பேன். அதுல வேறொரு தப்பு வரும். அப்புறம் அடுத்த படம்... இப்படியே தான் போயிட்டு இருக்கு.



மதுரை ரைஸ் மில்லுல இருந்த விஜயராஜை, இன்றைய விஜயகாந்த் திரும்பிப் பார்ப்பாரா?

நிச்சயமா. வந்த வழியைத் திரும்பிப் பார்க்காம வாழ்க்கையில்லை. ஏதாவதொரு சின்ன நிகழ்ச்சி டமார்னு பழசைக் கிளறிவிட்டுட்டுப் போயிரும். நான் சென்னைக்கு வந்த சமயத்துல தி.நகர் அப்பு ஹவுஸ் பக்கம் ஒரு லாண்டரிக் கடையில தான் இருப்பேன். கிருஷ்ணன்ங்கறவரோட கடை அது. சில சமயம் கடையில அவரே இருக்க மாட்டாரு. கஸ்டமர்கள் வந்து கேட்கும்போது நானே துணியெல்லாம் எடுத்துக் கொடுத்திருக்கேன். ஏன், நம்ம கோடம்பாக்கம் ரோட்ல நடையா நடந்திருக்கேன். ஒவ்வொரு தெரு மண்ணுலயும் என் காலடித் தடம் பதிஞ்சிருக்கு. இப்ப கார்ல அந்த வழியா போகும் போது நான் நடந்த பாதச்சுவடு இந்த வழியில தான் கிடக்கும்னு மனசு தேடும். இப்பக் கொஞ்சம் வசதி வந்தாலும்கூட மனசளவுல அப்படியேதான் இருக்கேன். அப்ப கடையில போய் டீ குடிச்சுட்டு ஜாலியா கதையப் பேசிட்டு நிற்கற மாதிரி இப்பவும் அலையணும்னு ஆசையிருக்கு. ஆனா முடியலை.

ஷூட்டிங்கிற்கான கட்டணங்களை தமிழக அரசு உயர்த்தியிருக்கே...?

கட்டணம் ஜாஸ்தி தான். இந்தக் கட்டணங்கள் பெரிய பட்ஜெட் படங்களுக்குத் தாங்

கும். சின்ன படங்களுக்கு முடியாது. அதனால தான் பாண்டிச்சேரிக்கும், கேரளாவுக்கும் ஷூட்டிங்குக்குப் போக வேண்டியிருக்கு...

இது பற்றி முதல்வர்கிட்ட பேசியிருக்கலாமே?

முதல்வருக்கு சினிமா பற்றித் தெரியும். அதிகாரிகள்தான் இந்தக் கட்டண உயர்வுக்குக் காரணம்னு நினைக்கிறேன். சமீபத்துல ஒரு செய்தி படிச்சேன். பதினைஞ்சு நாளுக்கு முன்னாலேயே ஷூட்டிங்குக்கு அனுமதி வாங்கணும்னு சொல்லியிருக்காங்களாம். அது கஷ்டம். குறிப்பிட்ட அந்த நாள்ல நடிக்க வேண்டிய நடிகருக்கு உடல்நலமில்லாமப் போயிடுச்சுன்னு வையுங்க, அப்புறம் பதினைஞ்சு நாள் வரை காத்துட்டு இருக்க முடியுமா? இதையெல்லாம் பற்றிப் பேச, முதல்வரைச் சந்திக்க முயற்சி பண்ணிட்டு இருக்கோம்.

நடிகர் சங்கத்துல அடுத்த கட்டமா என்ன பண்ணப் போறீங்க?

நடிகர் சங்கத்துக்கு முதல்ல நிரந்தர வருமானம் வேணும். அதுக்காக ஐந்து மாடிக் கட்டடம் கட்டப் போறோம். இதை வாடகைக்கு விட்டு, கிடைக்கற வருமானத்துல நிறைய உதவி பண்ணணும். நலிந்த கலைஞர்கள் அதிகமா இருக்காங்க. அவங்களுக்கு சங்கம் ஏதாவது உதவணும். அதுக்கு மார்க்கெட்ல நாயகனாக இருக்கற நிரந்தரத் தலைவர் ஒருத்தர் தேவை. நான் நிரந்தரத் தலைவன் இல்லை. அந்தத் தலைவரை சங்க உறுப்பினர்கள்தான் தேர்ந்தெடுக்கணும்.

சிவாஜி மணிமண்டபம் என்னாச்சு?

அரசு இடம் கொடுத்திருக்கு. அந்த இடத்துல ஒரு ரோடு போகுது. அதுக்குப் பதிலா பொதுப்பணித்துறை வேறு ரோடு கொடுக்கணும். அதுக்குப் பிறகு மணி மண்டபக் குழு ஒண்ணு போட்டு, வேலையை ஆரம்பிக்க வேண்டியதுதான் பாக்கி. பொதுப்பணித் துறையின் அறிவிப்புக்குத்தான் காத்திருக்கோம்.

தமிழ் நடிகர்களில் முக்கால்வாசிப் பேருக்கு முதல்வர் நாற்காலி மீது கண் இருக்குன்னு ஒரு விமர்சனம் இருக்கே.


நான் பொதுவாகவே சொல்றேன். இது ஜனநாயக நாடுதானே, ஏன் ஆசைப்படக் கூடாது? எல்லோருக்கும் ஆசைப்பட உரிமையிருக்கு. ஒரு ஐ.ஏ.எஸ். ஆகணும், ஐ.பி.எஸ். ஆகணும்னு லட்சியத்தோட நிறையப் பேர் உழைக்கிறாங்க. ஆகறாங்க. அதே போலத்தான் இதுவும். இங்க எல்லோருக்கும் உரிமையிருக்கு. சினிமாக்காரங்க மட்டும் விதிவிலக்கா என்ன? இப்படியொரு விமர்சனத்தை வைக்கறவங்க யாருன்னு பார்த்தா, அவங்க பதவி ஆசை பிடிச்சவங்களாத்தான் இருப்பாங்க.

அரசியலுக்கு வருவேன் வருவேன்னு சொல்லிட்டு இருக்கீங்க? வரும்போது சொல்லலாமே... அடிக்கடி இதைப் பேசி மக்கள்கிட்ட எதிர்பார்ப்பை உண்டு பண்ணுறீங்களா?

இங்க பாருங்க, நான் சினிமாவுல ஹீரோ ஆவேன்னு நினைக்கக் கூடப் பார்க்கலை. அது எதிர்பார்க்காம நடந்தது. அதேபோல, ஒரு சூழ்நிலை வந்தால் அரசியலுக்கு வருவேன்னு சொன்னேன். ஆனா பத்திரிகைக்காரங்கதான் இந்தக் கேள்வியைக் கேட்டுக் கேட்டு ஊதி, பெரிசு பண்றீங்க. நடிகை கிரண் வடநாட்டுப் பொண்ணு. அந்தப் பொண்ணுகிட்டபோய் அரசியலுக்கு வருவீங்களான்னு கேட்கறீங்க. ஒவ்வொருத்தரையும் இப்படிக்கேட்டு, நீங்களாதான் தள்ளறீங்க. வரும்போது வருவேன்'னு ஒரு பேட்டியில சொன்னால், வேறொரு பத்திரிகை வேறொரு கேள்வி கேட்டுப் பெரிசுபடுத்தி போஸ்டர் ஒட்டுது. அப்புறம் சந்திக்க வர்ற எல்லா பத்திரிகைக்காரங்களும், இதே கேள்வியைக் கேட்க ஆரம்பிச்சிடறீங்க. நான் என்ன சொல்ல? உங்களாலதான் நான் கெடுக்கப்பட்டிருக்கேன்.

உங்களுக்கு ஆசையில்லைங்கறீங்களா?

உள்ளாட்சித் தேர்தல்ல எங்க மன்றத்து ஆட்கள் போட்டியிட்டாங்க. நான் அரசியலுக்கு வரணும்னு அவங்களுக்கு ஆசையிருக்கு. நான் நிறையப் படிக்கணும்னு நினைச்சேன். முடியலை. ரைஸ் மில்லுல இருந்த நான், இன்னைக்கு நடிகனானது எதிர்பாராமல்தான். இதுவும் எதிர்பாராம நடந்தா நான் என்ன பண்ணமுடியும்?



- செ. ஏக்நாத்

படங்கள்: ஸ்ரீஹரி

அட்டைப்படம்: 'எங்கள் அண்ணா' படத்திலிருந்து

பயமெல்லாம் போச்சு!

போன்ல யாராவது இங்கிலீஷ்ல பேச ஆரம்பிச்சா பயம்.

என் குழந்தைகள் படிக்கிற ஸ்கூலுக்குப் போயி டீச்சர்களிடம் பேச பயம்.

என் ஹஸ்பன்ட் கூட பார்ட்டிக்கு போக பயம். ஏன்னா அங்கே நிறைய பேர் இங்கிலீஷ்ல பேசுவாங்களே!

இப்படி எதுக்கெடுத்தாலும் பயந்துக்கிட்டிருந்த நான் இப்போ தங்கு தடையில்லாம தைரியமா இங்கிலீஷ்ல பேசறேன்னா அதுக்கு காரணம் **விவேகானந்தா இன்ஸ்டிட்யூட்**தான்.

ஆமாம். அவங்களோட **ஸ்போக்கன் இங்கிலீஷ் டிரெயினிங் கோர்ஸ்** பாடங்களை வீட்டிலிருந்துகிட்டே ஓய்வு நேரத்தில் படிச்சு பிராக்டிஸ் பண்ண ஆரம்பிச்சேன். இப்போ எந்தச் சூழ்நிலையா இருந்தாலும் துளிக்கூட பயமில்லாம சர்வ சாதாரணமா இங்கிலீஷ்ல பேச முடியுது. நீங்களும் ட்ரை பண்ணிப் பாருங்க. நான் சொல்றது உண்மை தான்னு நிச்சயம் சொல்வீங்க.

- Mrs லீலா சங்கர்

கீழே உள்ள கூப்பனைப் பூர்த்தி செய்து இன்றே அனுப்புங்கள். பாடங்கள் **V.P.P.** மூலம் உங்களது வீடுதேடி வந்துவிடும். தபால்காரரிடம் பணத்தைச் செலுத்திப் பெற்றுக் கொள்ளுங்கள். பாடங்களைப் படித்து பிராக்டிஸ் செய்து மடமடவென இங்கிலீஷில் பேச ஆரம்பியுங்கள்.

இனிமே இங்கிலீஷ்ல தான் பேச்சு!



பயிற்சி விவரம்:

இங்கிலீஷ் வார்த்தைகளை ஓரளவு எழுத படிக்கத் தெரிந்தவர்கள் **ஸ்போக்கன் இங்கிலீஷ் டிரெயினிங் கோர்ஸில்** சேர்ந்து மிகச் சரளமாக இங்கிலீஷில் பேசப் பயிற்சி பெறலாம்.

இலக்கணம் மற்றும் உரையாடல் பயிற்சிப் பாடங்கள் அடங்கிய இக்கோர்ஸின் கட்டணம் ரூ. **395/-** மட்டுமே.

அடிப்படையிலிருந்தும் ஆரம்பிக்கலாம்

இங்கிலீஷ் வார்த்தைகளை எழுத படிக்க இயலாதவர்கள் அடிப்படையிலிருந்து ஆரம்பித்து சரளமாக இங்கிலீஷ் பேசப் பயிற்சி பெறலாம்.

அடிப்படை மற்றும் ஸ்போக்கன் இங்கிலீஷ் டிரெயினிங் கோர்ஸின் கட்டணம் ரூ. **525/-** மட்டுமே.

இதோ கூப்பன்

☐ நான் விவேகானந்தாவின் ஸ்போக்கன் இங்கிலீஷ் டிரெயினிங் கோர்ஸில் சேர விரும்புகிறேன். பாடங்களை V.P.P.யில் அனுப்புங்கள். ரூ. **395/-** செலுத்திப் பெற்றுக் கொள்கிறேன்.

☐ நான் அடிப்படை (Basic) மற்றும் ஸ்போக்கன் இங்கிலீஷ் டிரெயினிங் கோர்ஸில் சேர விரும்புகிறேன். பாடங்களை V.P.P.யில் அனுப்புங்கள். ரூ. **525/-** செலுத்திப் பெற்றுக் கொள்கிறேன்.

(தேவையான கட்டத்தில் ☑ குறியிடுங்கள்)

பெயர் : ....

முகவரி : ....

....

..............................பின்கோடு..............................

விவேகானந்தா இன்ஸ்டிட்யூட்

9, மேட்லி ரோடு, தி.நகர், சென்னை - 600 017.

BMR 11 / TAM / 03 / NAGA

கூப்பனை 15 நாட்களுக்குள் அனுப்பிப் பாடங்களுடன் 416 பக்கங்கள் கொண்ட இங்கிலீஷ் - தமிழ் டிக்ஷ்னரி ஒன்றினைப் பரிசாகப் பெறுங்கள்.

"அக்டோபர் 31ம் தேதி மாலை ஆறு மணி. எனக்குச் சந்தோஷமும், வருத்தமும் ஒரு சேரக் கலந்த உணர்வு. அன்றுதான் விருமாண்டி படத்தின் கடைசி நாள் ஷூட்டிங். ஆரம்பம் முதல் எத்தனை தடங்கல்கள்! எல்லாவற்றையும் சமாளித்து, ஷூட்டிங் நல்லபடியாக முடிந்ததே என்று சந்தோஷம். நாலு மாதம் அன்போடு பழகி, ரொம்பவே நெருக்கமாகிவிட்ட எல்லோரையும் பிரியப் போகிறோமே! மறுபடி இது போன்ற ஒரு சந்தோஷமான அனுபவம் கிடைக்குமா என்கிற வருத்தம்" என்கிறார் விருமாண்டியில் கமலின் திருமதியாக நடித்திருக்கிற அபிராமி.

"ஆரம்பம் முதலே 'விருமாண்டி' ஷூட்டிங் எப்போது ஆரம்பிக்கும் என்று ஆர்வமாய்க் காத்திருந்தேன். எதிர்பாராமல் ஏற்பட்ட தடங்கல்களால் ஷூட்டிங் தள்ளிப் போனது. ஒரு வழியாக சென்னையிலேயே கேம்ப கோலா காம்பவுண்டுக்குள்ளேயே செட் போட்டு, ஷூட்டிங் ஆரம்பித்தது.

"டைட்டான செக்யூரிடி என்பதால், என் அப்பா, அம்மா யாரும் முதல் நாள், கூட வரவில்லை. நான் மட்டும் தனியாக ஷூட்டிங்குக்குப் போனேன். அந்தச் சூழ்நிலை, நான் நிஜமாகவே ஏதோ ஒரு கிராமத்துக்குள் நுழைந்த மாதிரி இருந்தது. மதியம் வரை எனக்குக் காட்சிகள் எதுவுமில்லை.



* அபிராமி

* 'விருமாண்டி'யில்...

"அண்ணுருன்னா

"உணவு இடைவேளைக்குப் பின், நானும், பசுபதியும், இடம் பெறும் காட்சி. நான் காளை மாட்டைப் பிடித்துக் கொண்டு அவருடன் வசனம் பேச வேண்டும். ஏற்கெனவே, நான் அந்தக் காளை மாட்டுடன் பழகி, பயிற்சி பெற்றிருந்ததால் பயமில்லாமல் நடித்தேன். ஒரு சில ஒத்திகைகளுக்குப் பின், முதல் டேக் ஓ.கே. ஆனது. டைரக்டர் முகத்தில் திருப்தி.

அடுத்து சில காட்சிகள். ஒரு காட்சியில் மாடு, என் காலை இலேசாய் மிதித்துவிட, வலி

தாங்கவில்லை. சீரியஸாய் ஒன்றும் ஆகவில்லை என்பதில் நிம்மதி. முதல்நாள் ஷூட்டிங் முடிந்து, வீட்டுக்குப் புறப்பட்டேன். என்னிடம் கொடுக்கப்பட்ட பேப்பரில், மறுநாள் எத்தனை மணிக்கு ஷூட்டிங், எத்தனை மணிக்கு செட்டுக்கு வர வேண்டும், மேக் அப் எத்தனை மணிக்கு, என்னென்ன காட்சிகள் என்று அத்தனை விவரங்களையும் கொடுத்து விட்டார்கள். வாவ்! கமல் பர்ஃபெக்ஷனிஸ்ட்!

"ஒரு காட்சியில் 'துண்ணூறு எடுத்து வெச்சிக்க?' என்று ஒரு வசனம் வரும். நானும் பேசி முடித்துவிட்டேன். அப்புறம் கமலிடம், சீரியஸாக, "துண்ணூறுன்னா என்ன?" என்று கேட்டேன். அவரும் ரொம்ப சீரியஸாக 'தொண்ணூறுக்கு அடுத்த நெம்பர் துண்ணூறு' என்றார். நானும் நம்பிவிட்டேன். ஆனால் சுற்றி இருந்தவர்கள் 'குபுக்' என்று சிரித்து விட்டார்கள். கமல் ஏதோ கிண்டலடிக்கிறார் என்று புரிந்து கொண்டேன். அதன்பின் சரியான அர்த்தம் சொல்ல, நானும் சிரித்தேன்.



ன்னா?"

ஜல்லிக்கட்டுக் காட்சிகள் எடுத்தபோது, கிடைத்த அனுபவம் மறக்க முடியாதது. ஒரு வீட்டு செட். அதன் சரிவான கூரை மீது உட்கார்ந்து கொண்டு, ஜல்லிக்கட்டை வேடிக்கை பார்க்க வேண்டும். சட்டென்று, ஒரு தடவை, ஜன்னலின் சன்ஷேட் மீது குதித்து, படபடவென்று வசனம் பேசிவிட்டு, மறுபடி குதித்து, கூரை மேல் ஏற வேண்டும். கூரை மேல் உட்கார்ந்து ஜல்லிக்கட்டுப் பார்க்க குஷியாக இருந்தது. என்ன இருந்தாலும், செட்தானே விழுந்து விட்டால்? என்று நினைத்தபோது பயமாக இருந்தது. எதிர்பாராத விதமாய், காளை மாடு, என் பக்கமாய் பாய்ந்தோடி வந்துவிட, நல்ல காலம்... கீழே விழாமல் தப்பித்தேன்...

ஒரு குளத்துக்குள் இறங்கி, நடிக்க வேண்டிய காட்சி. படிக்கட்டில் இறங்க ரொம்ப கஷ்டப்பட்டேன். அம்மா, என்னை அப்படியே தூக்கிக் கொண்டு, படி இறங்கினார். காட்சி முடிந்தவுடன், மறுபடியும் என்னைத் தூக்கிக் கொண்டு கரைக்கு வந்தார்.

சில நிமிடங்களுக்குப் பிறகு, கமல் 'கட்' என்று சொல்ல, என் அம்மா என்னைத் தூக்கிக் கொண்டு நடப்பதை கமல், வீடியோ கேமராவில் படம் பிடிக்கச் சொல்லி இருக்கிறார் என்பதை, கவனித்தோம். 'திரைக்குப் பின்னால்' என்ற தலைப்பில், விருமாண்டி உருவான கதையை அவர் வீடியோவில் எடுத்துக்கொண்டிருப்பது, எனக்கு அப்போதுதான் தெரியும்.

படத்திலேயே மிகவும் சவாலான காட்சியாக நான் நினைப்பது ஒன்று உண்டு. என் மொபட்டைத் தள்ளிக் கொண்டு, காளை மாட்டையும் பிடித்துக் கொண்டு, கூட வரும் கமலைப் பார்த்துக்கொண்டே நடந்தபடி வசனம் பேச வேண்டும். எட்டு, பத்து முறை இந்தக் காட்சியை ஒத்திகை பார்த்துக் கொண்டோம். சரியாக வரும் என்ற நம்பிக்கை வந்தபின் படம் பிடிக்கப் பட்டது. முதல் ஷாட்டே ஓ.கே ஆன போது, கமல் பாராட்டினார். மறக்க முடியாத ஒன்று!

சந்திப்பு: **எஸ். சந்திரமௌலி**

-திருமதி விருமாண்டி பேசுகிறார்

• சி. சசிகலா, விருதுநகர்.

? அரசியல் தலையீடு காரணமாக காவல் துறையின் திறன் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக உச்சநீதிமன்ற நீதிபதி ஆர். லக்ஷ்மணன் சொல்கிறாரே...?

! கடலூரில் ராணுவத்துக்கு ஆள் சேர்க்கப்பட்டபோது வந்து குவிந்த வேலையில்லா இளைஞர்களை, தமிழக காவல்துறை அடித்து நொறுக்கி விரட்டி - அடித்ததை டி.வி.யில் பார்த்திருந்தால் இன்னும் கடுமையாகப் பேசியிருக்கக் கூடும்.

• பி. ஜெயப்பிரகாஷ், சர்க்கார்பதி.

? தனிமை என்பது எதுங்க...? அது எப்போது இன்பம் தரும்? எப்போது துன்பம் தரும்?

! 'பத்து சீட்' என்று பேரம் பேசும்போது இன்பம் தரும். எல்லாரும் கை விரிச்சு ஒதுக்கிட்டா துன்பம் தரும்!

இந்தியா உண்மையிலேயே ஒளிர்கிறதா?

• நெல்லை எஸ்ஸார், திருநெல்வேலி - 11.

? மூன்றாவது அணி என்பது பேராசையா, இல்லை குழப்பமா, இல்லை கனவு உலகமா...?

! பேராசைக் கனவு!

• கன்னி சுப்பிரமணியன், சென்னை - 5.

? ஐயாயிரம் ரூபாய்க்கு மேல் வருமானம் உள்ளவர்களுக்கு அவர்களது ரேஷன் அட்டையில் 'எச்' முத்திரை குத்தப்பட்டுள்ளபோது, போலீஸாருக்கு மட்டும் விதிவிலக்காக 'எச்' முத்திரையை நீக்கியுள்ளதே அரசு?

! எத்தனையோ பாரபட்சமான நடவடிக்கைகளில் இதுவும் ஒன்று. பல தப்பான காரியங்களில் ஏவி விடப்படும் போலீஸ் முணுமுணுக்காமல் இருக்க வெகுமதி.

• டி. சுப்ரமணியன், மேலையூர்.

? தமிழகத்தில் எக்கட்சிக் கூட்டணியால் காவிரி நீரைப் பெற்றுத்தர முடியும்...?

! திரளும் கருமேகங்கள்; சரியான திசையில் வீசும் காற்று; எதிர்பார்த்த அளவில் பெய்யும் பருவமழை என்ற கூட்டணி!

• ரேவதிப்ரியன், ஈரோடு - 1.

? 'சோனியா காந்தியால் வந்தே மாதரம் பாடலைப் பார்க்காமல் பாட முடியுமா?' என்று கேட்கிறாரே நரேந்திர மோடி?

! அதைவிட முக்கியமான கேள்வி: நரேந்திர மோடியால் ஹிந்து - முஸ்லிம் பாகுபாடின்றி விருப்பு வெறுப்பின்றி - சிந்திக்க முடியுமா...?

• ஜி.எஸ். பிரபாகரன், சென்னை - 73

? 'வாஜ்பாயைப் பிரதமராக ஏற்கும் எந்தக் கட்சியையும் வரவேற்போம். அதன் பின்னணி குறித்து ஆராய மாட்டோம்' என்கிறாரே இல. கணேசன்?

! தேர்தல் முடியறவரை ஏற்றுக்கிடுவாங்க; அதற்கப்புறம் பி.ஜே.பிக்கு எத்தனை ஸீட் கிடைத்தது என்று கணக்கிட்டு காய் நகர்த்துவாங்க... சொல்லிப்புட்டோம்! அப்புறம் கணேசன் பாடு, அவர் ஏற்கிற கட்சிகள் பாடு!

• ஆ. கமல்ராஜ், தாரமங்கலம்.

? 'நாங்க ஏற்கெனவே வெளிய போகச் சொல்லி சைகை காட்டி ரொம்ப காலமாகிவிட்டது. இப்பதான் தி.மு.க.வுக்குப் புரிஞ்சிருக்கு...' என்று பி.ஜே.பி, எச். ராஜா கூறியிருக்கறாரே...?



• ... தொட்ட குறை!

• விட்ட குறை...


! வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுகிற அநாகரிகம் என்பது ஒருபுறமிருக்க, "ஆண்டு அனுபவித்துவிட்டு - வெளியேறுகிறார்கள்" என்று இவர்கள் பழித்தது அப்பட்டப் பொய் என்பதும் நிரூபணமாகிறது.

● லெ. நா. சிவகுமார், சென்னை - 33 ★

? இந்தியா உண்மையிலேயே ஒளிர்கிறதா...?



● பாட்டும்....



● ... வேதமும்!

! ஸீரியல் லைட்டில் ஒரு பல்பு அளவுக்கு ஒளி சிந்துகிறது. தேர்தல் நெருங்குவதால், மத்திய அரசு விளம்பரங்கள் அந்த ஒளியையே சாலை சந்திப்பில் தூணில் நிறுவப்பட்ட ஹாலோஜன் விளக்குக் கொத்துக் கணக்காக மிகைப்படுத்துகின்றது.

● லீலா லாம், தக்கலை.

? பல்லாயிரக்கணக்கான உயிர்களைப் பலி வாங்கிய ஈரான் பூகம்பம் உலகையே உலுக்கியிருப்பது பற்றி...?

! பூகம்பத்தின் வீரியம் ஒரு பக்கம் அச்சமூட்டினாலும், ஈரான் நாட்டின் பின்தங்கிய நிலையே அழிவுக்கு முக்கியக் காரணம் என அறியும்போது மனம் நலிந்துபோகிறது.

● ஜி. இந்திரா, பெங்களூர் - 3.

? இன்றைய சூழலில் அரசியலில் பெண்கள் அதிக அளவில் வெற்றி பெற்று வருகின்றனரே...? அந்த வெற்றியை அவர்கள் எவ்வாறு தக்க வைத்துக் கொள்ளலாம்?



● எழுத்துலக அஞ்

! பெண்கள், முன்னிலும் அதிகமாக அரசியலில் ஈடுபடுகிறார்கள் என்று வேண்டுமானால் சொல்லலாமேயொழிய, அதிகமான பெண்கள் வெற்றி கண்டிருக்கிறார்கள் என்று சொல்ல முடியாது. அரசியலில் மெய்யான வெற்றி என்பது, கொள்கைகளுக்காகக் கிடைக்கும் ஆதரவு; அவற்றைச் செயல்படுத்துவதில் அடையும் முன்னேற்றம்... - இந்த அடிப்படையில் பெண்கள் யாரும் பெரிதாக வெற்றி பெற்றுவிடவில்லை.

● பி.எஸ். மணியன், சென்னை - 80.

? எழுத்தாளர் புனிதனின் மறைவு...?

! நயமான கற்பனையும் கடுமையான உழைப்பும் பொருந்திய மூத்த பத்திரிகையாளர். எஸ்.ஏ.பி.யின் தனிக் கவனத்தில் வளர்ந்த மூவரில் ஒருவர். கோகுலம் இதழில் சிறிது காலத்துக்குப் பணியாற்றி அதற்கு வண்ணமூட்டினார். எழுத்துலகின் அஞ்சலிக்குரியவர்.

● ஆர்.ஜி. கல்யாணி, திசையன்விளை

! 2003ல் வீரப்பன் பிடிபடுவான் என்று சொன்ன ஜோதிடர், இப்போது தைரியமாக பின்லேடன் பிடுபடுவான் என்று சொல்லியிருக்கிறாரே...? உங்களுக்கு என்ன பிடிபட்டிருக்கிறது...?

! சொன்னவருக்கு இன்னும் ஜோசியமே பிடிபடவில்லை என்று!

● டேவிட் ராஜா, சென்னை-114 ☐

? பயத்தின் வெளிப்பாடுதான் பக்தியா...?

! நீங்கள் திருநாவுக்கரசரின் 'மாசில் வீணையும்' பதிகம் கேட்டதுண்டா? படித்ததுண்டா? பக்தியும் அதன் விளைவான நேர்மையும் உள்ளவனுக்கு, பயம் என்றால் என்ன என்பதே தெரியாது. ஆன்ம விடுதலை தரும் பக்தி எவ்வாறு அச்சத்தில் விளைய முடியும்?... பக்தி (நம்பிக்கை) விடைபெறும்போதுதான் அச்சம் பிறக்கிறது!

☐ ரூ. 100/- பரிசு பெறுபவர்
டேவிட் ராஜா, C/o. கே. ராஜா,
34, துரைராஜ் தெரு,
பழவந்தாங்கல்,
சென்னை - 600 114.

★ ரூ. 50/- பரிசு பெறுபவர்
லெ.நா. சிவகுமார்
13, பாலாஜி ஃபிளாட்ஸ்,
81/32, ஆரிய கௌடா
சாலை,
மேற்கு மாம்பலம்,
சென்னை - 600 033.

இருட்டோடு எழுந்து வெளியூருக்கு எங்காவது கிளம்ப வேண்டும் என்றால் வடிவுக்கு ஆகாது. குழந்தையைப் போல சிணுங்கி அழுவாள். சுணங்கிச் சுணங்கி படுக்கையிலேயே படுத்துக் கொள்வாள். இன்றும் அப்படித்தான் நடந்தது. ஆம்பூர் மருத்துவமனைக்குப் போகவேண்டுமென ஒருவாரமாய் சொல்லிக் கொண்டுதான் இருந்தான் சண்முகம். கருவுற்ற முதல் மாதத்திலிருந்தே, ஏதாவது ஒரு நல்ல மருத்துவமனையில் அவளைக் கூட்டிக்கொண்டு போய்ப் பார்த்துக் கொள்ள வேண்டும் என்பது அவன் எண்ணம். மாதா மாதம் போய்ப் பார்த்துக் கொள்வதோடு, குழந்தை பிறந்ததும் அங்கேயே போய் கவனித்துக் கொள்ளலாம். நேற்று மாலை வரைக்கும்கூட உற்சாகமாய் இருந்தவள், இப்போது எதற்கு அடம் பிடிக்கிறாள் என்று கோபமாக வந்தது அவனுக்கு.

"என்னை எங்கப்பா, ஹாஸ்டல்ல விட்டுட்டு வர்றதுக்கு இப்பிடிதான் காலங்காத்தாலயே எழுப்பிக் கூட்டிட்டுப் போவாரு. எனக்குக்காலையில எழறதுக்கு அழுக அழுகயா வரும்.."

முன்பே சில நேரங்களில் இப்படி அதிகாலையிலேயே போக நேர்ந்தபோது அவனிடம் சொல்லியிருக்கிறாள். இதற்கு நாம் என்ன செய்வது? சில நேரங்களில் தூக்கத்தின் சுகத்தை போர்வையைப்போல உதறித்தள்ளிவிட்டு எழுந்திருக்கத்தான் வேண்டும். காலை எவ்வளவு அற்புதமான பொழுது! பளிங்கு போல உறைந்த பொழுதை உடைத்துக் கொண்டு செந்நிறப் பந்தாய் மேலெழும்பும் சூரியனைப் பார்த்திருந்தால், இப்படி சிணுங்கிக் கொண்டிருப்பாளா?

"என்ன கொழந்த மாதிரி பண்ணிக்கிட்டு? காலையிலயே போனாத்தான் சார்ட்டுப் போட்டுப் பார்த்துக்கிட்டு சிக்கிரமா திரும்ப முடியும். கௌம்பு கௌம்பு."

கொஞ்சம் அழுத்தமாய்ச் சொல்லிவிட்டு, வெளியில் போய் நின்று கொண்டான் சண்முகம்.

சோம்பல் முறிக்காத ஈரக்காற்றும், புதுப் பொழுதின் வாசமுமாய் வெளியே இருந்தது காலை. எதையும் யோசிக்கத் தோன்றாமல், வெறுமனே சுற்றிலும் பார்த்துக் கொண்டு நின்றிருந்தான் சண்முகம்.

"ம்... ஆச்சு.." என்றாள் வடிவு. அவன் பின்னால் சத்தம் செய்யாமல் வந்து நின்று. அவள் முகம் வீம்பில் பொய்க்கோபம் கொண்டு குவிந்திருந்தது. அவளையே கண் கொட்டாமல் சில கணங்கள் பார்த்துவிட்டு, சப்தம் போட்டுச் சிரித்தான் சண்முகம். சடாரென அவள் முகம் அவிழ்ந்து கொட்டியது. இரு புறமும் கன்னங்கள் குழிந்து புன்னகை



அழகிய பெரியவன்



மீண்டும் நினைவுகள்

கழன்றது. கருவுற்றதிலிருந்து அழகாகி விட்டாள் என்று நினைத்தான் சண்முகம்.

பேருந்தில் ஏறி உட்கார்ந்து கொண்ட பிறகு மனம் சம நிலைக்கு வந்தது போல இருந்தது. வடிவின்மீது ஆவல் கொண்டு மோதும் காற்றுக்குச் சிக்காமல், முகத்தைத் திருப்பிப் பழித்தாள். அவளின் மெல்லிய விரல்கள் முகத்தில் விழும் முடிக்கற்றைகளை செல்லமாய்த் தட்டித்தட்டி கூந்தலில் எடுத்துச் சொருகின. கண் இமைக்காமல் அதையே கொஞ்ச நேரத்துக்குப் பார்த்துக் கொண்டு இருந்தான் சண்முகம்.

ஆம்பூருக்குப் போவதென்றாலே அவன் மனத்தின் ஒரு ரகசியக் கதவு திறந்து கொள்ளும். எல்லாக் கவலைகளையும் அழுத்தி ஒரு குதூகலம் நிரம்பும் உள்ளே. சிறு வயது முதல் அலைந்து திரிந்த அப்பிரதேசத்தின் மண் பரப்பு, அவன் பாதம் படக் காத்திருக்கிறது போல நினைவுகள் பெருகும்.

மருத்துவமனைக்குப் போய்ச் சேர்ந்த போது வெயில் சுள்ளென்று அடித்தது. அட்டை பதிந்து விட்டு, மகப்பேறு பிரிவில் காத்திருப்போரிடையே வடிவை அழைத்துக் கொண்டு போய்

அமர வைத்தான் சண்முகம். சாப்பிட எதுவும் வேண்டுமாவெனக் கேட்டான். அவள் வேண்டாமென்றதும், வெளியில் கொஞ்ச நேரம் இருந்துவிட்டு வருவதாகச் சொல்லிக் கொண்டு வந்தான்.

கேன்டீனிலிருந்து தேநீர் குடித்துவிட்டு வந்து கொண்டிருந்தபோது ஒரு மருத்துவர் மீது மோதினான் சண்முகம். மஞ்சள் பூக்களை சரம் சரமாய் வைத்திருக்கும் ஒரு மரம் அங்கே அதிகம் இருக்கும். அங்கிருந்த அம்மரத்தைப் பார்த்துக் கொண்டே வந்தபோது, இப்படி நேர்ந்துவிட்டது.

"ஸாரி. மன்னிக்கனும்" பதட்டமுடன் சொன்னான் சண்முகம்.

"என்ன யோசனையில வந்திட்டுருக்கற சண்முகம்?" குரலைக் கேட்டு அதிர்ச்சியோடு பார்த்தான். அவள் துளசி. அவனோடு பதினொன்று, பன்னிரெண்டாம்

"தீபாவளிக்கு முதல் மாப்பிள்ளையையும் பொங்கலுக்கு இரண்டாவது மாப்பிள்ளையையும் அழைப்பேன்..."

"ஏன்... அப்படி?"

"மொட்டையடிக்க ஒரு தலைதானே இருக்கு..."

– ராஜிராதா



வகுப்புகளில் படித்தவள்.

"நீ இங்கியா வேல செய்யிற? டாக்டராயிட்டியா?" அவசர அவசரமான அவன் கேள்விகளுக்கு, அவள் 'ம், ம்' என்றபடி சிரித்தாள்.

"அப்புறம் பாக்கலாம். பேஷண்டுங்க இருப்பாங்க", அவள் சொல்லிக் கொண்டே போனாள்.

வகுப்பறையில் அழுது கொண்டிருந்த போதுதான் சண்முகத்தை, மதிவாணி நுணுக்கமாகப் பார்த்தாள். அவன் யாருக்கும் தெரியாமல்தான் அழுது கொண்டிருந்தான். அவள் பார்த்து விட்டாள் என்று தெரிந்த போது, மேலும் அழுகை பெருகியது.

அவர்கள் வகுப்பறையே வினோதமானது. ஆறு பையன்கள், இருபத்து நான்கு பெண்கள். யோகாவும் அன்பும், எல்லாரையும் தனித்தனியே பெயர் வைத்து கிண்டல் செய்து கொண்டிருப்பார்கள். கூடவே டேனியும், ஆமோகம் சேர்ந்து கொண்டால் அமர்க்களம்தான். பந்தயம் கட்டிக் கொண்டு கிண்டலடித்து, சீண்டி, ஒரு நாளைக்கு ஒருவரை அழ வைத்துவிடுவான் யோகா. இன்று சண்முகம் சிக்கிக் கொண்டான்.

நடுப்பகலில் பள்ளி விடுவதற்குள் நான்கைந்து முறை மதிவாணி சண்முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

வகுப்பில் இருக்கிற எல்லாப் பெண்களையும்விட அழகு மதிவாணிதான் என்பது அவன் எண்ணம். ஆனால் அவள் கறுப்பு. கறுப்பு ஒரு அழகா? என்றிருக்கும் அவனுக்கு. அவன் தமிழாசிரியர் கறுப்பைப்பற்றி சங்கப் பாடல்களிலிருந்து சமகாலப் பாடல்கள் வரை உயர்வாய்ச் சொல்லி, அவன் சந்தேகத்தைப் போகச் செய்தார். வகுப்பில் அவர் தனக்காகவே இதையெல்லாம் சொன்னதுபோல நினைத்துக் கொண்டான் சண்முகம்.

மதிவாணி யாரிடமும் பேசுவதில்லை. எப்போதும் மௌனமாகவே அவள் இருப்பதனால், அவளைப் பற்றியே ஒரு தாழ்வு எண்ணம் அவளிடம் இருக்குமோ என்றும் நினைத்துக் கொள்வான். யாரிடமும் பேசாதவள் தன்னிடம் பேசியது, அவனுக்கு சந்தோஷப் பீறிடலாய் இருந்தது.

நண்பகலுக்குப் பிறகிருந்த வகுப்புகள் இருட்டிலேயே நடப்பதாகத் தோன்றின. கரும்பலகையில் சாக்குக் கட்டிகள் எழுதும் வெண்மையும், மதிவாணியின் கண்களின் வெண்மையும் தவிர, எதுவும் தெரியவில்லை அவனுக்கு. அவனுக்கு நேராய்த் திறந்திருந்த சன்னல்கள் அவனுக்கு மட்டும் அவளைக் காட்டிக் கொடுத்துக் கொண்டேயிருந்தன.

எப்போதாவது தற்செயலாய் அவள் அவன் பக்கமாகத் திரும்புவாள். அத்தருணத்துக்கெனவே காத்திருக்கும் அவன் கண்கள், அவளை முழுக்க உள்வாங்கிக் கொள்ள மேலும் திறக்கும். அவள் மேலே விழும் மெல்லிய ஒளியில், கல்லெறிபட்ட நீர்ப்பரப்பாய் அலையும் அவள் முகம். சலனத்தில் இணைந்து அலையும் அவன் மனமும்.

ஓரிரு வார்த்தைகள், சில புன்னகைகள்,

கொஞ்சம் பார்வை இப்படியே நெடுநாட்கள் கழிந்தன சண்முகத்துக்கு. ஒவ்வொரு முறை மதிவாணி புன்னகைக்கும் போதும், இரத்தம் பாய்ந்ததுபோல் இருக்கும். அவளிடமிருந்து விழும் சொற்களை, இறகைப்போல பாவித்து கவனமுடன் எடுத்து வைத்துக் கொள்வான். அடுத்து அவள் பேசும்வரை, அச்சொற்களைக் குடைந்து உள்ளிருப்பான் சண்முகம்.

யோகாவும் அன்பும் விஷயத்தை எப்படியோ கண்டுபிடித்து, ஒரு நாள் தங்களின் கிண்டலைத் தொடங்கினார்கள். பள்ளி விட்டு வந்தபோது ஒருமுறை, மதிவாணியை வழிமறித்து யோகா சொன்னான்.

"மதி, எம் ஃபிரண்ட மதிம்மா! மிதிச்சிடப்போற". என்ன நினைத்துக் கொண்டிருப்பாளோ என்ற தவிப்பில் தன் முதல் கடிதத்தை சண்முகம் மதிவாணிக்கு எழுதினான். சில நாட்களுக்குப் பிறகு அவனைப் பார்த்து அவள் சிரித்த பிறகுதான், சண்முகத்துக்கு மனசு இலேசானது.

"தமிழ்ப்படங்களுக்கு ஆங்கிலப் பெயர்களை வைக்கக் கூடாதென சிலர் எதிர்ப்புத் தெரிவித்திருக்கிறார்களே!"

"Really...?"

- டி. பூவராகன்

உணவுக்கு விட்டதும் துளசியின் பின்னாலேயே கிளம்புவார்கள் அன்பும் யோகாவும். சில நேரங்களில் சண்முகத்தையும், டேனியையும் கூட கூட்டிக் கொண்டு போவார்கள். துளசி வகுப்பில் நுழையும் போதும், வெளியேறும் போதும் சீண்டல் வார்த்தைகள் நண்பர்களிடமிருந்து கிளம்பும். சில நேரங்களில் அவள் திரும்பித் திட்டினால் யோகாவும், அன்பும் அதை பொருட்படுத்தாது சிரிப்பார்கள்.

ஒரு நாள் மிதிவண்டியில் அவர்களோடு சண்முகமும் துளசியைப் பின் தொடர்ந்து போனான். சிறீ திரையரங்கைத் தாண்டி, எம்.சி. சாலையில் கலந்ததும், பேய் போல மிதித்தான் அன்பு. முன்னால் யோகாவும் டேனியும் போய்க் கொண்டிருந்தார்கள். ஆனைக்கார் பள்ளியைத் தாண்டியதும் சாலை வெறிச்சோடியது. நண்பகல் வெயில் கள்ளென்று விளாசியது. மனம் ஒன்றாமல் சண்முகம் மேற்குப் பக்கமாய் நீண்டிருக்கும் மலைத் தொடரைப் பார்த்துக் கொண்டு வந்தான். திடீரென அன்பும் யோகாவும் மிதிவண்டிகளை நிறுத்தினார்கள். எதிரிலே சாலையில் துளசி குறுக்கே மிதிவண்டியை நிறுத்தி விட்டு கோபமுடன் நின்றிருந்தாள். நால்வரும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள். சில கணங்களுக்குப் பிறகு வெறியுடன் ஓடி வந்து, அன்புவின் சட்டையைப் பற்றி உலுக்கி, முகத்திலே ஒரு குத்து விட்டான் துளசி. அரண்டு போன அவர்களை ஆளுக்கொரு பக்கம் உந்தித் தள்ளினாள்.

"இங்க தாண்டா எங்கூடு. ஒரே சத்தம் போட்டேன்னு வெய்யி, நீங்க நாலுபேரும் காலி"

மிதிவண்டியில் ஏறி சாலையையொட்டி இருந்த நிலத்தில் இறங்கிப் பறந்தாள் துளசி.



சில வாரங்களுக்கு யோகாநந்தனும், அன்புவும் அமைதியாக இருந்தனர் வகுப்புகளில்.

அந்த ஆண்டு இறுதியில்தான் நாட்டு நலப்பணி திட்ட முகாம் நடந்தபோது, மதிவாணியின் வீட்டைக் கண்டுபிடித்தான் சண்முகம். ஊரிலிருந்து தள்ளி இருந்த ஒரு கிராமத்தில் பத்து நாள் முகாம் நடந்தது. தெருவைச் சுத்தம் செய்யவும், பிளாஸ்டிக் குப்பைகளை எடுக்கவும் வீடு வீடாகப் போனபோது, அந்தத் தெருவின் மூலையில் அவளின் வீடிருந்தது. தென்னை மரங்களும், புன்னையும் நிழல் பந்தலிட்டிருந்தன அங்கே. வீட்டின் முன்புற வேலியில் கொடிகள் படர்ந்திருந்தன. சண்முகம் எட்டிப் பார்த்த போது, மதிவாணி டிசம்பர் பூக்களைப் பறித்துக் கொண்டிருந்தாள். சண்முகத்துக்கு அதிர்ச்சியாக இருந்தது.

"உங்க வீடு கிருஷ்ணாபுரத்திலதான்னு நெனச்சனே?"

"ரெண்டு மாசமாச்சி இங்க வந்து. எங்கப்பா ராசி பாக்கறவரு. இந்த வருசத்திலேயே மூணு வீடு மாறிட்டோம். இங்ககூட

ரொம்ப நாளு இருக்க மாட்டோம்!"

நேரமாகிக் கொண்டிருப்பது உறைத்ததும் எழுந்து மருத்துவமனைக்குள்ளே போனான் சண்முகம். வடிவு பதட்டமுடன் இருந்தாள். "கூப்பிடற நேரத்துல எங்க வெளியில போயிட்டீங்க? இங்கியே இருங்க"

கொஞ்ச நேரத்துக்கெல்லாம் அவன் பெயரைக் கூப்பிட்டதும், வடிவு உள்ளே போனாள். சில நிமிடங்களுக்குப் பின் அவள் சிணுங்கும் சப்தம் கேட்டது. கூச்சத்தில் எப்போதும் சத்தமாய் சிணுங்கிக் கூச்சலிடுவாள் வடிவு. எல்லோரும் தன்னையே பார்க்கிறார்களா என்று சுற்றிலும் பார்த்துக் கொண்டான். சிறிது நேரத்தில் மருத்துவர் அழைப்பதாய் செவிலி சொன்னதும், உள்ளே போனான் சண்முகம்.

துளசி அவனைப் பார்த்துச் சிரித்தபடி உட்காரச் சொன்னாள். ஆச்சரியத்தை முகத்தில் காட்டியபடி, தயக்கமுடன் உட்கார்ந்து கொண்டான்.

"நாம ஒண்ணா படிச்சத உங்க மனைவி கிட்ட சொல்லிட்டேன். அனிமிக்கா இருக்காங்க. யூரின் டெஸ்டுக்கு எழுதிக் குடுத்திருக்கேன். கன்ஃபார்ம் பண்ணிடலாம்"

வடிவு வெட்கத்தில் சிரித்தபடி எழுந்து கழிவறைப் பக்கம் போனாள். அவனுக்கு அங்கே உட்கார்ந்திருக்க சங்கடமாய் இருந்தது.

"என்ன ஆனா உன் கறுப்புத் தேவதை?"

மெல்ல அதிர்ந்து அவளைப் பார்த்தான். துளசி ஆழமாய்ச் சிரித்தாள்.

"நீ தான் எங்கள அடிச்சத சொல்லிட்ட போலிருக்கு. பரீட்சை தொடங்கின பிறகு அவளைப் பாக்கவே இல்ல. எத்தன வீட்டை மாத்தி எங்க கொண்டு போயி வெச்சிருக்காரோ அவங்கப்பா? இல்ல, நிரந்தரமா யாரோட வீட்டுக்கு வாழப்போயிட்டாளோ?"

சண்முகத்துக்கு, சொல்லும்போது வார்த்தைகள் தடுமாறின. உள்ளிருந்து எதுவோ வலியோடு கசிகிறது.

"ச்சேச்சே! நீ நெனக்கிறமாதிரி எதையும் நா அவகிட்ட சொல்லல."

"என்ன இன்னும் கல்யாணம் செஞ்சுக்காமலே இருக்க?"

"இப்பதானே வேலைக்கே வந்திருக்கேன். அப்பா பாத்துக்கிட்டு இருக்கிறார். இன்னும் யாரும் எங்கிட்ட ஒதை வாங்க முன் வரல!" துளசி சொன்னதும் இரண்டு பேரும் சத்தம்போட்டுச் சிரித்துக் கொண்டனர்.

திரும்பும்போது சண்முகத்திடம் வடிவு கேட்டாள்.

"என்ன அப்பிடி சிரிச்சிக்கிட்டீங்க? அவ்ளோ சந்தோஷமான நினைவுகளா?"

"ஆமா"

சண்முகம் சிரிப்பை வரவழைத்துக் கொண்டு அவளிடம் சொன்னான். உள்ளே வலி நெளிந்தது.

காதல் படும் பாடு!

ஒரு பாடல்காட்சிக்காக 'நேபாள்' சென்று வந்திருக்கிறது 'உள்ளம்' படக்குழு.

"புகைப் படங்கள்ல பார்த்த இமயமலைப் பின்னணியை நேர்ல நின்னு பார்க்கிற அழகு விவரிக்க முடியாதது. நாலு மணிக்கெல்லாம் பட்டுனு இருட்டிடும். இரண்டு ஸ்வெட்டரை சேர்த்துப் போர்த்திக்கிட்டாலும் குளிர் நடுநடுங்க வைக்கும்" என்று விவரிக்கும் இயக்குனர் அருண்மூர்த்தியிடம் படத்தின் கதை பற்றிக் கேட்டோம்.

"காதல்தான். ஒவ்வொரு சூழ்நிலையில ஒவ்வொருத்தருக்கு காதல் முளைக்கும். எங்க நாயகனுக்கு எந்தச் சூழ்நிலைல ஏற்படுதுங்கறதை ஊட்டி பின்னணியில சொல்லியிருக்கோம்" என்கிறார்.

ஆஹா... தமிழ் சினிமாவில் காதல் படும்பாட்டை நினைத்தால்...?

- லீ



• 'உள்ளத்தில்' மிதுன், ப்ரியாமணி

* படம் நன்றி: பிலிம் நியூஸ் ஆனந்தன்



சிரித்து வாழ வேண்டும்

24

குசும்பு புத்தி!

டாக்டர், என்னைக் கூப்பிட்டவுடன் மாடியிலிருந்து படி வழியாக இறங்கி வருவதற்குப் பதிலாக, பாதியில், அப்படியே குதித்து, கீழே விழுந்து, எழுந்து ஓடினால்? எனக்குத் தோன்றிய ஐடியாவை கோபுவிடம் சொன்னேன்.

அவர் டைரக்டர் ஸ்ரீதரிடம் சொன்னார். "கோபு! திட்டம் போட்டபடி படத்தை முடிக்கணும். ராமாராவ் நடிக்க இருந்த ரோலை நாகேஷுக்குக் கொடுத்திருக்கோம். இவன் பாட்டுக்குப் பத்தடி உயரத்திலேயிருந்து கீழே குதிச்சு, கையை, காலை ஒடைச்சுக்கிட்டா, இந்த செட் நர்சிஸ்ஹோமுல வைத்தியம் பார்க்க முடியாது. நிஜ ஆஸ்பத்திரிக்குத்தான் போகணும். ஷூட்டிங் பாதிக்கப்படும். படம் முடியாது. ஏகப்பட்ட சிக்கலாயிடும். எதுக்கு வீண் ரிஸ்க்?" என்றார் ஸ்ரீதர்.

"அது மாதிரியெல்லாம் ஒண்ணும் நடக்காது. ஜம்முனு குதிச்சுடுவேன். ஷாட் நல்லா வரும் சார்!" என்று சொல்லிவிட்டு, நான் விடுவிடுவென்று படியேறி மேலே போனேன்.

"சரி! சரி! அப்படியே சீனை வைச்சிக்கலாம்! வின்ஸென்ட்! கேமரா ரெடி பண்ணிக்குங்க"

வின்ஸென்ட், லைட்டிங்கை சரி பார்த்து, கேமராவை பொசிஷன் பண்ணிக் கொண்டார். "நாகேஷ்! பி கேர்ஃபுல்" என்று அக்கறையோடு எச்சரிக்கை செய்தார் ஸ்ரீதர்.

செட்டில் இருந்த அனைவரது கவனமும் என் மீதுதான் இருந்தது. 'ஸ்டார்ட்' என்று டைரக்டர் குரல் கொடுக்க, கேமரா ஓட ஆரம்பித்தது. தயாராக நின்று கொண்டிருந்த நான் கிடுகிடுவென்று படி இறங்கி வந்து, கரெக்டாகத் திரும்பி, சட்டென்று கீழே குதித்து, விழுந்து எழுந்து பார்த்தபோது... பலமான சிரிப்புடன் கூடிய குரல் ஒன்று 'கட்' சொன்னது. கேமரா நின்றது.

நான் எழுந்து வந்து பார்த்தால், டைரக்டர் ஸ்ரீதர் அங்கே இல்லை. 'கட்' சொன்னவர் உதவி இயக்குனரான பி. மாதவன் என்று தெரிந்தது.

'அப்படின்னா, நாம



நாகேஷ்



• சந்திரபாபு

நடிச்ச முதல் சீனை ஸ்ரீதர் சார் டைரக்ட் செய்யலையா? காட்சியை 'ஸ்டார்ட்' சொல்லி ஆரம்பித்தவர் அவர்தானே? இப்போது அவரைக் காணோமே!' என்பது போன்ற பல கேள்விகள் என் மனத்தில் எழுந்தன.

ஷாட் முடிந்தவுடன், டைரக்டர் உள்ளே நுழைந்தார். மெதுவாக கோபுவிடம் என் சந்தேகங்களைக் கேட்டேன். "நாகேஷ்! ஸ்ரீதர் பெரிய டைரக்டர்! அவர் முன்னால் முதல் தடவையா நடிக்கும்போது நீ பயந்திடக் கூடாதில்லையா? நீ இலேசாக பயந்து போனாலும், கீழே குதிக்கிறபோது, ஒன்று கிடக்க ஒன்று ஆகிவிடாமல் இருக்கத்தான் அவர் ஸ்டார்ட் சொல்லிவிட்டு, மீதியை மாதவனைப் பார்த்துக் கொள்ளச் சொல்லி, செட்டுக்கு வெளியில் போய் விட்டார்."

"என்ன! இருக்கியா? ஒழுங்கா விழுந்து எழுந்தியா? அடிகிடி படலையே!" என்று என்னை விசாரித்தார் ஸ்ரீதர்.

அதன்பின், நான் நடித்த காட்சிகளையும் அவரே டைரக்ட் செய்தபோது, கோபு சொன்னதும் சரிதான் என்று நினைத்துக் கொண்டேன். ஸ்ரீதரின் இயக்கத்தில், 'நெஞ்சில் ஓர் ஆலயம்' படத்தில் நடித்தது எனக்குப் புதுமையான ஓர் அனுபவமாக இருந்தது. டைரக்டர் ஸ்ரீதர், கேமராமேன் வின்செண்ட், கோபு, ஸ்டில் போட்டோகிராபர் ஆனாரூனா என்கிற திருச்சி அருணாசலம் என்று, எல்லாருமே கலகலப்பான கல்லூரி இளைஞர்கள் குழு போல நட்புடன் பணியாற்றினார்கள். கேலியும் கிண்டலும் சகஜமாக இருக்கும் என்றாலும், வேலையில் கவனமும், ஈடுபாடும் சிதறாமல் இருக்கும்.

படத்தில் ஒரு காட்சியை என்னால் மறக்க முடியாது. டாக்டர், நர்ஸிங் ஹோமில் ரவுண்ட்ஸ் வந்து கொண்டு இருப்பார். நான் பேஷண்ட் மனோரமாவை இம்ப்ரெஸ் பண்ணுவதற்காக, அவரது ரூமுக்குப் போய் ஏதேதோ உதார் விட்டுக் கொண்டிருப்பேன்.



• மனோரமா

"நான் ஏதோ வார்டு பாய்னு நீங்க நெனைச்சுக்கிட்டிருக்கீங்க. ஆனா, என் அனுபவத்தை வைச்சுப் பார்த்தா நான் முக்கால் டாக்டர். என்ன மருந்து கொடுக்கறதுன்னு, டாக்டருக்குச் சந்தேகம் வந்தா, என்னைத்தான் கேட்பாரு"ன்னு சொல்லிக் கொண்டே இருக்கும்போது, அங்கே டாக்டர் வந்து விடுவார். "என்ன பேசிக்கிட்டு இருக்கே"ன்னு அவர் கேட்கிறப்போ, நான் சமாளிக்கிற சீனை நான் ஒத்திகை சமயத்தில் குரலில் ஏற்ற இறக்கங்களுடன் டைமிங் சென்ஸோடு செய்து காட்டியபோது, டைரக்டர் ஸ்ரீதரே ஆச்சரியப்பட்டு, "பரவாயில்லையே! நல்லா துடிப்பா நடிக்கிறான் இந்தப் புதுப்பையன்!" என்று கோபுவிடம் சொன்னாராம்.

படம் ரிலீஸ் ஆகி, அபார வெற்றி பெற்றது. பத்திரிகை விமர்சனங்களில் படத்தை ஓகோ வென்று பாராட்டியது மட்டுமில்லாமல், எனது நடிப்பையும் பாராட்டி எழுதியதைப் படித்த போது மனம் நெகிழ்ந்து போனேன். ஸ்ரீதர் மீது நான் கொண்டிருந்த மதிப்பும், மரியாதையும் பல மடங்கு உயர்ந்தது.

நெஞ்சில் ஓர் ஆலயத்தை ஸ்ரீதரே

இந்தியிலும் எடுத்தார். நான் நடித்த ரோலில் மெகம்மூது ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்தார். அவர் இந்திப் பட உலகில் உச்சத்தில் இருந்த காமெடி நடிகர்.

அவர் நடித்துக் கொண்டிருந்தபோது, டைரக்டர் ஸ்ரீதர், மெகம்மூதுக்கு என்னை அறிமுகம் செய்து வைத்தார். "ஒரிஜினல் தமிழ்ப் படத்தைப் பார்த்தபோது, உங்கள் நடிப்பு என்னை வியப்படைய வைத்தது. அச்சாஹை! வெரிகுட்!" என்று கை குலுக்கிப் பாராட்டினார். இந்தியில் பிரபலமான ஒரு காமெடி நடிகர், நம்மைப் பாராட்டுகிறாரே என்று எனக்கு ரொம்ப சந்தோஷமாக இருந்தது.

மறுபடியும் கோபுவிடமிருந்து அழைப்பு வந்தது. இந்தத் தடவை, மணிக்கொடி எழுத்தாளரான பி.எஸ். ராமையா எழுதி, எஸ்.வி. சகஸ்ரநாமம் குழுவினரால் மேடையில் நடிக்கப்பட்ட 'போலீஸ்காரன் மகள்' என்ற கதையை, தன் நண்பர்கள் தயாரிக்க, ஸ்ரீதர் டைரக்ட் செய்தார்.

படத்தில் பிரதான நகைச்சுவை ஜோடி சந்திரபாபு, மனோரமா என்றவுடன், "எனக்குத் திரையில் முகம் காட்டவாவது சான்ஸ் வருமா?" என்று கோபுவிடம் கேலியாகக் கேட்டேன். "சின்ன ரோல்தான். ஆனால் நல்ல ரோல்! ரெண்டு சீன்ல வந்தால்கூட ஏதாவது புதுசா செஞ்சு கைத்தட்டல் வாங்கிடுவியே நீ!" என்றார் கோபு.

அதற்கு அடுத்த அழைப்பும் கோபுவிடமிருந்துதான். இப்போது 'சுமைதாங்கி' என்ற படத்துக்காக. ஹீரோவின் நண்பனாக நான் வருவேன். "என்ன நாகேஷ்! நல்லா நடிக்கிறியே! உன் நடிப்பைப் பார்த்து, எல்லாரும் உன்னை நடிக்கக் கூப்பிடறாங்களா?" என்று ஒரு தடவை ஸ்ரீதரே என்னிடம் கேட்டார்.

"எங்க சார்! ஸ்ரீதருடைய கம்பெனியில் காண்டிராக்ட்டில் இருக்கும் ஆர்டிஸ்ட் என்று என்னை நினைத்துக் கொண்டிருக்கிறார்கள் போல இருக்கு. பாராட்டறாங்களே தவிர, சான்ஸ் தர மாட்டேங்கறாங்க" என்றேன் நான்.

ஒருநாள் வாஹினி ஸ்டுடியோவுக்குள் நடந்து போய்க் கொண்டு இருந்தேன். ஜகன்னாதன் என்கிற புரொடக்ஷன் மேனேஜர் என்னைப் பார்த்துவிட்டு, "நாகேஷ்! வாஹினியிலே தெலுங்கு, தமிழ் என இரண்டு மொழிகளில் ஒரு படம் எடுக்கிறோம். ஜெமினி கணேசன் ஹீரோ. இன்னிக்கு எடுக்கப் போகிற காட்சியின் துவக்கத்தில், டேபிள்களை ஒரு சர்வர் துடைப்பது போல ஒரு ஷாட் இருக்கிறது. அந்த ஒரு சீனில் நீ நடிக்கணும். எவ்வளவு பணம் வேணும்? ஐந்நூறு ரூபாய் போதுமில்லையா?" என்றார்.



"அளவுக்கு மீறி 'லஞ்சம்' வாங்கிய கை மாதிரி தெரியுதுங்க உங்க கை!"
"சேச்சே... எப்படி சொல்றீங்க?"
"கைரேகையே அழிஞ்சு போயிருக்குதுங்களே!"

- கிரிஜா மணாளன்

நான் சரி என்றேன். காத்திருக்கச் சொன்னார். அப்போது, நடந்து போய்க் கொண்டிருந்த ஒருவர் என் கவனத்தை ஈர்த்தார். வயதான மனிதர். அவர் வில் போல உடலை பின்னுக்கு வளைத்து, நடந்து போய்க் கொண்டு இருந்தார். ஒரு சிகரெட் பெட்டியும், ஒரு தீப்பெட்டியும்தான் இருந்தது.

என் குசும்பு புத்தி சும்மா இருக்குமா? கிடுகிடுவென்று அவரிடம் போனேன். அவரது தோள்பட்டையைத் தொட்டு, "ரொம்பக் கஷ்டப்பட்டு சிகரெட் பெட்டியைத் தூக்கிட்டுப் போறாப் போல இருக்கு. என்கிட்ட வேணும்னா கொடுங்க. நான் எடுத்துக்கிட்டு வரேன்!" என்றேன்.

அவர், 'ஹ..ஹ..' என்று சுருக்கமாகச் சிரித்துவிட்டு, தன் பின்னோக்கிய வில் நடையைத் தொடர்ந்தார்.

சிறிது நேரத்தில் எனக்கு அழைப்பு வந்தது. செட்டுக்குள் போனேன். ஜகன்னாதன் 'ஒருமுறை ஒத்திகை பார்த்துக் கொள்ளலாம்' என்றார்.

நான் ஒரு சிறு டவலை வாங்கி, தோளில் போட்டுக் கொண்டேன். தட்டு, டம்ளர்கள் போடுகிற பக்கெட்டை எடுத்துக் கொண்டேன். டேபிளில் இருந்த ஒரு தம்ளரை மேலே தூக்கிப் போட்டுவிட்டு, அந்த டேபிளைச் சுத்தம் செய்துவிட்டு, மறுபக்கம் வந்ததும் கீழே வந்த டம்ளரை லாகவமாக பக்கெட்டில் பிடித்துக் கொண்டேன்.

"சபாஷ்! ரொம்ப நல்லா பண்ணறியேப்பா!" என்று ஒரு குரல் கேட்டது. திரும்பிப் பார்த்தால் பேரதிர்ச்சி! நான் சற்றுமுன், செட்டுக்கு வெளியே நடையைக் கேலி பண்ணினேனே அதே மனிதர்! வாஹினி ஸ்டுடியோவின் அதிபரான சக்ரபாணி!

(சிரிப்பு தொடரும்)

அழகு

சாருமதி பாஸ்கரன்

நாயர் டீக்கடை அதிகாலையிலேயே பரபரப்பாக இருந்தது. பாய்லர் பளபளப்பாக துலக்கப்பட்டு, பளிரென்று இருந்தது. சினிமாப் பாட்டுச் சத்தம் காதை பிளக்க, வியாபாரம் சூடு பிடிக்க ஆரம்பித்தது.

நாயர் தான் கடை முதலாளி. டீ மாஸ்டரும் அவரே. அவர் கையாலேயே டீ போட்டுக் கொடுத்தால்தான் அவருக்குத் திருப்தி. அந்தக் கைராசிக்காகத்தான் வியாபாரம் நடந்தது.

"டேய் அழகு! எங்கேடா போய்த் தொலைஞ்ச? டீ கிளாஸ் எல்லாம் கழுவி ரெடியா இருக்கா? டபரா செட் எல்லாம் விளக்கி வெச்சியா? கூட்டம் வர ஆரம்பிச்சதும் வேலைல சுறுசுறுப்பா இருக்கணும். நீ வழக்கம்போல கொஞ்ச நேரத்துக்குப் பின் பக்கமாவே இரு. முதல் வியாபாரம் ஆரம்பிக்கறதுக்கு முன்னால உன் முகத்தைக் காட்டிகிட்டு நிக்காதே" என்று கடுப்படித்தார் நாயர்.

தலையை ஆட்டிக் கொண்டே அழகு கடையின் பின்பக்கம் போனான். டீ கிளாஸைக் கழுவி வைக்கும்போது, தொட்டியில் இருந்த தண்ணீரில் அவன் முகம் தெரிந்தது. தண்ணீர் அசைந்தபோது, அவன் முகம் இன்னும் அசிங்கமாக இருப்பது போலத் தோன்றியது. கண்களை மூடிக் கொண்டான்.

அழகே இல்லாதவனுக்கு 'அழகேசன்' என்று பெயர் வைத்த அம்மாவை மனதுக்குள் திட்டினான். ஒரு வேளை பெயரிலாவது அழகு இருக்கட்டும் என்று வைத்திருப்பாளோ! கோணல் மண்டையும், தெறித்து விழுவதுபோல கண்களும், சப்பை மூக்கும், எடுப்பான பற்களும். சே! அவனை நினைத்தபோது அவனுக்கே வெறுத்துப் போயிற்று.

ஊரார் அவனைக் கேலி செய்யும்போது ரத்தக் கண்ணீரே வரும். அவன் தன் முகத்தைக் கண்ணாடியில் பார்த்து மூன்று வருடங்களாவது இருக்கும். பள்ளியில் சக மாணவர்களின் கேலியைத் தாங்காமல் படிப்பை மூன்றாவதுடன் நிறுத்தி விட்டு, இந்த டீக்கடையில் நுழைந்தவன்தான். யோசிக்க நேரமில்லாது வெறித்தனமாக உழைத்தான். அவனுடைய உழைப்பில்தான் டீக்கடை ஓடுவது தெரிந்த போதிலும், நாயர் அவனை விரட்டிக் கொண்டேயிருப்பார்.

அதிலும் காலேஜ் பையன்கள் டீ குடிக்க வரும் நேரத்தில், அழகுவை ரொம்பவுமே கிண்டலடிப்பார். இவர் செய்யும் கேலியில் அந்தக் கும்பல் ரசித்து ஆரவாரத்துடன் சிரித்துக் கைகொட்டும். சாதாரணமாக டீ சாப்பிட வருபவர்கள் கூட, உட்கார்ந்து இரண்டு மசால்வடையும் சேர்த்து சாப்பிட்டுவிட்டுப் போனார்கள். வாழ்க்கை இப்படியே ஓடிக் கொண்டிருந்தது.

வருடா வருடம் வரும் கோயில் திருவிழா இந்த வருடமும் வந்தது. டீக்கடைக்கு எதிரே தான் கோயில். திருவிழாவுக்கு கடைகள் நிறையப் போடப்பட்டன. சைக்கிள் பந்தயம், குடை ராட்டினம் என்று மக்கள் கூட்டம் அதிகமானது. டீக்கடைக்கும் கணிசமான வருமானம் கிடைத்தது.

அன்று நாயர், டீ போட்டுக் கொண்டிருக்கும்போதுதான் வந்தான்.

"என்ன நாயரே? உமக்கு நான் கொடுத்த கெடு இன்னியோட முடியுது. இத்தனை நாள் பழகிய பழக்கத்துக்காக உனக்கு டைம் கொடுத்திருந்தேன். ஆனா நாளைக்குக் காலைல பணம் என் கைக்கு வந்தாகணும். இல்லைன்னா நாளையிலேர்ந்து கடையை என் வசத்துக்கு எடுத்துக்குவேன். காலைல சரியா பத்து மணிக்கு வருவேன். பணமில்லேன்னா கடையைப் பூட்டிச் சாவியை எடுத்து வை", என்று சத்தம் போட்டு விட்டுப் போனான்.

நாயருக்கு அதிர்ச்சி. சேட் இவ்வளவு கறாராக இருப்பான் என்று எதிர்பார்க்கவில்லை. சொன்னால் கேட்டுக் கொள்வான் என்று அலட்சியமாக இருந்தது தப்பாகி விட்டது.

அதன் பிறகு, காலேஜ் பையன்கள் டீ சாப்பிட வந்தபோது, அவர்களிடம் மெல்ல கேட்டுப் பார்த்தார். ஆயிரம் ரூபாய் என்பது அவர்களுக்குப் பெரிய விஷயமல்ல. நினைத்தால் ஆளுக்கு இருநூறு ரூபாய் போட்டாலே

போதும். ஆனால் நிர்தாட்சண்யமாகக் கை விரித்து விட்டனர்.

ஊரில் தெரிந்த பெரிய மனிதர்களைக் கேட்டுப் பார்த்தார். "கோயில் திருவிழா அது இதுவென்று ஏகப்பட்ட செலவு" என்றனர். சரி, யோசித்துக் கொண்டிருக்க நேரமில்லை. சேட் சொன்னதைச் செய்வான். கடைக்கு அரை நாள் விடுமுறை விட்டுவிட்டு, பக்கத்து ஊருக்குக் கிளம்பிப் போனார். மச்சினனிடம் கேட்டால் நிச்சயம் கிடைக்கும் என்ற நம்பிக்கை இருந்தது. பஸ்ஸில் ஏறி உட்கார்ந்து கொண்டார்.



இரண்டு வருடங்களுக்கு முன்பு, அவருக்கு வயிற்றில் நடந்த ஒரு ஆபரேஷனுக்காக, இந்த சேட்டிடம் டீக்கடையை அடமானம் வைத்து கடன் வாங்கியிருந்தார். ஆபரேஷன் முடிந்து கடையைத் திரும்பத் திறந்து லாபம் பார்த்தாலும், சேட்டின் கடனை அடைக்க முடியாமற் போனது.

அன்றாட வருமானத்தில் மறு நாள் பால், மளிகை சாமான்கள் வாங்கத்தான் சரியாக இருந்தது. கொஞ்சம் பணத்தை அடைத்துவிட்டார். இன்னும் ஆயிரம் தான் பாக்கி. ஆனால் அந்த ஆயிரத்தை, ஆறுமாதமாய்க் கொடுக்க முடியாமல் தள்ளிக் கொண்டே போனது.

சேட்டிற்கு இந்த டீக்கடையின் மேல் ஒரு கண். அதனால்தான் இந்தச் சாக்கை வைத்து கடையைக் களவாடப் பார்க்கிறான் என்று நினைத்துக் கொண்டார்.

ஒரு வழியாக மச்சினனின் வீட்டை அடைந்தார். அவர் வருகையை விரும்பவில்லை என்பதை, அவன் முகமே காட்டியது.

அவன் தோற்றத்தையும், வீட்டின் உள்ளே இருந்த வசதிகளையும் பார்த்ததுமே, அவனால் ஆயிரம் என்ன, ஐம்பதாயிரம் கூட தர முடியும் என்று தெரிந்தது. ஆனால் அவனோ, மூன்று மாதமாய் வீட்டு வாடகை பாக்கி உள்ளதாகச் சொன்னான்.

கடைசி பஸ் முன்பே போய் விட்டதால், அங்கேயே தங்கும்படியான கட்டாயம் ஏற்பட்டது.

மறுநாள் விடியற்காலையில் முதல் பஸ்ஸுக்குக் கிளம்பினார். பஸ் ஏற்றி விட வந்த மச்சினன் காபி வாங்கித் தந்தபோது, அதற்கான காசை இவரே கொடுத்தார்.

சேட் வந்து சத்தம் போட்டு ரகளை செய்து, சாவியை வாங்கிக் கொள்ளும் முன், தாமாகவே கொண்டு போய் கொடுத்து விடலாம் என்று, சேட்டின் வீட்டுக்குப் போனார்.

சேட் எங்கேயோ அவசரமாக வெளியே கிளம்பிக் கொண்டிருந்தான். இவரைப் பார்த்ததுமே சேட், வாயெல்லாம் பல்லாக, "யோவ் நாயரே! நீ ரொம்பவும் மானஸ்தன் தான்யா. பணத்தை சொன்ன டயத்துக்கு கொடுத்துவிட்டீரே," என்றான்.

சேட் கிண்டல் செய்வதாகத் தோன்றியது. அவர் பேச ஆரம்பிக்கும் முன், சேட்டே பேசினான்.

"நீ கொடுத்தனுப்பிய பணத்தை உன் கடை பையன், அதான்யா, அந்த ரெட்டை மண்டை, அவன் கொண்டு வந்து கொடுத்துட்டான். சரியா ஆயிரம் ரூபாய் இருந்தது. உன் கணக்கு வட்டியோட சரியாப் போச்சு. இந்தா உன் கடைப் பத்திரம்" என்று நாயரின் கையில் திணித்து விட்டு, "நா அவசரமா வேறொரு கடன் வசூல் பண்ணப் போயாகணும்", என்று சைக்கிளில் ஏறி பறந்துவிட்டான்.

நாயருக்கு ஒன்றும் புரியவில்லை. சேட்டிற்கு ஏதாவது மூளைக் கோளாறு ஆகி விட்டதா, அல்லது தான் இன்னும் பஸ்ஸில் தூங்கிக் கொண்டே கனவு காண்கிறோமோ, என்று சந்தேகம் வந்தது.

அப்போது அந்த வழியாக வந்த அவரது நண்பர், "என்ன நாயரே! இன்னிக்கு டீக்கடை உண்டுல்ல? ஆனா இன்னிக்கு கடையில நீதான் முழுக்க முழுக்க வேலை பாக்கற மாதிரியிருக்கும். ஏன்னா, அந்த அழகுப் பய இன்னும் ரெண்டு நாளைக்கு எழுந்திரிக்க மாட்டான்'' என்றார்.

புரியாமல் பார்த்த நாயரை, "திருவிழா சைக்கிள் பந்தயத்துல சாயங்காலம் ஆறு மணியிலேயிருந்து, காலையில ஆறு மணி வரைக்கும் கீழே இறங்காம, சைக்கிளையும் நிறுத்தாம, முழு ஸ்பீடுல ஓட்டிகிட்டே சுத்தி வரணும். அந்தப் பந்தயத்துல ஜெயிக்கிறவங்களுக்கு ஆயிரம் ரூபாய் பரிசுன்னு அறிவிச்சிருந்தாங்க.

"இந்த அழகுப் பய ஆளு பாக்கத்தான் இப்படி இருக்கான். என்ன வேகமா பெடல் போட்டான் தெரியுமா? சைக்கிள்ல உட்கார்ந்து கிட்டே குரங்கு பெடல் போடறதும், கோமாளிவேல காட்டறதுமா, விடாம வெறி பிடிச்ச மாதிரி ஓட்டி ஜனங்களையும் நகர விடாம பண்ணி, காலையில ஆயிரம் ரூபாயை வாங்கிக்கிட்டுதான் இறங்குனான்னா பாத்துக்கோயேன்!

"ஆனா ஒண்ணு. அந்தப் பய கையில இப்ப ஆயிரம் ரூபாய் காசு இருக்கு. வேற எங்காவது வேலைக்குப் போயிடப் போறான். மெதுவா தாஜா பண்ணி அமுக்கிப் போட்டுக்க. பணத்தையும் நீ உபயோகப்படுத்திக்கலாம்" என்றார்.

நாயர் ஆடிப்போனார். பதில் பேசாமல் வழக்கமாக அழகு தூங்கும் இடத்தைத் தேடிப் போனார்.

திண்ணையில், அழகு கால்களைக் குறுக்கிக் கொண்டு, கையை மடக்கித் தலைக்கு வைத்து படுத்திருந்தான். அருகே போய் உட்கார்ந்து கொண்டார். தூங்கும்போது கூட கண்கள் திறந்து, வாய் பிளந்து, பற்கள் வெளியே துருத்திக் கொண்டிருந்தன. ஆனால் நாயரின் கண்களுக்கு, அழகு, இப்போது ரொம்பவும் அழகாகத் தெரிந்தான். ●

''ஏண்டா இப்படி திடீர்னு சொத்தைப் பிரிச்சுக் கொடுக்கச் சொல்றியே நியாயமா?''

''சட்டப்படி நியாயமோ இல்லியோ, தார்மிக நெறிப்படி நியாயம்தான்!''

- ரா.பி. கிருஷ்ணசாமி



புக் பேஸ்க்



தீராநதி நேர்காணல்கள் - மணா

தீராநதி இதழில் வெளியான பேட்டிகளின் தொகுப்பு. ஆழமான, அறிவு சார்ந்த பல பேட்டிகள். அவசியம் படிக்க வேண்டியவை.

மோகனா, 10, கபூர் தெரு, ராயப்பேட்டை, சென்னை - 14, விலை ரூ.80/-

மனிதநேயம் - மீ. விஸ்வநாதன்

தமிழ்க் கவிதைக்கு ஒட்டுத்துணியுடுத்தி ஹைக்கூ என உலவ விடும் இன்றைய இலக்கிய உலகில், பட்டுத் துகிலுடுத்தி, பொட்டும் பூவும் சூட்டி, பாங்காக நடை பழக வைத்திருக்கும் கவிதைகள். அதிலும் அட்டையிலிருப்பது போல், மரக்கிளையின் நடுவே நின்று பாடும் சிட்டுப் போல, மனங்களின் நடுவே மனித நேயம் பாடும் கவிதைகள்.

விஷ்வதீபம், 3பீ அக்ஷயா, ராயல் ஸ்பிரிங் 85, முதல் அவென்யூ, இந்திராநகர், சென்னை - 20, விலை ரூ.35/-

கேட்டவரம் தரும் வேளாங்கண்ணி மாதாவும், நாகூர் ஆண்டவரும் - எடையூர் சிவமதி

தமிழக வரலாற்றில் நாகைக்கு என்றும் தனிச் சிறப்பிடமொன்று உண்டு. பல நாட்டவரும் வந்திறங்கிய துறையாக இருந்ததால் ஜாதி, மத, சமய வேறுபாடுகள் தலையெடுத்ததில்லை அங்கு. நாகை காயாரோகணரும், அவரைச் சுற்றியுள்ள பன்னிரு சிவத்தலங்களும், வைணவத் தலங்களும், சூளாமணி விஹாரமும் போதாதென்று, போர்த்துகீசியர் வந்து அன்னை மரியாளுக்குக் கட்டிய ஆலயமும், மகான் ஷாகுல் ஹமீதின் தர்காவும் அந்த நேசம் வளர்ந்த மண்ணின் வாசம் இன்னும் வாழ்கிறது என்று விளக்கும் நூல்.

மணிமேகலை பிரசுரம், 7. தணிகாசலம் தெரு, தி.நகர், சென்னை - 17, விலை ரூ.34/-

உபநிடதங்களின் செய்தி - சுவாமி ரங்கநாதானந்தர்

வேதாந்தமும், ஆன்மிகமும், விஞ்ஞானத்துடன் வேறுபட்டது என்பது பொதுவான கருத்து. ஆனால் அது எத்தனை தவறு எனபதைத் தமது ஒவ்வொரு உரையிலும் விளக்கி, நிரூபித்து வரும் ராமகிருஷ்ண மிஷனின் தலைவர், வேதங்களின் சாரத்தை, ஸத்தியத்தின் ஆழத்தை, விஞ்ஞான ரீதியாக, யதார்த்த வாழ்வின் வடிவங்களாக, நடைமுறைப் படுத்த வழங்கிய உரைகளின் தொகுப்பு.

ஸ்ரீராமகிருஷ்ண மடம், மயிலாப்பூர், சென்னை - 4, விலை ரூ.200

பூத உலா - பா. செயப்பிரகாசம்

பாளைக்கடியிலிருக்கும் வெட்டி வேரின் வாசம், பருகும் நீரில் மணப்பது போல, தெற்கத்திப் படைப்பாளிகளின் எழுத்தில் ஊர் வாசம் மணக்காமலிருக்காது. சார்ந்தவை, வாழ்ந்தவை, கண்டவை, தின்றவை, என அடிமனத்தின் ஆழத்தில் ஊறிக்கிடப்பவை சுழல் சுழலாக வெளிப்பட்டு, படிப்பவரையும் இழுத்துக் கொண்டே போய் விடுகிறது. எளிமையான நடையில் வலிமையாகப் பதிகிற மானுட தர்மங்களைச் சொல்லும் லாகவம் எழுத்தில் முழுவதுமாகப் படர்ந்து கிடக்கிறது. பாத்திரங்களும், சம்பவங்களும் படித்து முடித்த பின்னும் நினைவில் பாதிப்பைப் பரப்பிவிடுகின்றன.

அகரம், மனை எண்.1, நிர்மலா நகர், தஞ்சை - 7, விலை ரூ.70/-

- விஷ்வக்



• உஷா

என்ன இது? என்ன இது?



• பாம்பே ஞானம்



• வித்யா - ரமேஷ் விநாயகம்

பொதிகையில் 'பொதிகை காலிங்' நிகழ்ச்சியில் டெலிபோனில் உரையாடும் வித்யாவை ஒரு நாள் நேயரொருவர் கட்டாயப்படுத்தி, பாட வைத்துவிட்டார். இவர் பாடியது நள தமயந்தி படத்திலிருந்து 'என்ன இது.. என்ன இது!'

வித்யா தெரிந்தே பாடினாரா, தெரியாமல் பாடினாரா தெரியாது. இப்போது அந்தப் பாடலை இயற்றியவரும் இசையமைப்பாளருமான ரமேஷ் விநாயகத்தை மணந்திருக்கிறார்!

சீரியல்களில் அம்மா, அத்தை, மாமி ரோல்கள் என்றால், உடனே 'கூப்பிடு பாம்பே ஞானத்தை' என்கிறார்கள். அம்மணி படு பிஸி. இதற்கிடையில் தனது மகாலட்சுமி லேடிஸ் டிராமா ட்ரூப் சார்பில் மேடை நாடகங்களும் போட்டுக் கொண்டிருக்கிறார். இந்த அனைத்து மகளிர் நாடகக் குழுவின் லேட்டஸ்ட் நாடகம், 'நல்லதோர் வீணை செய்து'.

எஸ்எஸ். மியூஸிக் சேனலில் புதிதாய் சேர்ந்துள்ள தொகுப்பாளினி உஷா, பெங்களூர் பொண்ணு. சுற்றுச்சூழலில் பட்டப்படிப்பு. அப்புறம் மாஸ் கம்யூனிகேஷனில் எம்.ஏ. பரதநாட்டியம் தெரியும்.

எஸ்.எஸ். மியூஸிக்கிற்கு நிகழ்ச்சித் தயாரிப்பாளராக வேண்டும், என்று விண்ணப்பித்தவரின் பேச்சில் மயங்கி அள்ளிக் கொண்டது சேனல். பொது இடங்களில், தன்னை அடையாளம் கண்டுகொண்டு நிறையப் பேர் 'ஹாய்!' சொல்வதில் இவருக்குச் சந்தோஷம். "கொஞ்ச நாளாக பரதநாட்டியம் பிராக்டிஸ் பண்ண முடியலை. இனி மேல் டான்ஸுக்கு கொஞ்சம் நேரம் ஒதுக்கணும்" என்கிறார் உஷா!

ராஜ், ஜெயா சேனல்களின் நிகழ்ச்சிகளை வாங்கி, பிரான்ஸில் ஒளி பரப்பும் டிஷ் ஏசியா நெட்வொர்க் நிறுவனம் இப்போது சென்னையில் தப.து அலுவலகத்தைத் துவக்கியிருக்கிறது. "பிரான்ஸில் பாண்டிச்சேரி தமிழர்கள் அதிகமாக இருக்கிறார்கள். அவர்களுக்காக பாண்டிச்சேரி செய்தியையும், அங்குள்ள அடுத்த தலைமுறையினர் தமிழை மறக்காமலிருப்பதற்கான சிறப்பு நிகழ்ச்சிகளையும், இங்கிருந்தே தயாரிக்கப் போகிறோம்" என்கிறார் இந்நிறுவனத்தின் தலைவர் குகநாதன். சென்னையிலிருந்து வி.ஐ.பி.களின் லைவ் பேட்டியையும், அவர்களுடன் ஐரோப்பாவிலுள்ள தமிழர்கள் ஃபோனில் நேரடித் தொடர்பு கொள்ளும் நிகழ்ச்சியையும் ஏற்பாடு செய்யப் போகிறதாம் இந்நிறுவனம்.

- கௌதம் ராம்

சிவகாமியின் சபதம்



நாற்பத்தொன்பதாம் அத்தியாயம்

பட்டணப் பிரவேசம்

கமலி முன் தடவையைக் காட்டிலும் இந்தத் தடவை தங்கை சிவகாமியிடம் அதிக அன்பும் ஆதரவும் காட்டினாள்.

முன் தடவை அவள் கண்ணனுடைய அகால மரணத்தைப் பற்றி அப்போது தான் கேள்விப்பட்டபடியால் அழுகையும் அலறலும் ஆத்திரமும் ஆங்காரமுமாயிருந்தாள். அடிக்கடி சிவகாமியைப் பார்த்து, "அடி பாதகி! உன்னையும் கெடுத்துக் கொண்டு என்னையும் கெடுத்து விட்டாயே? நீ முன்னமே செத்திருக்கக் கூடாதா!" என்று திட்டினாள். சிவகாமி பொறுமையாயிருந்ததுடன் தானும் அவளோடு சேர்ந்து அழுது தன்னைத் தானே நொந்து கொண்டும் திட்டிக் கொண்டும் கமலிக்கு ஒருவாறு ஆறுதல் அளித்தாள்.

இந்த முறை கமலி சிறிது ஆறுதலும் அமைதியும் அடைந்திருந்தாள். வாதாபியில் சிவகாமியின் வாழ்க்கையைப் பற்றி விவரமாகச் சொல்லும்படி வற்புறுத்தினாள். கண்ணன் மரணமடைந்த வரலாற்றைப் பற்றியும் விவரமாகக் கேட்டுத் தெரிந்து கொண்டாள். கண்ணனுடைய உயர்ந்த குணங்களைப் பற்றியும் கமலியிடம் அவன் கொண்டிருந்த அளவில்லாத காதலைப் பற்றியும் மூச்சு விடாமல் அந்தத் தோழிகள் பேசிக் கொண்டிருந்தார்கள்.

ஒரு சமயம், வெளியிலே போயிருந்த

அமரர் கல்கி

சின்னக்கண்ணன், "அம்மா! அம்மா!" என்று கூவிக் கொண்டு உள்ளே ஓடி வந்தான். கமலி அவனை வாரி அணைத்துக் கொண்டு "தங்காய்! இனிமேல் உனக்கும் எனக்கும் இந்தப் பிள்ளைதான் கதி. இவன் வளர்ந்து பெரியவனாகித் தான் நம் இருவரையும் காப்பாற்ற வேண்டும்" என்றாள்.

அதைக் கேட்டதும் சிவகாமிக்குச் 'சுரீர்' என்றது. கமலி அக்கா ஏன் இப்படிச் சொல்கிறாள்! அவள் கணவனை இழந்த காரணத்தினால் தானும் அவளைப் போலவே ஆகி விட வேண்டுமா? மாமல்லரையும் அவருடைய இன்பக் காதலையும் தான் வெறுத்து விட வேண்டுமா?

இவ்விதம் சிவகாமி எண்ணமிட்டுக் கொண்டிருந்தபோது வீதியில் வாத்திய முழக்கங்களும், ஜயகோஷங்களும், ஜனங்களின் கோலாகல த்வனிகளும் கலந்த ஆரவாரம் கேட்டது.


ஏற்கெனவே ஆயனர் மூலமாகச் சக்கரவர்த்தியின் பட்டணப் பிரவேச ஊர்வலத்தைப் பற்றிச் சிவகாமி தெரிந்து கொண்டிருந்தாள். அதைப் பார்க்க வேண்டுமென்று அவளுக்கு மிக்க ஆவலாயிருந்தது.

"அக்கா! நாமும் பலகணியருகில் போய் ஊர்வலத்தைப் பார்க்கலாம்!" என்றாள்.

"உனக்கும் எனக்கும் பட்டணப் பிரவேசமும் ஊர்வலமும் என்ன வேண்டிக் கிடக்கிறது? பேசாமலிரு!" என்றாள் கமலி.

கண்ணனை இழந்ததனால் மனம் கசந்து போய்க் கமலி அப்படிப் பேசுகிறாள் என்று சிவகாமி நினைத்தாள்.

"என்ன அப்படிச் சொல்கிறாய், அக்கா! சக்கரவர்த்தி என்னுடைய சபதத்தை நிறைவேற்றுவதற்காக எத்தனை



பாடுபட்டார்? அவருடைய விஜயோற்சவத்தை நகரத்து மக்கள் எல்லாம் கொண்டாடும்போது நாம் மட்டும்...''

கமலி குறுக்கிட்டு, "நீயுமாச்சு, உன் சபதமும் ஆச்சு, உன் சக்கரவர்த்தியும் ஆச்சு! அடி பைத்தியமே! உனக்கு மானம், ரோஷம் ஒன்றுமில்லையா? வாதாபியிலேயே எல்லாவற்றையும் பறிகொடுத்து விட்டு வந்தாயா?'' என்றாள்.


கமலி இப்படிப் பேசியது சிவகாமிக்குச் சிறிதும் விளங்காமல் மேலும் மனக் குழப்பத்தை அதிகமாக்கிற்று.

கமலி மேலும், "அடி தங்காய்! நீயும் மாமல்லரும் கல்யாணம் செய்து கொண்டு தங்க ரதத்தில் நவரத்தினக் குடையின் கீழ் உட்கார்ந்து ஊர்வலம் வர, உன் அண்ணன் ரதம் ஓட்டும் காட்சியைக் கண்ணால் பார்க்க வேண்டுமென்று ஆசைப்பட்டேனே! அது நிராசையாகிப் போய் விட்டதே'' என்று கண்ணில் நீர் ததும்பக் கூறியபோது, அவள் கண்ணன் மரணத்தை எண்ணித்தான் இப்படி மனங்கசந்து பேசுகிறாள் என்று சிவகாமி மௌனமாயிருந்தாள்.

சற்று நேரத்துக்கெல்லாம் ஊர்வலம் அருகிலேயே வந்துவிட்டதாகத் தோன்றியதும் சிவகாமி தனது ஆவலை அடக்க முடியாதவளாய் எழுந்து பலகணியை நோக்கிச் சென்றாள். கமலியும் அவளைத் தொடர்ந்து போனாள்.

வீதி வழியே வந்த சக்கரவர்த்தியின் பட்டணப் பிரவேச ஊர்வலம் கண்கொள்ளாக் காட்சியாயிருந்தது.

ஊர்வலத்தின் முன்னணியில் ஜய பேரிகைகளை முதுகில் சுமந்து சென்ற பிரும்மாண்டமான ரிஷபங்களும், அலங்கார யானைகளும் குதிரைகளும்,



ஒட்டகங்களும் அவற்றின் பின்னால் பலவகை வாத்திய கோஷ்டிகளும், கொடிகளும், விருதுகளைத் தாங்கிய வீரர்களும் போவதற்கு ஒரு நாழிகைக்கு மேல் ஆயிற்று.

பிறகு அரபு நாட்டிலேயிருந்து வந்த அழகிய வெண்புரவிகள் பூட்டிய சக்கரவர்த்தியின் தங்கரதம் காணப் பட்டதும் வீதியின் இருபுறத்து மாளிகை மாடங்களிலிருந்தும் குடிமக்கள் புஷ்ப மாரி பொழிந்தார்கள். மங்களகரமான மஞ்சள் அரிசியும் நெல்லும் பொரியும் தூவினார்கள். இனிய மணம் பொருந்திய சந்தனக் குழம்பை வாரித் தெளித்தார்கள். "வாதாபி கொண்ட மாமல்ல சக்கர வர்த்தி வாழ்க! வீராதி வீரர் நரசிம்ம பல்லவேந்திரர் வாழ்க!" என்பன போன்ற எத்தனையோ விதவிதமான ஜயகோஷங்கள் வானத்தை எட்டும்படி பதினாயிரம் குரல்களிலே எழுந்தன.

சக்கரவர்த்தியின் ரதம் அருகில் வந்து விட்டது என்று அறிந்ததும் சிவகாமியின் இருதயம் வேகமாக அடித்துக் கொள்ள ஆரம்பித்தது. தங்க ரதத்திலே பூட்டிய அழகிய வெண் புரவிகளையே சற்று நேரம் அவள் பார்த்துக் கொண்டிருந் தாள். மிக்க பிரயத்தனத்துடன் கண் களைத் திருப்பி அந்தத் தங்க ரதத்திலே அமைந்திருந்த ரத்தின சிம்மாசனத்தை நோக்கினாள்.

ஆகா! இது என்ன? சக்கரவர்த்திக்கு அருகிலே அவருடன் சரியாசனத்திலே வீற்றிருக்கும் அந்தப் பெண்ணரசி யார்?

சிவகாமியின் தலை சுழன்றது! பலகணி வழியாக வீதியிலே தெரிந்த வீடுகள் எல்லாம் சுழன்றன; தங்க ரதம் சுழன்றது. அதற்கு முன்னும் பின்னும் வந்த யானை, குதிரை, பரிவாரங்கள் எல் லாம் சுழன்றன; கூட்டமாக வந்த ஜனங் களும் சுழன்றார்கள்.

சிவகாமி சுவரைக் கையினால் கெட்டி யாகப் பிடித்துக் கொண்டு மறுபடியும் நன்றாகப் பார்த்தாள். உண்மைதான்; அவளுடைய கண் அவளை ஏமாற்ற வில்லை.

மாமல்லருக்குப் பக்கத்திலே ஒரு பெண்ணரசிதான் உட்கார்ந்திருக்கிறாள். ஆஹா! எத்தகைய அழகி அவள்! முகத்திலேதான் என்ன களை! ரம்பையா, இந்திராணியோ, அல்லது மகாலக்ஷ் மியே தானோ என்றல்லவா தோன்று கிறது!

"அவள் யார், அக்கா? சக்கரவர்த் தியின் பக்கத்திலே உட்கார்ந்திருக் கிறவள்?" என்ற வார்த்தைகள் சிவ காமியின் அடித் தொண்டையிலிருந்து கம்மிய குரலில் வெளி வந்தன.

"இது என்ன கேள்வி? அவள்தான் பாண்டியகுமாரி; மாமல்லரின் பட்ட மகிஷி. வேறு யார் அவர் பக்கத்திலேயே உட்காருவார்கள்?" என்றாள் கமலி.

"அக்கா! அவருக்குக் கலியாணம் ஆகி விட்டதா? எப்போது?" என்ற சிவ காமியின் கேள்வியில் எல்லையில்லாத ஆச்சரியமும் ஆசாபங்கமும் மனக் குழப்பமும் கலந்து தொனித்தன.

"அடி பாவி! உனக்குத் தெரியாதா என்ன? யாரும் சொல்லவில்லையா? உனக்கு எல்லாம் தெரியும் என்றல்லவா நினைத்தேன்! மாமல்லருக்குக் கலி யாணம் ஆகி வருஷம் ஒன்பது ஆயிற்றே? அந்தச் சதிகார மகேந்திர பல் லவன், மகனுக்குக் கலியாணத்தைப் பண்ணி விட்டுத்தானே கண்ணை மூடி னான்!" என்றாள் கமலி.

"அவரை ஏன் திட்டுகிறாய், கமலி! நல்லதைத்தான் செய்தார் மகேந்திரர். இப்போதுதான் எனக்கு உண்மை தெரி கிறது; என்னுடைய அறிவீனமும் தெரி கிறது!" என்று சிவகாமியின் உதடுகள் முணுமுணுத்தன.

"என்னடி உளறுகிறாய்? மகேந்திரர் நல்லதைச் செய்தாரா? குடி கெடுக்க அஞ்சாத வஞ்சகராயிற்றே அவர்?" என்றாள் கமலி.

சிறிது நேரம் வரையில் சிவகாமி கண் ணைக் கொட்டாமல் இராஜ தம்பதி களைப் பார்த்தவண்ணம் நின்றாள்.

தங்க ரதம் மேலே சென்றது. அடுத்தாற்போல் பட்டத்து யானை வந்தது. அதன் மேல் அமர்ந்திருந்த குழந்



தைகளைப் பார்த்து "இவர்கள் யார்?" என்றாள் சிவகாமி.

"வேறு யார்? பல்லவ குலம் தழைக்கப் பிறந்த பாக்கியசாலிகள்தான். மாமல்லருக்கும் பாண்டிய குமாரிக்கும் பிறந்த குழந்தைகள். மகனுடைய பெயர் மகேந்திரன்; மகளின் பெயர் குந்தவி. இதெல்லாம் உனக்குத் தெரியவே தெரியாதா?"

சிவகாமி மேலே ஒன்றும் பேசவில்லை. அவளுடைய உள்ளம் "ஆகா! அப்படியானால் பல்லவ குலத்தின் சந்ததியைப் பற்றிக் கவலையில்லை!" என்று எண்ணியது.

அதே சமயத்தில் அவளுடைய இருதயத்தில் ஏதோ ஒரு நரம்பு 'படார்' என்று அறுபட்டது.

பட்டத்து யானைக்குப் பின்னால் இன்னொரு யானை வந்தது. அதன் அம்பாரியில் புவனமகாதேவியும் மங்கையர்க்கரசியும் இருந்தார்கள்.

"இராஜ மாதாவுக்கு அருகில் உள்ள பெண்ணைப் பார்த்தாயா, சிவகாமி! அவளுக்கு அடித்த குருட்டு யோகத்தை என்னவென்று சொல்லட்டும்? பழைய சோழ குலத்தைச் சேர்ந்தவளாம். மங்கையர்க்கரசி என்று பெயராம். நெடுமாற பாண்டியனை இந்த அதிருஷ்டக்காரி மணந்து கொள்ளப் போகிறாளாம். எப்படியும் இராஜ குலத்திலே பிறந்தால் அந்த மாதிரி வேறேதான்!" என்று



சொல்லி வந்த கமலி, சிவகாமி அங்கே யிருந்து நகர்ந்து செல்வதைப் பார்த்து, "அடியே! ஏன் போகிறாய்?" என்றாள்.


உண்மையில் கமலி கடைசியாகச் சொன்னது ஒன்றும் சிவகாமியின் காதில் விழவில்லை. பட்டத்து யானை மீதிருந்த குழந்தைகளையே பார்த்துக் கொண்டிருந்துவிட்டு, அந்த யானை நகர்ந்ததும் பலகணியின் பக்கத்திலிருந்து புறப்பட்டுச் சென்றாள். வீட்டு முற்றத்தின் ஓரத்தில் உட்கார்ந்து வெகுநேரம் வரை சித்தப் பிரமை கொண்டவள் போலச் சிலையாகச் சமைந்திருந்தாள்.


ஊர்வலம் முழுதும் போன பிறகு கமலி அவளிடம் வந்து சேர்ந்தாள். "அடி பெண்ணே, ஏன் இப்படி உட்கார்ந்திருக்கிறாய்? ஒரு குரல் அழுது தொலையேன்! சக்கரவர்த்தியைக் காதலித்ததனால் என்ன? அழுவதற்குக் கூடவா உனக்குப் பாத்தியதை இல்லாமற் போயிற்று?" என்று கேட்டாள்.

சிவகாமிக்கு எங்கிருந்தோ திடீரென்று அழுகை வந்தது! வறண்டிருந்த கண்களில் கண்ணீர் வெள்ளமாகப் பெருகத் தொடங்கிற்று.

கமலியின் மடியில் குப்புறப்படுத்துக் கொண்டு விம்மி விம்மி அழுதாள். ஒரு நாழிகை நேரம் அழுத பிறகு விம்மல் நின்றது. கண்ணீரும் ஓய்ந்தது.

சிவகாமியின் இருதயத்திலிருந்து ஒரு







பெரிய பாரம் இறங்கிவிட்டது போலத் தோன்றியது. இதற்கு முன் அவள் என்றும் அறியாத அமைதியும் சாந்தமும் உள்ளத்திலே குடிகொண்டன.

ஐம்பதாம் அத்தியாயம்

தலைவன் தாள்

அன்று மாலை ஆயனரிடம் சிவகாமி தனியாக வந்து, "அப்பா நான் கல்யாணம் செய்து கொள்ள வேண்டும் என்று சொன்னீர்கள் அல்லவா? அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யுங்கள்!" என்றாள்.

ஆயனருக்கு அகம் நிறைந்த மகிழ்ச்சியினால் மூச்சு நின்று விடும் போலிருந்தது. சிவகாமியை உற்று நோக்கி அவளுடைய முக மலர்ச்சியையும் பார்த்து விட்டு, "அதற்கென்ன, குழந்தாய்! கூடிய விரைவில் உனக்குத் தக்க நாயகனைத் தீர்மானித்து, மணம் செய்து வைக்கிறேன்!" என்றார்.

"அப்பா! எனக்கு நாயகனைத் தேர்ந்தெடுக்கும் சிரமத்தைத் தங்களுக்கு நான் வைக்கவில்லை. ஏகாம்பர நாதரையே என் பதியாக ஏற்றுக் கொண்டேன்!" என்றாள் சிவகாமி.

தம் அருமை மகளுக்குச் சித்தப் பிரமை முற்றி விட்டதோ என்று ஆயனர் ஐயமடைந்தார். இன்னும் சிறிது பேசி அவள் தெளிந்த அறிவுடன் இருக்கிறாள் என்பதைக் கண்டார். இது சித்தப்பிரமை அல்ல - பக்தியின் முதிர்ச்சிதான் என்று நிச்சயமடைந்தார்.

அச் சமயம் திருநாவுக்கரசர் பெருமான் அருகில் உள்ள ஒரு சிவஸ்தலத்திலேதான் இருக்கிறார் என்று அறிந்து அவரிடம் சென்று ஆயனர் யோசனை கேட்டார்.

வாகீசர் எல்லாவற்றையும் கேட்ட பின்னர், "ஆயனரே! உமது குமாரியின் விஷயத்தில் என் மனத்தில் தோன்றியது உண்மையாய்ப் போய்விட்டது. மானிடப் பெண் யாரும் அடைந்திருக்க முடியாத துன்பங்களை அவள் அடைந்து விட்டாள். இனி அவளுக்கு அத்தனை துன்பங்களுக்கும் இணையான பேரின்பம் காத்திருக்கிறது. உம்முடைய குமாரிக்குச் சிவகாமி என்று பெயர் இட்டீர் அல்லவா? அதற்கேற்ப அவள் சிவபெருமானிடமே காதல் கொண்டு விட்டாள். அவளுடைய விருப்பத்துக்கு இடையூறு செய்யாமல் நிறைவேற்றி வையுங்கள். அதுதான் சிவகாமிக்கு நீர் செய்யக்கூடிய பேருதவி!" என்று அருளினார்.

திங்கள் மூன்று சென்ற பிறகு, வாதாபி வெற்றியின் கோலாகலக் கொண்டாட்டங்கள் எல்லாம் ஒருவாறு முடிந்த பிறகு, ஒரு நல்ல நாளில் ஏகாம்பர நாதரின் சந்நிதிக்கு ஆயனரும் சிவகாமியும் இன்னும் சிலரும் வந்து சேர்ந்தார்கள்.

கோயில் குருக்கள் சுவாமிக்கு அர்ச்சனையும் தீபாராதனையும் செய்து தட்டிலே பிரசாதம் கொண்டு வந்து கொடுத்தார்.

அந்தத் தட்டில் பழம், புஷ்பம், விபூதி, குங்குமம் ஆகிய பிரஸாதங்களுடனே, ஆயனரின் முன்னேற்பாட்டின்படி, திருமணத்துக்குரிய திருமாங்கல்யமும் இருந்தது.

சிவகாமி அந்தத் திருமாங்கல்யத்தையும் புஷ்ப ஹாரத்தையும் பக்தியுடனே பெற்றுத் தன் கழுத்திலே அணிந்து கொண்டாள்.

பின்னர், நடராஜனாகிய இறைவனுடைய சந்நிதியிலே நின்று சிவகாமி நடனமாடத் தொடங்கினாள்.

சிறிது நேரம் ஆனந்த பரவசமாக ஆடினாள். பிற்பாடு,

"முன்னம் அவனுடைய நாமம்
கேட்டாள்
மூர்த்தி அவனிருக்கும் வண்ணம்
கேட்டாள்"

என்னும் திருநாவுக்கரசரின் திருப்பதிகத்தைப் பாடிக் கொண்டு அதற்கேற்ப அபிநயம் பிடித்தாள்.

சிவகாமி ஆடத் தொடங்கியதிலிருந்து

அருள்வாக்கு

மனிதர்கள் எவ்வளவுக் கெவ்வளவு பகவானிடத்திலிருந்தும் தர்ம நூல்களினின்றும் விலகுகிறார்களோ அவ்வளவுக்கவ்வளவு துன்பங்களுக்கு உள்ளாகிறார்கள் என்றே கண்கூடாகத் தெரிந்து கொண்டிருக்கிறோம். ஸயன்ஸின் அபரிமித அபிவிருத்திக்குப் பிற்பாடு இன்று சர்வதேசத்திலும் ஒரு தத்தளிப்பு, நிம்மதியின்மைதானே அதிகரித்திருக்கிறது. ஐம்பது வருஷத்துக்கு முன் சமுதாயத்திலிருந்த நிச்சிந்தையான, நிம்மதியான செளஜன்யமான வாழ்க்கை இப்போது இல்லவே இல்லை என்கிறதுதானே மிஞ்சி நிற்கிறது? அறிவுச் சக்தியோ பௌதிக ஆற்றலோ அதிகப்பட அதிகப்பட, உலகத்துக்கு ஆபத்தும் அதிகரிக்கிறது என்று நன்றாய்த் தெரிகிறது. சரி, வியாதியைத் தெரிந்து கொண்டோம். இனி மருந்து என்ன? பக்தியும் சாந்தமுமே இவைகளுக்கு எல்லாம் உற்ற மருந்து. உண்மை பக்தியும் சாந்தமும் உலகில் பரவப் பரவ, போலீசுக்கும், நீதிமன்றங்களுக்கும், சைன்யங்களுக்கும் வேலை குறையும். இதுதான் முந்தைய ஐயாயிரம் வருஷம் காட்டுகிற உண்மை.

ஆதலால் ஆட்சி மன்றத்தின் முதற் கடமை பக்தியையும் சாந்தத்தையும் பரவச் செய்வதே.

ஆனால் நடப்பது என்ன? ஆட்சி மன்றத்தினரோ தாம் மதச்சார்பற்றர்கள் என்று தீர்மானித்துக் கொண்டிருக்கிறபடியால் பக்திப் பிரசாரம் அத்தீர்மானத்துக்கு மாறுபட்டதாகி விடுமோ என்று சந்தேகித்து இவ்வழி திரும்பாமலிருக்கிறார்கள். மதச்சார்பின்மை என்றால் ஒரு மதத்தை மட்டும் சாராமல் எல்லா



மதங்களையும் வளர்ப்பது என்று வைத்துக் கொள்ளாமல், எந்த மதத்தையுமே வளர்ப்பதில்லை என்று அர்த்தம் பண்ணிக் கொண்டிருப்பதால் ஏற்பட்ட விளைவு இது.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்

கொஞ்சம் கொஞ்சமாகச் சந்நிதியில் ஜனங்கள் சேரத் தொடங்கினார்கள்.

நடனத்தைப் பார்த்தவர்கள் அனைவரும் மெய்மறந்து பரவசமடைந்து பக்தி வெள்ளத்தில் மிதந்தார்கள்.

அச் சமயம் யாரும் எதிர்பாரா வண்ணமாக, மாமல்ல சக்கரவர்த்தியும் அவ்விடம் வந்து சேர்ந்தார்.

முன்னொரு தடவை இதே பாடலுக்கு அபிநயம் பிடித்துக் கொண்டிருந்தபோது சிவகாமி மாமல்லரின் வரவை அறிந்து அவருடைய நினைவாகவே அபிநயம் செய்ததுண்டு.

இப்போது சிவகாமி மாமல்லர் வந்ததைக் கவனிக்கவேயில்லை.

அவளுடைய கண்களையும் கருத்தினையும் முழுவதும் ஏகாம்பரநாதரே கவர்ந்து கொண்டார்.

வேறு எதுவும் அவளுடைய கண்களுக்குத் தெரியவில்லை; வேறு யாருக்கும் அவளுடைய உள்ளத்தில் இடமிருக்கவில்லை.

மாமல்ல சக்கரவர்த்தி மற்ற எல்லாரையும் போல் சற்று நேரம் தாமும் மெய்மறந்து நின்று சிவகாமியின் அற்புத நடன அபிநயத்தைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

அவருடைய விசால நயனங்களிலே கண்ணீர் ததும்பி அருவி போலப் பெருகத் தொடங்கியது.

தாம் பல்லவ சக்கரவர்த்தி என்பதும், பக்கத்திலுள்ளவர்கள் தம்மைக் கவனிப்பார்கள் என்பதும் அவருக்கு நினைவு வந்தன.

சப்தம் சிறிதும் ஏற்படாதவண்ணம் இறைவனுடைய சன்னிதானத்திலிருந்து மாமல்லர் நழுவிச் சென்றார்.

அவர் ஏகாம்பரர் ஆலயத்தின் பிரதான கோபுர வாசலைத் தாண்டிச் சென்று கொண்டிருந்தபோது,

"தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே"

என்னும் நாவுக்கரசர் பாடலின் கடைசி வரி சிவகாமியின் உணர்ச்சி நிறைந்த இனிய குரலில் கேட்டுக் கொண்டிருந்தது.

(முற்றும்)





• கிராமியப் பாணியில் வெயிட்டிங் ரூம்



• பன்வல் நதிப் பாலம் தாங்கும் அதி உயரத் தூண்கள்

கொங்கணத்தில் கூவும் ரெயில்...!

ஏழு ஆண்டுகள்; எழுநூற்று அறுபது கிலோ மீட்டர்கள் தொலைவு ரெயில் பாதை! இடையில் தொண்ணூற்று ஒரு மலைக் குகைகள்; இரண்டாயிரத்து நூற்று ஐம்பத்து மூன்று பாலங்கள்...! இதுதான் அரபிக் கடலுக்கும் ஸஹ்யாத்ரி மலைகளுக்கும் இடைப்பட்ட பகுதியில், மண் புழுவாய் நெளிந்து ஓடுகிற கொங்கண் ரெயில்வே!

கர்நாடக மாநிலத்து மேற்குக் கோடி மங்களூருக்கு அருகில் தோகூரில் தொடங்கி, மும்பைக்குத் தெற்கேயுள்ள ரோஹா வரை இந்த அழகான ரெயில் பாதை கோவா வழியாகச் செல்கிறது.

வழியெல்லாம் முந்திரிக்காடுகள், தேக்கு மரங்கள், மாமரங்கள், தென்னை மரங்கள் என்று கண்களையும் கருத்தையும் நிறைத்து, ஒரு விதமான கனவு மயக்கத்தை உண்டாக்குகிற பயணம், இந்தப் பாதையில் சென்றால் கிடைக்கும். மங்களூரிலிருந்து கோவா மட்கான் வழியில் இரண்டு கிலோ மீட்டருக்கும் அதிகமான நீளத்தில் ஒரு குகைப் பாதை என்றால், ரத்ன கிரி - ரோஹா இடையில் வருகிற கார்புடே குகைப் பாதையின் நீளம், ஆறரைக் கிலோ மீட்டர்! சிற்றாறுகள், நதிகள், ஆழமான பசுமைப் பள்ளத்தாக்குகள் என்று வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டே பயணம் செய்யலாம்.


பாறைகளைக் குடைந்து அமைக்கப்பட்டுள்ள பாதையாகையால், அழகோடு ஆபத்தும் அதிகமான சூழல். எனவே 'நூறு சத விகிதம்' என்கிற மாதிரி, பாதைப் பாதுகாப்பில் விதம் விதமான முறைகளை அறிமுகப் படுத்தியிருக்கிறார்கள்.

இருபுறமும் பாறையையும் மண் மேடுகளையும் வெட்டிய பாதை போகுமிடங்களில், மண் பாறைச் சரிவுகள் ஏற்படுவது இயல்பே. எனவே 'பௌல்டர் நெட்டிங்' என்கிற வலைத் தடுப்பு முறையை அறிமுகப்



படுத்தியிருக்கிறார்கள். 'கால்வனைஸ்டு' இரும்புக் கம்பிகளால் பின்னப்பட்ட வலைகளை வெட்டப்பட்ட பாறைச் சரிவுகளில் மூடியிருக்கிறார்கள். சரிந்து விழக் கூடிய கற்களை இந்தக் கம்பி வலைகள் தாங்கிப் பிடித்துக் கொள்ளும். 'மழை வெய்யிலால் சேதமடையாமல் இந்தக் கம்பிவலைகள் பன்னிரண்டு ஆண்டுகள் வரை உழைக்கக் கூடியவை' என்றார் பத்திரிகையாளர்களை அழைத்துச் சென்று சுற்றிக் காட்டிய கொங்கண் ரெயில்வேயின் உயர் அதிகாரியான டி.ஜி. திவாடே.

பாறைச் சரிவுகள் இருப்புப் பாதைகளில் மட்டுமின்றி ரெயில் நிலைய நடைமேடைகளிலும்கூட இது போன்ற வலைக் கம்பிகளைப் பெட்டி வடிவில் அமைத்து, அவற்றுக்குள் கற்களை நிரப்பி, அடுக்கடுக்காய்த் தளம்



• ஜுவாரி நதியின் குறுக்கே

அமைத்திருக்கிறார்கள். கம்பி வலை பன்னிரண்டு ஆண்டுகள் உழைக்கும் என்று சொல்லப்பட்டாலும் அதற்கு முன்பே தரையும், பாறைச்சரிவும் உறுதிப்பட்டு விடும் என்பதால், அப்புறம் மண் கல் சரிவுக்கே வாய்ப்பில்லை.

இருப்புப்பாதை நெடுகிலும் கான்கிரீட்டாலான ஸ்லீப்பர் கட்டைகளையே பயன்படுத்தியிருக்கிறார்கள். எந்தவொரு இடத்திலும் தண்ணீர் தேங்காமல் வழிந்தோடி வரும். குகைப் பாதைகளில் கூட இருப்புப் பாதைகளைத் தாங்கி நிற்கும் ஸ்லீப்பர் கட்டைகளுக்கு அடியில், அரை மீட்டர் அளவுக்குப் பள்ளமாக விட்டிருக்கிறார்கள். குகைக்குள் அடித்துக் கொண்டு வரும் மழைநீர், இந்தப் பள்ளத்தின் வழியே தேங்காமல் வெளியேறி விடும். அவ்வப்போது குப்பை அடைப்புக்கள் ஏற்படாமலும் பராமரிக்கலாம் என்கிறார்கள்.

ஷாராவதி நதியின் குறுக்கே கட்டப்பட்டுள்ள பாலத்தின் நீளம் இரண்டு கிலோமீட்டருக்கும் கூடுதலானது. அதேபோல் பன்வால் நதியின் குறுக்கே அமைந்துள்ள பாலத்தை, அறுபத்து நான்கு மீட்டர் உயரத் தூண்கள் தாங்கி நிற்பது ஒரு பொறியியல் சாதனை. பத்துத் தூண்களில் மிக உயரமானது, தில்லிக் குதுப்மினாரை விடவும் உயரமானது என்றால் கற்பனை செய்து கொள்ளுங்கள்.

ஜுவாரி நதியின் மீது ஒரு கிலோ மீட்டர் நீளத்துக்கு அமைக்கப்பட்டுள்ள இரும்புச் சட்டங்களால் ஆன பாலமும், தனிச்சிறப்பு வாய்ந்தது. ஆசியாவிலேயே மிக நீளமான இரும்புப் பாலமான இதை உருவாக்க



• நீளமான குகைப் பாதை

மட்டும் நான்கு ஆண்டுகள் தேவைப்பட்டிருக்கின்றன. இந்தப் பாலத்திற்குப் பராமரிப்பே தேவையில்லையாம். அவ்வப்போது இணைப்புப் பகுதிகளில் எண்ணெய் போட்டால் மட்டும் போதுமாம்.

மங்களூரிலிருந்து மும்பைக்குச் செல்வதற்குத் தேவைப்பட்ட முப்பத்தாறு மணி நேரப் பயணக் காலத்தை, வெறும் பதினாறு மணி நேரமாய்க் குறைக்க முடிந்திருப்பது கொங்கணத்துக் கூவும் ரெயிலின் குறிப்பிடத்தக்க சாதனை.

இன்னும் ஒருபடிமேலே போய், சரக்கு லாரிகளைச் சுமந்து செல்லும் 'ரோல் ஆன் - ரோல் ஆப்' தொடர் வண்டிச் சாதனையையும் செய்து காட்டியிருக்கிறார்கள். கோவாவில் உள்ள வெர்ணா இரயில் நிலையத்திலிருந்து, மும்பை அருகில் உள்ள கோலாடி வரை, நானூற்றுப் பத்து கி.மீ. தொலைவுக்கு இந்த 'ரோ-ரோ' இயங்குகிறது. தினமும் ஒரு தொடர் ஓட்டம், மேலும் கிழமாய்! சாதாரணமாய்ச் சாலைப் பயணத்தில் டிரக் வண்டிகளுக்கு இருபத்து நான்கு மணி நேரம் ஆகிறது. இந்த 'ரோ-ரோ' சவாரிக்கு பத்து மணி நேரம் போதும். டீஸல் செலவு இல்லை, தேய்மானம் இல்லை, சாலை ஆபத்து இல்லை. செலவும் மிச்சமாகிறதே! இந்த 410 கி.மீ. பயணம் போகும் ஒரு டிரக், சுமையோடு இருந்தால் ரூ.5,100, சுமையின்றி இருந்தால் ரூ.4,000 என்று இப்போது கட்டணம் வைத்திருக்கிறார்கள். முப்பத்தைந்து டிரக்குகளை இழுத்துச் செல்லும் 'ரோ-ரோ' நல்ல வருமானமும் தருகிறது.

இன்னும் ஒன்றை அவசியம் குறிப்பிட்டாக வேண்டும். சுற்றுச் சூழல் பாதுகாப்பு. கொங்கண் ரெயில்வேயின் ஒவ்வொரு ரெயில் நிலையமும், காட்சிக்கு இனிய முறையில், தாவரப் பசுமையோடு வித்தியாசமாக வடிவமைக்கப்பட்டுள்ளன! ரெயில் நிலையத்தின் நடைமேடையின் இருபுறமும், கூரைக் குடிசையாகவே 'காத்திருப்பு அறை'யை உருவாக்கியிருக்கிறார்கள்.

கொஞ்சம் மனசைக் கல்லாக்கிக் கொண்டு காண வேண்டிய வித்தியாசமான நினைவிடமும் ரத்னகிரி ரெயில் நிலையத்திற்கு எதிரில் உண்டு. இந்தக் கொங்கண் ரெயில் பாதை உருவான ஏழாண்டுக் காலத்தில், மண் சரிவுகளிலும் மற்ற கட்டுமான விபத்துக்களிலும் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை தொண்ணூற்றைந்து. ஒரு மேற்பார்வையாளரே, மண் சரிவின்போது மற்றவர்களை எச்சரித்து விரட்டி விட்டு, தான் புதையுண்டு போன சோகத்தையும் சொன்னார்கள்.

இந்தத் 'தியாகிகள் நினைவிடம்' ஆண்டுதோறும் அக்டோபர் 14ஆம் நாள், தொழிலாளர்கள், அதிகாரிகள் அனைவரின் அஞ்சலிக்கும் உரியதாகிறது. பூங்காவின் மையத்தில் நிமிர்ந்து நிற்கும் இந்தத் தியாகத் தூணின் நான்குபுறமும், ஹிந்தி, கன்னடம், ஆங்கிலம், மராத்தி மொழிகளில் உயிர்நீத்த உழைப்பாளர்களின் பெயர்களைச் செதுக்கியிருக்கிறார்கள்.

பயணிகளின் பாதுகாப்பு, பணியாளர்களின் தற்காப்பைக் கருத்தில் கொண்டு, பயணச்சீட்டுச் சோதனை அதிகாரிகளுக்கும் நிலைய அதிகாரிகளுக்கும், கராத்தே பயிற்சி தரப்பட்டிருப்பது முக்கியமான செய்தி!

உள்ளூர் மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு, தங்களுடைய உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்வதற்கு தீவா சாவந்த் வாடி, தாதர் - ரத்னகிரி பாஸஞ்சர் வண்டிகளில் எல்லோருக்கும் அனுமதி தரப்பட்டிருக்கிறது. இதுவரை நூறு வியாபாரிகளுக்கு மேல் இத்திட்டத்தினால் பயனடைந்து வருகிறார்கள்.

சொல்லவும் எழுதவும் நிறைய உண்டு. ஒருமுறையேனும் இந்தக் கொங்கணத்தில் கூவும் ரெயிலில் பயணம் போனால்தான் உள்ளபடி அனுபவித்து உணர முடியும்.

- சுப்ர. பாலன்

"சட்டுன்னு கோபப்படுற குணம் உங்களுக்கு உண்டுங்க!"

"அது தெரிஞ்சுதான் முன்னாலேயே என் கைய கெட்டியா புடிச்சிருக்கீரா?"

- கிரிஜா மணாளன்



அஞ்சலி



வசுமதி ராமஸ்வாமி

தமிழில் வெளியான முதல் வரலாற்று நாவலான 'பார்த்திபன் கனவு' கதையை எழுதும்போது, பலரிடம் வரலாற்று நிகழ்வுகளைப்பற்றி ஆலோசனை பெற்றார் அமரர் கல்கி. அவர்களுள் ஒருவர் அண்மையில் காலஞ்சென்ற வசுமதி ராமஸ்வாமியின் கணவர் எம்.எஸ். ராமஸ்வாமி.

கல்கியின் முயற்சிகள் பலவற்றிலும் துணை நின்றவர் இந்த அம்மையாரின் சகோதரர், மாயவரம் சுவாமி அய்யங்கார் என்னும் காங்கிரஸ் பிரமுகர். சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டு கல்கி முதன் முதலாய்ச் சிறை சென்றபோது, அந்தச் சத்தியாக்கிரக ஏற்பாடுகளைக் கவனித்துக் கொண்டவர்களுள் இவரும் ஒருவர்.

இப்படிப்பட்ட நல்ல பாரம்பரியத்தில் வந்த வசுமதி ராமஸ்வாமி, சம்ஸ்கிருதத்திலும், ஹிந்தியிலும் நல்ல புலமை பெற்றவர். இருபதாண்டுகளுக்கு முன்னால் கல்கி இதழில் கதைகள், கட்டுரைகள் எழுதி, வாசகர்களுக்கு நன்கு அறிமுகமானவர்.

இவர் எழுதிய பெண்களுக்கான ஒரு பக்கக் கட்டுரைகள், கல்கியில் 'தேவியின் கடிதம்' என்ற தலைப்பில் வாராவாரம் வெளியாயின. 'பூமா தேவி' என்கிற பெயரில் 'அன்புள்ள சுஜாதா' என்று அவர் எழுதிய 'கடிதங்க'ளில் பெண்களுக்கு நம்பிக்கையூட்டி, நிமிர்ந்து நிற்க வழிகாட்டுகிற பல செய்திகளைச் சுவைபடச் சொல்லியிருக்கிறார். ஒரு கடிதத்தில் இப்படி ஓர் அறிவுரை:

"சிலரிடம் ஒரு கெட்ட வழக்கம் உண்டு. வீட்டுக்கு யாராகிலும் வந்திருப்பார்கள். அவர்கள் எதிரில் இரகசிய பாஷைகள் பேசிக் கொள்வார்கள். வந்தவர்கள் சில மணி நேரம் நம்முடன் தங்கலாம். அதற்குள் அந்த இரகசியப் பேச்சு அவசியமில்லையே! வேறு எதைப் பற்றியாவது பேசினால்கூடத் தங்களைப் பற்றித்தான் இரகசியமாகப் பேசுகிறார்கள், என்று வந்தவர்கள் வருந்த இடமளிக்குமல்லவா?"

இப்படி வாழ்வியல் நாகரிகங்களைப் பற்றியெல்லாம், ஒரு தாய் தன் மகளுக்குச் சொல்கிற நேர்த்தியில் நிறைய எழுதினார்.

சமூகப் பணிகள், மாதர் நல இயக்கங்கள் என்று திருமதி சரோஜினி வரதப்பனுடன் சேர்ந்து செயல்பட்டு, வாழ்க்கையை அர்த்தமுள்ளதாக்கிக் கொண்டவர் வசுமதி. ஆழ்வார்ப் பேட்டையில் உள்ள ஸ்ரீநிவாஸ காந்தி நிலையம் உருவானதில், இவருக்குப் பெரும்பங்கு உண்டு.

ஆரவாரமில்லாமல் அமைதியாக வாழ்ந்த வசுமதி ராமஸ்வாமி, ஆதரவு தேவைப்பட்ட பல பெண்களின் திருமணங்களுக்குத் திருமாங்கல்யம் வழங்குகிற அருமையான திட்டத்தையும் செயல்படுத்தி வந்தார்.

ஒரு பழைய தலைமுறையின் பண்பாடு காத்த எழுத்தாளர் வசுமதி ராமஸ்வாமியின் மறைவு, இன்றைய தலைமுறையினருக்கு ஒரு வெற்றிடத்தைத்தான் காட்டும்!

- பாலன்.

கல்லூரி மாணவன் போல பரபரப்பாகத் தென்படும் துருதுரு ஜோதிகிருஷ்ணாவுக்கு வயது இருபது. இந்தியாவின் இளவயது இயக்குனர் என்ற பெயரை எட்டிப் பிடித்திருக்கும் இந்தக் குட்டி இயக்குனர், எடுத்த எடுப்பிலே 'உனக்கு இருபது; எனக்கு பதினெட்டு' என்ற மெகா படத்தை கொடுத்து, திரையுலகைத் திரும்பி பார்க்க வைத்திருக்கிறார். அடுத்த படத்திற்கான உருவாக்கத்தில் பிஸியாக இருந்தவரை வம்புக்கு இழுத்தோம்.

கோடம்பாக்கத்தின் நம்பர் 1 பட அதிபராக அப்பா இருப்பதால்தானே இத்தனைச் செலவு செய்து படம் எடுக்க முடிந்தது?

நான் உட்பட அப்பாவை யாரும் ஏமாற்ற முடியாது. 'உன்னிடம் கதை கேட்பேன். திருப்தி இருந்தால் மட்டும்தான் வாய்ப்பு' என்று ஆரம்பத்திலே சொல்லிவிட்டார். அவர் என் கதையைப் புறக்கணித்து விடாத அளவுக்கு மீண்டும், மீண்டும், சீரமைத்து காட்சிகளை உருவாக்கி விட்டு, அதன் பிறகுதான் அவரிடம் சொல்லி ஓ.கே வாங்கினேன்.

படத்தில் தொழில் நுட்பத்திற்கும், பிரம்மாண்டத்திற்கும் செலவழித்திருப்பதைப் பார்த்தால், பக்கென்று இருக்கிறதே?

ஐந்நூறு ரூபாய்க்கும் பட்டுப் புடைவை கிடைக்கும். ஐம்பதாயிரத்திற்கும் கிடைக்கும். ஐந்நூறு ரூபாய் புடைவையைத் தினசரி பயன்படுத்தலாம். ஐம்பதாயிரம் ரூபாய் புடைவையை கல்யாணத்துக்குத்தான் கட்டிக் கொண்டு போவார்கள். காதல் கதை என்பது என்னைப் பொறுத்தவரை கல்யாணம் மாதிரி கிராண்டான விஷயம். அதை காஸ்ட்லியாகச் சொன்னால்தான் ரிச்னெஸ் கிடைக்கும். அதிலும் சொல்ல வந்த கதைக்கு என்ன தேவையோ, அந்த அளவுக்குத்தான் செலவழித்திருக்கிறோம். அள்ளி இறைத்திருக்கிறோம் என்பதையெல்லாம் ஏற்றுக் கொள்ள மாட்டேன்.

நீங்கள் ஐரோப்பாவில் சினிமாவைப் படித்து விட்டு வந்தவர் என்பதால், ஹாலிவுட்டில் போய் படம் எடுப்பதற்கான ஒரு காஸ்ட்லி டெமோதான் இந்த முயற்சி என்கிறார்களே?

இது சரியான கிண்டல். முதலில் இங்கே பெயர் வாங்க வேண்டும். அப்படியே ஹாலிவுட்டில் போய் எடுத்தாலும் பியூட்டிஃபுல்மைண்ட் மாதிரி உலகம் முழுமைக்குமான



ஜோதி கிருஷ்ணா

கதைப்படங்களைத்தான் முயல்வேன். இதுமாதிரி இரண்டு மூன்று பாத்திரங்களைக் கொண்ட படங்களை, இங்கே ஐம்பது லட்சம் செலவில் எடுத்து விடலாம். உலக அளவில் அங்கீகாரம் கிடைக்கும் படங்களுக்கு இத்தனை கோடிகள் தேவையில்லை.

சினிமா ஸ்பெஷல்

“ரஹ்மானுக்காக

வெளிநாட்டுத் திரைக்கல்வி, நமக்கான சினிமாவைக் கற்றுக் கொடுத்ததா என்ன?

நிச்சயமாக இல்லை. ஆனால் அடிப்படைத் தொழில் நுட்பங்களைத் தெளிவாகக் கற்றுக் கொள்ள முடிந்தது. நான் படித்தது நியூபோர்ட், வேல்ஸ் பல்கலைக் கழகத்தில். ஃபிலிம் மற்றும் வீடியோ படிப்பு. இங்கே பிரதானமாய் கற்றுக் கொடுத்தது, அடிப்படைகளைக் கற்றுக் கொண்டு, முழுவதும் புதிது புதிதாய் கண்டுபிடிக்க வேண்டும் என்பதைத்தான். கதையைச் சொல்வதில், புதுப்பாணி திரைக்கதையை உருவாக்குவதில், மரபை ரசிகர்கள் புரிந்து கொள்கிற மாதிரி மீறுவதைத்தான் ஐரோப்பா முழுக்க ஊக்குவிக்கிறார்கள். நான்கூட சில சோதனைத்தனமான காட்சிகளை வைத்திருந்தேன். கதாநாயகன் வீட்டை விட்டு வெளியேறும்போது, அங்கே வாழ்ந்த அவனது அம்மாவின் ஆத்மா, அக்கா, நாய் எல்லோரும் அரூபமாக அவனுக்குத் தெரிந்து கையசைத்து வழியனுப்புவது போல் காட்டினேன். கதையின் போக்கில் திடீரென்று கால்பந்துப் போட்டியை நுழைத்து டெம்போவைக் குறைத்தேன். இதெல்லாம் சோதனை முயற்சி தான்.



• 'உனக்கு 18; எனக்கு 20' படத்தில்...

தமிழ் ரசிகர்களை எப்படி எடை போட்டு வைத்திருக்கிறீர்கள்?

நமது ரசிகர்கள் சினிமா மூலம் எதையும் கற்றுக் கொள்ளத் தயாராக இல்லை. இன்று தியேட்டருக்கு வந்து படம் பார்க்கிறவர்கள் அத்தனை பேரும் பள்ளி, கல்லூரி மாணவர்கள், இளைஞர்கள். நிஜ வாழ்க்கையில் சாமி மாதிரி ஒரு போலீஸ்காரனைப் பார்க்க முடியாது என்று சினிமாவில் பார்த்து சந்தோஷப்படுகிறவர்கள். ஸ்பீல்பெர்க்கின் டைனோசரும் சரி, ஜாக்கி சானின் சாகசஸமும் சரி, நிஜத்தில் பார்க்க முடியாததைப் பார்க்கிறபோது வருகிற குறுகுறுப்புத்தான் ரசிகனை தியேட்டருக்கு இழுக்கிறது. சினிமாவில் காணும் வாழ்க்கையில் இருக்கும் சுதந்திரம், அவனை யதார்த்த நெருக்கடியிலிருந்து தற்காலிகமாக காப்பாற்றுகிறது! இதனால் சினிமாவை என்டர்டெயின்மென்டாக பார்ப்பதுதான் நமது ரசிகர்களுக்குப் பிரதானம்.

தமிழ் சினிமாவுக்கு ஏற்பட்டிருக்கும் உலகச் சந்தையை மேலும் லாபகரமாக மாற்ற முடியுமா?

நிச்சயமாக முடியும். இப்போது ஹாலிவுட்டிற்கும் நமக்கும் பெரிய தொழில்நுட்ப இடைவெளி இல்லை. நாம் அதிகம் திட்டமிடாமல், அவசர அவசரமாக படத்தை முடித்து வெளியிடுகிறோம். அந்தத் தவறை அவர்கள் செய்வதில்லை. தொழில்நுட்பத் திறன் கொண்ட படங்களை எடுத்தால் ஓரளவு சமாளிக்கலாம். உலக அரங்கிலும் வரவேற்பு கிடைக்கும்.


அடுத்த படம்?

அது நிச்சயமாக காதல் கதை இல்லை. ஏ.ஆர். ரஹ்மான் இசையும் இருக்காது. காரணம் அவரது இசைக்காக குறைந்தது ஓராண்டு காத்திருக்க வேண்டிய இருக்கிறது.

காத்திருக்க முடியாது!"

முக்கூட்டு மருத்துவத்தால் குறைந்த செலவில் குழந்தை பெறலாம்

''குழந்தை பேறு இல்லாத தம்பதியரில், குறைபாடு கணவனிடம் இருந்தாலும் சரி, மனைவியிடம் இருந்தாலும் சரி, அவர்களை இயற்கையாகவே குழந்தை பேற்றுக்கு தகுதியுள்ளவர்களாக ஆக்கும் — பக்க விளைவுகள் இல்லாத சிகிச்சை, நாங்கள் கடைப்பிடிக்கும் 'ஹோமியோபதி - சித்தா - ஆயுர் வேதம்' என்ற முக்கூட்டு மருத்துவ முறையாகும்'' என்று கூறுகிறார், **'நவீன வைத்தியாலயா'** என்ற பெயரில் திருவண்ணாமலை மாவட்டம் வந்தவாசியில் பிராமணர் தெருவிலும், சென்னை வடபழனியில் 100 அடி சாலையில் கவுரி சங்கர் திருமண மண்டபம் எதிரிலும் சிகிச்சை நிலையங்கள் நடத்தி வரும் டாக்டர் **ஏ.அர்ஜுனா.**



• ஈரோடு அருகில் நசியனூரைச் சேர்ந்த, கருக்குழாய் அடைப்பு நீங்கி, குழந்தை பெற்ற சம்பூர்ணம் சின்னசாமி (ஆண் குழந்தையுடன்) தம்பதியர்

''கடந்த 43 ஆண்டுகளுக்கும் மேலான என் மருத்துவ அனுபவத்தில் ஆயிரக்கணக்கான தம்பதியர்களுக்கு சிகிச்சை அளித்திருக்கிறேன்.

என்னிடம் வரும் தம்பதியரில் ஆண்களில் 70 சதவிகிதம் பேரும், பெண்களில் 30 சதவிகிதம் பேரும் குறைபாடு உடையவர்களாக இருக்கிறார்கள்'' என்று டாக்டர் அர்ஜுனா - ஆண்டாள் விவரம் தெரிவித்தார்கள்.

''குறைபாடு இருந்தால் எங்களது முக்கூட்டு மருந்துகள் மூலம் சரியாகும் வரை அவர்களுக்கு சில கட்டுப்பாடுகளுடன் சிகிச்சை அளித்து, உயிரணுக்குள் உற்பத்தி செய்து அணுக்களின் எண்ணிக்கை - உயிரோட்டத்தை அதிகரிக்கச் செய்து கருத்தரிக்கச் செய்கிறோம்.

ஆண்களுக்கு இளம் வயதிலேயே புட்டாளம்மை வந்தாலும், அம்மை வந்திருந்தாலும், மஞ்சள் காமாலை, டைபாய்டு ஜுரத்தால் பாதிக்கப்பட்டிருந்தாலும், எங்கள் முக்கூட்டு மருத்துவ சிகிச்சையால் உயிரணு உற்பத்தி செய்து புத்திரபாக்கியம் அடையச் செய்ய முடியும்.

பெண்களுக்கு மாதவிடாய் பிரச்சினை ஒழுங்குபடுத்தியும், கருப்பை ஓவரிகளை வளர்ச்சியடையச் செய்தும், அதிலுள்ள கட்டிகளைக் கரைத்தும், கருக்குழாயில் உண்டாகும் அடைப்புகளை நீக்கியும், கருமுட்டை உற்பத்தி செய்தும், அதை வெடிக்கச் செய்தும் முக்கூட்டு மருத்துவத்தால் மலட்டுத் தன்மை நீக்கி குழந்தை பிறக்கச் செய்கிறோம்.


முக்கூட்டு மருத்துவத்தால் கருக்குழாய் அடைப்பு நீங்கியும், உயிரணு உற்பத்தி ஆகியும் குழந்தை பெற்ற தம்பதியர்!

தஞ்சை ராஜமன்னார்குடியில் நடராஜன் என்பவருக்கு அறவே உயிரணு உற்பத்தி இல்லாமல் இருந்து முக்கூட்டு மருத்துவத்தால் உயிரணு உற்பத்தி ஆகி அவர் மனைவி தற்போது ஆண் குழந்தை பெற்றிருக்கிறார்.

சென்னை வடபழனி குமரன் காலனியைச் சேர்ந்த சண்முகம் என்பவருக்கு அறவே உயிரணு இல்லாதிருந்து முக்கூட்டு மருந்து சாப்பிட்டு உயிரணு உற்பத்தி ஆகி, புத்திரபாக்கியம் அடைந்துள்ளார்.

சென்னை நெசப்பாக்கத்தைச் சேர்ந்த பால்சிங் என்பவர் அறவே உயிரணு இல்லாமல் இருந்து 3 மாத முக்கூட்டு மருந்து சாப்பிட்டதிலேயே உயிரணு உற்பத்தி ஆகி புத்திரபாக்கியம் அடைந்துள்ளார்.

திருவாரூர் மாவட்டத்தைச் சேர்ந்த



• உலகப்புகழ் பெற்ற மருத்துவ திலகம் டாக்டர் A. அர்ஜுனா, டாக்டர் V. A. ஆண்டாள் அர்ஜுனாவுடன் இருப்பவர்கள் திருவண்ணாமலை மாவட்டத்தில் உயிரணு உற்பத்தியாகியும் கருக்குழாய் அடைப்பு நீங்கியும் குழந்தை பெற்ற ரங்கநாதன் - கீதா தம்பதிகள்

அறிவழகன் என்பவருக்கு அறவே உயிரணு இல்லாதிருந்து முக்கூட்டு மருத்துவத்தால் உயிரணு உற்பத்தி ஆகி புத்திர பாக்கியம் அடைந்துள்ளார்.

மகாராஷ்டிரா மாநிலத்தில் சந்திர சேகரன் என்பவருக்கு உயிரணுவில் 20 மில்லியன் கவுண்ட் இருந்து முக்கூட்டு மருத்துவத்தால் 98 மில்லியன் உயர்ந்து புத்திரபாக்கியம் அடைந்துள்ளார்.

பிரான்ஸ் நாட்டில் வைரவநாதன் - கலாவதி தம்பதியர் புத்திரபாக்கியம் அடைந்துள்ளனர்.

ஈரோடு மாவட்டம் நசியனூரில் சின்னச்சாமி - சம்பூர்ணம் தம்பதியர் கருக்குழாய் அடைப்பு நீங்கி ஆண் குழந்தை பெற்றுள்ளார்.

லண்டனில் இந்திரேசன் - கலாரஞ்சிதம் தம்பதியருக்கு உயிரணு உற்பத்தி ஆகியும், கருக்குழாய் அடைப்பு நீங்கியும் புத்திர பாக்கியம் அடைந்துள்ளார்கள்.

கடலூர் மாவட்டம் சேத்தியாதோப்பைச் சேர்ந்த தாமஸ் - மேரி தம்பதியருக்கு உயிரணு உற்பத்தி ஆகியும், கருக்குழாய் அடைப்பு நீங்கியும் கடந்த ஆகஸ்டில் பெண் குழந்தை பெற்றுள்ளனர்.

திருவண்ணாமலை மாவட்டம் வந்த வாசி தாலுகாவில் செபாஸ்டின் அறவே உயிரணு இல்லாதிருந்து முக்கூட்டு மருத்து வத்தால் உயிரணு உற்பத்தி ஆகியும், அவரது மனைவி மேரி கருக்குழாய் அடைப்பு நீங்கியும் கடந்த 14.12.2003 அன்று ஆண் குழந்தை பெற்றுள் ளனர்.

சவுதி அரேபியாவில் சுப்ரமணி - கிருஷ்ணவேணி தம்பதியருக்கு சென்ற மாதம் ஆண் குழந்தை பிறந்துள்ளது - முக்கூட்டு மருத்துவத்தால்.

எங்கள் மருத்துவமனையில், தமிழ்நாட்டில் எல்லா மாவட் டங்களிலிருந்தும் இந்தியாவின் அனைத்து மாநிலங்களிலிருந்தும் வந்தும், அயல்நாடுகளில் அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ், கனடா, சுவிட்சர்லாந்து, நியூசிலாந்து, சவுதி அரேபியா, துபாய், குவைத், பக்ரைன், ரியாத், ஓமன், இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், ஜெர்மனி போன்ற வெளிநாடுகளில் இருந்து வந்தும் சிகிச்சை பெற்று பயனடைந்து வருகிறார் கள்" என்றார் டாக்டர் அர்ஜுனா.



மருத்துவ திலகம்
டாக்டர் A. அர்ஜுனா,
டாக்டர் V. A. ஆண்டாள் அர்ஜுனா,

நவீன வைத்தியாலயா

ஹோமியோபதி - சித்தா - ஆயுர்வேத
மலடு நீக்கும் ஆஸ்பத்திரி

சென்னையில் சனி, ஞாயிறு, திங்கள் ஆகிய தினங்களில் டாக்டரைச் சந்திக்கும் இடம் : எண் : 65, நெற்குன்றம் பாதை, 100 அடி ரிங் ரோடு, (டி.எஸ். கவுரிசங்கர் திருமண மண்டபம் எதிரில்), வடபழனி, சென்னை - 600 026. போன் : 23623464 STD 044.

செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி ஆகிய தினங்களில் டாக்டரை சந்திக்குமிடம் : நெ. 30, பிராமணர் தெரு, (ஈஸ்வரன் கோயில் அருகில்), **வந்தவாசி,** திருவண்ணாமலை மாவட்டம் - 604 408. போன் : 225208, 228077, 226180 STD 04183.

ADVT

அணி திரளாத

ஓர் அரசு என்ன செய்ய வேண்டுமோ அதை மட்டுமே அந்த அரசு செய்ய வேண்டும். இந்தியாவில் நம்முடைய அரசுகள் செய்ய வேண்டிய காரியங்களுக்குக் குறைவே இல்லை. தொடக்கக் கல்வி, குடிநீர், அடிப்படை மருத்துவ வசதி ஆகியவற்றை எல்லா மக்களுக்கும் கிடைக்கச் செய்ய வேண்டும். சட்டம் ஒழுங்கைப் பாதுகாக்க வேண்டும். மனித உரிமைகளை மதிக்க வேண்டும். ஜனநாயக அமைப்புகளைப் பலப்படுத்த வேண்டும். இன்னும் எவ்வளவோ செய்ய வேண்டும். இவற்றையெல்லாம் செய்து முடிக்காத அரசு - அல்லது செய்ய முடியாத அரசு - ஏன் மற்ற விஷயங்களில் தன்னுடைய மூக்கை நுழைக்க வேண்டும் என்ற கேள்வி எழுவது நியாயம் தானே?

வறுமையை ஒழிப்பது அரசினுடைய கடமையல்லவா என்று அரசாள்பவர்கள் மாற்றுக் கேள்வி எழுப்புவார்கள். வறுமையை அரசுகள் ஒழித்துவிட முடியும் என்பதே நகைப்புக்குரிய கருத்து. ஓர் அரசு எல்லோருக்கும் வேலை தர முடியாது. ஓர் அரசு எல்லோருக்கும் சம்பளம் - அல்லது உதவித் தொகை - தர முடியாது. அரசுத் துறையில் தேவைக்கு அதிகமாகப் பணியிடங்களை உருவாக்கி, அந்த இடங்களில் தேவையில்லாமல் நியமிக்கப்பட்ட அரசு ஊழியர்களுக்குச் சம்பளமும், சலுகைகளும் நம்முடைய அரசுகள் தர முற்பட்டபோதுதான் வினையே வந்தது. அரசினுடைய செலவுகளுக்காக வரி விதிப்பது, கடன் வாங்குவது, நோட்டு அச்சடிப்பது என்று பல வழிகளில் அரசு தன்னுடைய பணத் தேவையைப் பூர்த்தி செய்து கொண்டது. இதன் விளைவாக வறுமை ஒழியவில்லை. மாறாக ஊதாரித்தனமும். ஊழலும் தான் வளர்ந்தன. பணவீக்கம் அதிகரித்தது.



* தேவகவுடா

வறுமையை ஒழிப்பது என்பது உன்னதமான இலட்சியம். ஓர் ஏழை நாட்டில் அதைவிட உயர்ந்த இலட்சியம் இருக்க முடியாது. ஆனால் வறுமையை எப்படி ஒழிப்பது என்பதை அறிவுப்பூர்வமாக ஆராய வேண்டும்.

வறுமையின் அடையாளங்களை முந்தைய கட்டுரை ஒன்றில் குறிப்பிட்டேன். அதிலிருந்து நம்முடைய ஆராய்ச்சியைத் தொடங்குவோம். வறுமையை ஒழிக்க வேண்டும் என்றால், எல்லோருக்கும் கல்வி அல்லது கைத்தொழில் ஒன்றைக் கற்பிக்க வேண்டும். எல்லோருக்கும் வேலை மற்றும் வருமானம் கிடைக்கச் செய்ய வேண்டும். எல்லோருக்கும் சொத்துச் (வீடு, நிலம்) சேர்க்க வாய்ப்பளிக்க வேண்டும். கல்வி மற்றும் கைத்தொழிலைக் கற்பிப்பதற்கும், வேலை மற்றும் வருமானத்தை உருவாக்குவதற்கும் முக்கியமாகத் தேவைப்படுவது 'முதல்'. அந்த முதல், முதலீடு செய்யப்பட வேண்டும்.

இந்தியாவில் அறுபத்தைந்து சதவிகித மக்கள் வேளாண்மையை நம்பியே வாழ்கிறார்கள். வேளாண்மையைச் சார்ந்த வேலை ஒன்றில் அவர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். வேலை பார்க்கும் வயதுடையவர்கள் (15 வயது முதல் 65 வயது வரை) என்று பார்த்தாலும், அறுபத்தைந்து சதவிகித மக்கள் வேளாண்மையை நம்பியே இருக்கிறார்கள். எனவே, வேளாண்மைத் துறையைச் சார்ந்தவர்களிடையே உள்ள வறுமையை ஒழித்தாலே, அறுபத்



விவசாயிகள்!

ப.சிதம்பரம்



தைந்து சதவிகித மக்கள் வறுமையின் கோரப் பிடியிலிருந்து விடுபடுவார்கள்.

வேளாண்மைத் துறையில் முதலீடு என்பது மிக முக்கியம். வேளாண்மைத் துறை தனியார் கரங்களில் இருக்கிறது. ஆனால் அந்தத் தனியாரில் மிகப் பெரும்பான்மையானவர்கள் எந்த முதலீடும் செய்யக் கூடிய நிலையில் இல்லை. இந்திய விவசாயிகளின் சராசரி நிலவுடைமை இரண்டரை ஏக்கருக்குக் குறைவு. 9 கோடி விவசாயக் குடும்பங்களில், 6 கோடி குடும்பங்களின் நிலவுடைமை வெறும் இரண்டரை ஏக்கர்தான். இதை வைத்துக் கொண்டு இரண்டு வேளை வயிறார உண்பதே கடினமான காரியம். அந்த விவசாயிக்கு எங்கிருந்து உபரி வருமானம் கிடைக்கும்? அந்த விவசாயி எதைக் கொண்டு புதிய முதலீடு செய்வார்? ஆனாலும், இந்திய விவசாயிகள் தங்கள் சக்திக்கேற்ப முதலீடுகள் செய்கிறார்கள். கிணறு தோண்டுகிறார்கள். நீர்க்குட்டைகளை ஏற்படுத்திக் கொள்கிறார்கள். புதிய வீரிய விதைகளை வாங்கிப் பயன்படுத்துகிறார்கள், உரங்களைப் போடுகிறார்கள். வாயைக் கட்டி, வயிற்றைக் கட்டி, பம்பு செட்டுகளை வாங்கிப் பொருத்துகிறார்கள். மின் இணைப்புக்குக் கட்டணம் கட்டி மின்சாரம் பெறுகிறார்கள். தென்னந்தோப்பு, வாழைத் தோப்பு வைத்திருப்பவர்கள் புதிய பாசன முறைகளைக் (சொட்டு நீர்ப் பாசனம்) கடைப்பிடிக்கிறார்கள். மாடு வாங்குகிறார்கள், டிராக்டர் வாங்குகிறார்கள். இவற்றின் மூலமாக அவர்களின் வருமானம் ஓரளவுக்கு அதிகரிக்கிறது என்பது உண்மை. ஆனால் இந்த நடவடிக்கைகளைப் பெரிய முதலீடு என்றோ, அவற்றின் வாயிலாகப் பெரிய அளவில் புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்க முடியும் என்றோ சொல்ல இயலாது.

இந்தியாவில் எல்லா மாநிலங்களிலும் விவசாய நில உச்சவரம்புச் சட்டங்கள் இருக்கின்றன. இந்த உச்சவரம்புச் சட்டம் நியாயமானதே. இன்றும் நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களின் எண்ணிக்கை பல கோடிகளாகும். பெரும் பணக்காரர்கள் வரம்பில்லாமல் நிலத்தை வைத்துக் கொள்ள அனுமதித்தால், இன்னும் பல கோடி விவசாயிகள் நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களாக மாறி விடுவார்கள். உச்சவரம்புச் சட்டங்களை மீறியும், உச்சவரம்புச் சட்டத்திற்கு உட்பட்டும் பல செல்வந்தர்கள் நிலம் வைத்திருக்கிறார்கள். அவர்கள் வேளாண்மையில் புதிய முயற்சிகளை மேற்கொண்டு வருகிறார்கள். புதிய விஞ்ஞான முறைகளை அறிமுகப்படுத்துகிறார்கள். ஆனால் அவர்கள் செய்யும் முதலீடு, ஒரு குறிப்பிட்ட அளவுக்குள்தான் இருக்க முடியும்.

வேளாண்மைத் துறையில் பெரிய, புதிய முதலீடுகளை அரசு மட்டுமே செய்ய முடியும். பெரிய, சிறிய அணைகள், கால்வாய்கள் என்று தண்ணீரைத் தேக்குவதற்கும், பிரித்து வழங்குவதற்கும் பல்லாயிரம் கோடி ரூபாய்களை முதலீடு செய்யலாம். நீர் நிலைகள், ஏரிகள், கண்மாய்கள், ஊருணிகள், நீர்க்குட்டைகள், மழைநீர்ச் சேகரிப்புத் திட்டங்கள் என்று பல வழிகளில், தண்ணீரைச் சேகரிப்பதற்குப் பல



கோடி ரூபாய்களை முதலீடு செய்யலாம்.

புதிய விதைகள், புதிய உரங்கள் ஆகியவை பற்றிய ஆராய்ச்சிக்கு பல கோடி ரூபாய்கள் தேவைப்படுகின்றன. விவசாய விளைபொருள்களைப் பாதுகாப்பாகச் சேமிப்பதற்குக் கிட்டங்கிகள்; அவற்றைச் சந்தைகளுக்கு எடுத்துச் செல்வதற்கு குளிரூட்டப்பட்ட வாகனங்கள், நல்ல சாலைகள் என்ற கட்டமைப்புகளில் பல்லாயிரம் கோடி ரூபாய்களை முதலீடு செய்யலாம். பழங்கள், காய்கறிகள், பால் ஆகிய பொருள்களைப் பதனிடுவற்கும், அவற்றைக் கொண்டு பல பொருள்களைத் தயாரிப்பதற்கும், தொழிற் சாலைகளை நிறுவுவதற்குக் கடனுதவி தரலாம். இவற்றுக்கெல்லாம் பல்லாயிரம் கோடி ரூபாய்கள் முதலீடாகத் தேவைப்படுகிறது. இந்த முதலீட்டைச் செய்தால் மட்டுமே வேளாண்மைத் துறைக்குப் புத்துயிர் ஊட்டி, வேளாண்மைத் துறையில் பல இலட்சம் வேலை வாய்ப்புகளை உருவாக்க முடியும்.

1965ஆம் ஆண்டு பசுமைப் புரட்சிக்கு முதலில் வித்திட்டபோது மத்திய அரசும் மாநில அரசுகளும் வேளாண்மைத் துறையில் பெரும் முதலீடுகளைச் செய்தன. அண்மைக் காலத்தில், முதலீட்டுக் கணக்கு என்று எடுத்துக் கொண்டால், ஆண்டொன்றுக்கு மத்திய அரசு செய்யும் முதலீடு சுமார் 3000 - 4000 கோடி ரூபாய்கள் மட்டுமே. ஆண்டொன்றுக்கு நான்கரை இலட்சம் கோடி ரூபாய் வரவு செலவு செய்யும் மத்திய அரசு விவசாயத் துறையில் செய்யும் முதலீடு மிகக் குறைவு. மாநில அரசுகளும் ஏறத்தாழ அதே போக்கைத்தான் கடைப்பிடிக்கின்றன.

199697ல் பிரதமர் தேவகவுடா தலைமையில் இருந்த அரசு, ஒரு புரட்சிகரமான திட்டத்தை அறிமுகப்படுத்தியது. "பூர்த்தியாகாத பாசனத் திட்டங்களைப் பூர்த்தி செய்யும் திட்டம்" என்ற பெயரில், ஏறத்தாழ ஆயிரத்தி ஏழுநூறு கோடி ரூபாய்களை மாநிலங்களுக்கு வழங்கியது. அந்தத் திட்டம் இன்னும் செயல்படுவதுதான் வேதனையளிக்கிறது. பூர்த்தியாகாத பாசனத் திட்டங்களை விரைவில் பூர்த்தி செய்ய வேண்டாமா? அதற்காக ஏன் ஏழு ஆண்டுகள் எடுத்துக் கொள்ள வேண்டும்? ஆனால் தேவகவுடா அரசு அறிமுகப்படுத்திய திட்டத்தால் பல பாசனத் திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டு, பல்லாயிரம் ஹெக்டேர் நிலம் விவசாயத்தின் கீழ் கொண்டுவரப்பட்டது என்பது உண்மை.

இதுபோன்ற திட்டங்களே வேளாண்மைத் துறைக்கு வேண்டும். இதுபோன்ற திட்டங்களை நிறைவேற்ற வேண்டும் என்று அரசியல் கட்சிகள் வலியுறுத்துவதில்லை. இதை ஆதரித்து விவசாயிகளும் அணி திரள்வது கிடையாது.

(தொடரும்)

லண்டன் இறக்குமதி!




பொங்கல் ரேஸில் கலந்து கொண்டிருக்கும் 'ஜெய்' படத்தில் தாழ்த்தப்பட்ட சமுதாயத்துக்காகப் போராடும் இளைஞனாக நடித்திருக்கிறார் பிரசாந்த்.

"படத்துல ஏழு சண்டைக் காட்சிகள். நெதர்லாந்து, நைஜீரியா, ஹாங்காங், மலேஷியா போன்ற நாடுகள்ல உள்ள சண்டைக் காட்சி நிபுணர்கள் இதுல பங்கேற்றிருக்காங்க. இதுவரை பார்க்காத புதுமையான ஆக்ஷனை இந்தப் படத்துல பார்க்கலாம்" என்கிறார் இயக்குனர் நாராயண்.

படத்தின் நாயகி அன்ஷு, லண்டன் இறக்குமதியாம்!

- அப்பு

ரூ.10,000 பரிசு!



அள்ளுங்க பரிசை!

கூப்பன்களை அனுப்பிக் குவிக்கிற வேகத்தில் கலக்கிட்டீங்க. அதில் சரியான விடைகளை எழுதினவங்க எக்கச்சக்கம். உங்க ஆர்வத்தையும், ஆதரவையும் தொடர்ந்து காட்டுங்க! நன்றி! நன்றி!

குலுக்கல் முறையில்
இந்த வாரம்
பரிசை வென்றவர்:
கிரிஜா மோகன்,
7, 2வது தெரு,
அருணா நகர்,
ஸ்ரீரங்கம் - 620 006.

**ஆறுதல் பரிசு ரூ.100 பெறும்
20 பேர்**

1. தேவி ராமன், சென்னை - 78.
2. ஆர். சாயிலக்ஷ்மி, தஞ்சை - 5.
3. எஸ். ராகுல் செல்லப் பாண்டியன், சென்னை - 35.
4. எஸ்.ஏ. கனி, குறிஞ்சிப்பாடி.
5. சின்னஞ்சிறு கோபு, மயிலாடுதுறை.
6. ஐ. பியூலா, மதுரை.
7. மு. தவசியப்பன், தவிட்டுப்பாளையம்.
8. எல். ராம நாராயணன், காட்பாடி.
9. எஸ். ஆனந்த், கோவை - 6.
10. ஆர். ராமசந்திரன், சென்னை-24.
11. பி. பத்மினி, கினித்தான்பட்டரை.
12. வி. ராஜாராம், பொங்கலூர்.
13. ஆ. ஆறுமுகம், கொடிமங்கலம்.
14. பி. அமுதா, தஞ்சை - 1.
15. மலை அரசன், தோட்டப்பாளையம்.
16. செ. சுப்பிரமணியன், பனையூர்.
17. ஜி. கலாவதி, சர்க்கார்பதி.
18. டி.ஆர். கைலாசம், சென்னை - 40.
19. வை. ஹைமாவதி மகாதேவி, புதுச்சேரி - 14.
20. என். ஜெகதா, ஆலங்காயம்.

குவிஸ் போட்டி (6) விடைகள்

1. செஸ் விளையாட்டில் இந்தியாவின் சப்-ஜூனியர், ஜூனியர், சீனியர் தேசியப் பட்டங்களை இரண்டிரண்டு முறை வென்றவர் **விஸ்வநாதன் ஆனந்த்.**

2. ஐ. நா. பொதுச்சபையின் தலைவராகப் பொறுப்பேற்ற முதல் இந்தியப் பெண்மணி **விஜயலட்சுமி பண்டிட்.**

3. இலட்சத்தீவுகளின் தலைநகரம் **கவரெட்டி.**

4. 'கிரேட் மொஹல்' என்ற புகழ் பெற்ற வைரத்தின் பிரபலமான பெயர் **கோஹினூர் வைரம்.**

5. நோபல் பரிசு பெற்ற இந்தியர் ஒருவரால் உருவாக்கப்பட்ட பல்கலைக் கழகம் **விஸ்வபாரதி பல்கலைக் கழகம் (சாந்திநிகேதன்)**

6. செப்.11ல் தாக்குதலுக்குள்ளான அமெரிக்க உலக வர்த்தக மையக் கட்டடத்திலிருந்த மாடிகள் **தலா 110.**

பரிசு பெற்றவர்களுக்கு வாழ்த்துகள்! பாராட்டுகள்!

வாழ்த்துகள்



ரமேஷ் விநாயகம்

இசையமைப்பாளர்

பரந்து விரிந்த வானில்
பறந்திருந்தேன் நானும் - தேன்
சுரந்திடும் ஏழு ஸ்வரந்தனில் எனை
மறந்திருந்தேன் நானும் - நல்
உரந்தரும் தமிழ்அமிழ்தினில் மன(ம்)
அமிழ்ந்திருந்தேன், ஆஹா! - காதல்
ஜுரம் தரும் ஏ பெண்ணே! - நீ இனி
எனை என் செய்வாயோ!
இதந்தரும் நல்லிசையோடேதான்
இணைந்திருந்தேன் கண்டாய் - நற்
பதந்தரும் லயமோடேதான்
பிணைந்திருந்தேன் உண்மை - இது
சுதந்திரம் இது சுதந்திரம் என
சுழன்றிருந்தேன், ஆஹா! - காதல்
மதந்தரும் ஏ பெண்ணே! நீ இனி
எனை என் செய்வாயோ!
அருந்தவஞ்செய் முனிவர் அன்றே
அரம்பையர் பக்கம் சாய்ந்தார்

பெருந்தவஞ்செய் பெரியோர்
பெண்ணின்
பின்னால் சென்றே ஓய்ந்தார்
பெருங்கதைகள் பேசும் உந்தன்
பெருமையெல்லாம் கேட்டேன்
பெரும் பயம்தரும் பெண்ணே நீ இனி
எனை என் செய்வாயோ!
வினைகளகற்றும் எந்தை விநாயகன்
விரைகழல் அருள் நிழலாலே - என்
மனை மனம் புகவே வந்தாய் உந்தன்
மங்கல வருகையினாலே
எனை என் செய்வாயென்றாலும் நான்
இனிதாய் கவிபுனைந்தேனே! - இனி
தினையளவும் சந்தேகம் ஏன்? - என்
இசையால் உனை வெல்வேனே!



என்ன செய்யப் போகிறாய்...?

"ஒரு ஊசி போடுங்களேன்..!"



வஸந்த் செந்தில்

"நேற்று என் நோயிலிருந்து
குணம் அடைந்தேன்;
நேற்று என் மருந்துகளால்
மரணம் அடைந்தேன்..."

என்று மேத்யூ பிரியர் 'Remedy worse than the disease' என்ற கவிதையில் எழுதியிருக்கிறார். இதன் அர்த்தம், நோய்களை விட மருந்துகளைக் கவனமாகக் கையாளுங்கள் என்பதுதான். அதிலும் எதற்கெடுத்தாலும் ஊசி போட்டுக் கொள்வது, நமக்குப் பெரிய ஆனந்தம்!

"சார்... கால்ல ஒரே வலி... ஒரு ஊசி போடுங்களேன்..." இப்படித்தான் பல நோயாளிகளின் உரையாடல் ஆரம்பிக்கிறது. டாக்டரும் உற்சாகத்தில் "எதுக்கு ஒரே ஊசி? ரெண்டு இடுப்பையும் காட்டுங்க. வலி பறந்துடும்.." என்று ஆரம்பித்து விடுவார்.

கால் குடைச்சலைவிட குத்துகிற ஊசி பயங்கரமாக வலிக்கும். 'ஆ' என்று அவர் கத்துகிற கத்தில், வெளியே காத்திருக்கும் நோயாளிகள் பயத்தில் வெளியேறிவிடுவார்கள். "என்ன... சின்ன ஊசிக்கே இந்தக் கத்தா?..." என்று அலட்சியமாக ஊசி போட்ட இடத்திலேயே டாக்டர் ஒரு தட்டுத் தட்ட, வலி விண்ணென்று தெறிக்கும். நன்றாக நடந்து உள்ளே போனவர், இப்போது நடக்க முடியாமல் தடுமாறி வருவார்.

இப்போதெல்லாம் இப்படி இல்லை. எதற்கெடுத்தாலும் ஊசி என்று கேட்கிற நோயாளிகளும் குறைந்திருக்கிறார்கள், டாக்டர்களும் குறைந்திருக்கிறார்கள். சில பொது மக்கள் ஊசி போடாவிட்டால், 'இந்த ஆள் டாக்டர்தானா?' என்று சந்தேகப்பட்டு கால் கண்ணில் கவனிக்கிறார்கள். நவீன மருத்துவத்தில் இப்போது, தேவை என்றால் மட்டும்தான் ஊசி. பெரிய பெரிய மருத்துவர்கள் எல்லாம் மாத்திரைகளின் ஏற்ற இறக்கத்திலேயே நோய்களைத் திறமையாகக் கட்டுப்படுத்துகிறார்கள்.

ஆனாலும் நவீன மருத்துவத்தால் ஊசிகளை முழுமையாக ஒழித்துவிடவில்லை. முடியாது என்றே தோன்றுகிறது. அதனால் ஊசிகளைத் தள்ள முயற்சிக்காமல், அதன் மூலம் ஏற்படுகிற வலிகளைத் தள்ள முயற்சி நடந்தது. சில வாரங்களுக்கு முன்பு, டாக்டர் டெவின் தலைமையில் ஒரு குழு, அட்லாண்டாவில் இதில் வெற்றி பெற்றிருப்பதாக அறிவித்திருக்கிறார்கள்.

வலி கொடுக்காத ஊசி! இதற்காக அவர்கள் பரிந்துரைப்பது, சிலிகான் ஊசிகளை!



இவர்கள் நூற்றுக்கும் மேற்பட்ட பொருள்களால் தயாரிக்கப்பட்ட ஊசிகளை ஆய்வில் பயன்படுத்தினார்கள். சிலிகான், சில்வர், மெட்டல், பாலிமர் போன்று பல்வேறு விதமான பொருள்கள் பயன்படுத்தப்பட்டன. டயபடீஸ் வந்த எலிகளையும், மனிதர்களையும் குத்திக் குத்தி பெரிய ஆய்வுகளைச் செய்தார்கள். ஆய்வு நடந்த இடம் ஜியார்ஜியா இன்ஸ்டிடியூட் ஆஃப் டெக்னாலஜி. முடிவை, சென்ற வாரம் வெளிவந்த நேஷனல் அகாடமி ஆஃப் சயின்ஸ் பத்திரிகையில் வெளியிட்டிருக்கிறார்கள். அதன்படி, மருத்துவ மார்க்கெட்டுக்கு வரலாம் என அவர்கள் அறிவித்திருப்பது, சிலிகான் ஊசிகளை.

சிலிகான் ஊசிகளால் இனி வலி இல்லை. இந்த ஊசிகள் பழைய ஊசிகளைப் போல தசை நார்களைக் கிழிப்பது இல்லையாம். அவற்றுக்கு இடையில் சுலபமாகத் தலையை நுழைத்து மருந்துகளைப் பரப்புவதால் வலியைக் குறைக்கின்றன. இந்த ஊசிகளின் அளவு பத்து மைக்ரோ மீட்டர்தான். இது நாம் தற்சமயம் பயன்படுத்துகிற ஊசிகளைவிட, நூறு மடங்கு அளவில் குறைவு. தவிர, இவை பெரிய சைஸ் மாலிக்யூல்களாக இருக்கிற மருந்துகளையும், வலியின்றி தசைகளுக்குள் செலுத்துகிற சக்தி கொண்டதாக இருக்கின்றன. இந்த சிலிகான் ஊசிகளைக் கொண்டு 'நோனாஸ்ஃபியர்' என்ற முறை மூலம், மருந்துகள் உடலிலிருந்து வெளியேறக் கூடிய நேரத்தைக் கட்டுப்படுத்தலாம் என்றும் அறிவித்திருக்கிறார்கள். அதாவது, மருந்தை இந்த நேனோ உடன் செலுத்தி விட்டால் போதும். நான்கு மணி நேரத்தில் எட்டு மில்லி கிராம் மருந்து வெளியேற வேண்டும் என்று திட்டமிட்டால், மருந்துடன் சென்ற நேனோ இந்தக் கட்டுப்பாட்டைச் செயல்படுத்தி, மருந்து வெளியேறுவதைத் துல்லியமாக்குகிறது என்கிறார்கள். இதற்கு சிலிகான் ஊசிகள்தான் உதவி செய்கின்றன என்று நிருபித்திருக்கிறார்கள்.

இப்போது நாம் பயன்படுத்துகிற ஊசிகளைக் குத்தும்போது, தசைகளில் மூன்று செகண்டுகளுக்கு மேல் வைக்க முடியாது. வைத்தால், வலி வாய்பிளக்க வைக்கும். கோபத்தில் நோயாளி டாக்டரைத் திருப்பிக் குத்த வாய்ப்பிருக்கிறது. இந்தத் தொல்லை சிலிகான் ஊசியில் இல்லை. டாக்டருக்கும் பாதுகாப்பு, நோயாளிக்கும் பாதுகாப்பு.

(தொடரும்)

படம் : சார்லஸ்

சூழ்நிலை வில்லன்!

வாரிசு நடிகர்கள் லிஸ்டில் இப்போது எஸ்.எஸ். சந்திரன் மகன் ரோஹித்!



''அப்பாவைப் பார்த்து நடிக்க வரலை. எனக்குச் சின்ன வயசுல இருந்தே நடிப்பார்வம் இருந்தது'' என்கிறார் ரோஹித். இவர் நடிக்கும் 'ஒரு முறை சொல்லிவிடு' படத்தை ஹா.ஜவஹர் இயக்குகிறார்.

படத்தில் வில்லனே கிடையாதாம். சூழ்நிலைதான் வில்லன் என்று சொல்லும் ஜவஹர், படத்தை வெறும் முப்பத்தைந்தே நாட்களில் முடித்திருக்கிறார். கதை?...

படத்தின் தலைப்பைப் பார்த்தாலே தெரியவில்லையா? காதல் கதைதான். எல்லோரையும் போல இவர்களும் வித்தியாசமாகச் சொல்லியிருக்கிறார்களாம்!

- அய்பு



இப்படி ஆகுமென்று அவள் எதிர்பார்க்கவில்லை. பேட்டியின் சுவாரஸ்யத்தில் கடைசி பஸ்ஸின் நேரத்தை மறந்துவிட்டாள். ஆளுயர புல் காடு இருபுறமும். நடுவில் ரெட்டையடிப் பாதை. பதினொரு மணி இரவு. வானத்தில் உள்ள நட்சத்திரங்கள் மட்டுமே துணையாக வந்து கொண்டிருந்தன. அவளுக்குப் பயம் இல்லை. பயப்படுகிறவளாக இருந்தால் இப்படி பத்திரிகை ரிப்போர்ட்டராக வேலை செய்ய முடியுமா என்ன..?

மெயின் ரோட்டுக்கு வந்த போது சாலை முற்றிலுமாக வெறிச்சோடி விட்டது. பஸ் ஸ்டாப் எங்கே என்று கூடத் தெரியவில்லை. சாயங்காலம் வரும்போது இருந்த அடையாளங்கள்

அந்த இரவில்...

கே.ஜி.ஜவஹர்

முழுவதுமாக அழிந்து போயிருந்தன. கடைகள் மூடப்பட்டு, விளக்குகள் அணைக்கப்பட்டு... எதுவுமே இல்லை. சற்றுத் தூரம் நடந்தவள் சிறிய கான்கிரீட் குடையைக் கண்டு நின்றாள். இதுதான் பஸ் ஸ்டாப்பாக இருக்க வேண்டும்.

நேரம் ஓடிக் கொண்டிருந்தது. முன்பின் தெரியாத ஓர் இடத்தில், இரவில் தனியாக நிற்பது புதிய அனுபவம். காற்றில் குளிர் ஏறியிருந்தது. சுற்றிலும் நோக்கினாள். சில மின்மினிப்பூச்சிகள் அழகாகப் பறந்து கொண்டிருந்தன. இதெல்லாம் சிட்டியில் காணக் கிடைக்காத அழகு... !

"ஹ்ர ஹ் ஹா. ஹச்... ஹச்..."

திடீரென்று கேட்ட தும்மல் ஒலி, தூக்கி வாரிப் போட்டது அவளை. திரும்பினாள்.

பெஞ்சுக்கு அடியில் சற்றுத் தள்ளி, போர்த்திக் கொண்டு படுத்திருந்தான் ஒருத்தன்! "யாரம்மா அது...?"

அவளுக்கு வியர்த்தது. பதில் சொல்லாமல் நின்றாள். அவன் எழுந்து வந்தான். "ரொம்ப நேரமா நிக்கியா...?" என்றான் கொட்டாவி விட்டவாறே. நல்ல கறுப்பு. கொடுவா மீசை.

"எங்க போவணும்...?" என்றான் அலுப்பாக.

"பாளயங்கோட்ட..." என்றாள் இலேசான நடுங்கும் குரலுடன்.

"இனிமே வண்டி எதுவும் கிடையாதம்மா... இங்கே எதுக்கு வந்தே...?"

"'ஒரு பேட்டிக்காக... நான் ஒரு ரிப்போர்ட்டர்..."

"ஒரு எழவும் விளங்கல... இப்ப என்ன பண்ணப் போறே? ஒரு வழிதான் இருக்கு... செய்வியா...?" என்றான் தலையைச் சொறிந்தவாறே. "என் வீட்ல தங்கிக்கோ..."

அவளுக்குத் திக்கென்றது. பயத்தில் நாக்கு மேலண்ணத்தில் ஒட்டிக் கொண்டது. பதில் பேசாமல் நின்றாள்.

"பேரென்ன...?" என்றான் மிக அருகில் வந்து. அவன் கண்கள் பயங்கரமாக இருந்தன.

"புவனா..." நாக்கு குழறியது.

"பயப்படாதேங்கிறன்ல.. இளம்பு.. பத்து நிமிஷம் நடந்தா என் வூடு... தங்கிட்டு காலைல மூத வண்டியில போயிரு.. வர்றியா இல்ல நான் போவட்டா..?" அவன் முதுகை காட்டிக் கொண்டு கேட்டதில் இருந்து, போய்விடுவான் என்றே தோன்றியது.

அவள் தன் கைப்பையைத் திறந்து, இஷ்ட தெய்வங்களின் படங்களை விரல்களால் தடவி வேண்டிக் கொண்டாள். அவன் நடக்க ஆரம்பித்துவிட்டான்.

"ஓரமாக நடக்காதே... பாம்பு கிடக்கும். போன வாரம் கூட ஒருத்தி மண்டையப் போட்டா... பாம்பு கொத்தி..." அவன் பேசிக் கொண்டே நடந்தான். சில நிமிட நடையில் ஒரு சின்னக் குடிசை வந்தது. சுற்றிலும் வேலி. சின்னத் தோட்டம். கதவைத் திறந்தான். ஒரு சுவிட்ச்சைப் போட்டான். ஒரு நாற்பது வாட்ஸ் பல்ப் அழுது வடியும் ஒளியைத் துப்பியது. "நான் தனியாத் தானிருக்கேன்.." என்றான் அவன். அவளுக்கு ஓடிவிடலாம் என்றிருந்தது..

அவள் உடல் வியர்த்து தெப்பலாய் நனைந்து போயிற்று. அவன் உள்ளே வந்தான். கையில் கடச்கட கடுங்காப்பியும் ரஸ்க்கும் இருந்தன. "சாப்பிட்டுப் படுத்துக்கோ.." என்றவன் மூலையில் இருந்த சின்ன பீரோவைத் திறந்து, இரண்டு போர்வையும் ஒரு சுத்தமான தலையணையும் கொடுத்தான். இவளுக்கு ஆச்சரியமாக இருந்தது. அவன் ஒரு கூஜாவில் தண்ணீர் பிடித்து வந்து மூலையில் வைத்தான். சற்றுத் தள்ளி ஒரு கொசுவத்திச் சுருளையும் ஏற்றி வைத்தான்.

"வேண்டாம்.. வேண்டாம்.." அவள் பரபரப்பாக அருவெறுப்புடன் மறுத்தாள்.

அவன் ஒரு சின்ன நோட்டுப் புத்தகத்தை எடுத்து வந்தான். "உன் பெயரையும் அட்ரஸை

யும் எழுது..."

அவள் பயத்துடனும் குழப்பத்துடனும் எழுதினாள். "பார்வதி, 25, புதுத் தெரு.." எழுதி முடித்தாள். அதை வாங்கிப் பார்த்தான்.

"புவனான்னு சொன்னியே...?" என்றான்.

திடுக்கிட்டாள். 'வீ... வீட்ல அப்படித்தான்... கூப்பிடுவாங்க..." என்றாள் குழறியவாறே.

"கதவ நல்லாப் பூட்டிக்கோ... ஆறு மணிக்கு எழுப்பி விடறேன்.." என்றவன் வெளியே போய்விட்டான்.

இதற்காகவே காத்திருந்த மாதிரி அவள் கதவைப் படாரென்று சாத்தினாள். படபடத்த நெஞ்சைப் பிடித்து ஆசுவாசப்படுத்திக் கொண்டாள். சுற்றும் முற்றும் நோக்கினாள். மிகவும் சுத்தமாக இருந்தது. மூலையில் ஓர் அரிவாள் இருந்தது. மெள்ளப் போய் அதை எடுத்தாள். 'ஆசாமி நிச்சயம் ராத்திரி வந்து கதவைத் தட்டுவான்... என் பயத்தப் போக்க அழகா நடிச்சிருக்கான்.. அப்படி ஏதாவது செய்தான். இந்த அரிவாளே எதேஷ்டம்.. ஒரே போடு.'

நார்க்கட்டிலில் படுத்துக் கொண்டாள். தூக்கம் வராது என்றுதான் நினைத்தாள். ஆனால் என்ன ஆச்சரியம்! அடித்துப் போட்ட மாதிரி தூங்கிப் போனாள்.

விடிந்ததும் கதவைத் திறந்து வெளியே வந்தபோது, அந்த ஆசாமியைக் காணோம். அவன் வருவதற்குள் சீக்கிரம் போய்விடலாம்.

''நம்ம காதல் தான் நிறைவேறாமப் போச்சே..! வாழ்நாள் பூரா நான் உங்கள நினைச்சுக்கிட்டே இருக்கற மாதிரி நீங்க...."

''என்ன செய்யணும்? சொல்லு டார்லிங்!"

''என் கல்யாணத்துக்கு ஒரு 'பெரிய தொகை'யை மொய் வைப்பீங்களா?"

- கிரிஜா மணாளன்



தோட்டத்தைக் கடந்து சாலைக்கு வர வேண்டும். ஒரு நிமிடம் வேகமாக நடப்பதற்கும், எதிரே தலையில் முண்டாக கட்டிக் கொண்டு அவன் வருவதற்கும் சரியாக இருந்தது. அவன் கையில் ஒரு எவர்சில்வர் செம்பு.

"என்னம்மா, சொல்லாமக் கொள்ளாம கிளம்பிட்ட... உனக்காக காபி வாங்கிட்டு வரேன். சாப்பிடு."

"ஐயோ... வேண்டாம்.."

"அட.. உனக்காகத்தான்மா வாங்கிட்டு வந்தேன். நீ குடிக்காட்டி வேஸ்டா போவும்..ம்.. குடிம்மா.."

காபியைப் பருகினாள். அவன் ஒரு பொறையை, கட்டிப் போட்டிருந்த நாய்க்குப் போட்டுவிட்டு வந்தான்.

"அப்ப கிளம்பறியாம்மா..." என்றவாறே திரும்பி வந்தான் அவன். "இரு, அம்பது ரூபா கொடுத்திட்டுப் போ.." என்றான் திடுமென.

திடுக்கிட்டாள். "என்ன! அம்பது ரூபாயா? எதுக்கு?"

''என்னம்மா இப்படிக் கேட்டுட்டே... நைட்ல தங்குனல்ல... அதுக்குத்தான்.."

''தங்குனதுக்கா...?'' அதிர்ச்சியுடன் கேட்டாள்.

"ஆமாம்மா.. என் பொழப்பே அதுதானே, மெயின் ரோட்ல ஒரு 'கம்ப்யூட்டர் சென்டர்' இருக்கு. சில பசங்க கடைசி பஸ்ஸ தவற விட்றப்போ, இங்கன கூட்டியாந்துருவேன். சந்தோஷமாத் தங்கிட்டு போவானுவ... அதுக்கு ஒரு அமவுண்ட் கறாரா வாங்கிடுவேன். லாட்ஜுக்குப் போனா கொறைஞ்சது இருநூறு சொளையா வைக்கணுமே... ஆனா ஒரு விஷயம்.. நான் ரொம்ப ஸ்ட்ரிக்ட்! எனக்கு பிடிச்சவனுகளுக்குத்தான் தங்க எடம் தருவேன். பயலுக டீசன்ட்டா இருக்கணும்... குடிக்கக் கூடாது... தம்மடிக்கக் கூடாது. பேர் அட்ரஸெல்லாம் கரெக்டா தந்திரணும். அதிக பட்சம் ரெண்டே பேர்தான்... இப்ப நெறயப் பயலுகளுக்கு நம்ம இடம் பிடிச்சிப் போச்சி... அவனுக மாத்து உடுப்புகளைக்கூட நம்ம குடிசைல விட்டுட்டுப் போறானுவன்னா பார்த்துக்கோயேன்.."

அவள் அவனை ஆச்சரியமாய்ப் பார்த்தாள். அவளையும் அறியாமல் கை பர்ஸைத் திறந்து பணத்தை எடுத்து அவனிடம் கொடுத்தது. "நான் வரேன்.." என்றவள் வேகமாக நடக்கத் துவங்கினாள். ஒரு நிமிடம் நடந்திருப்பாள். கை தட்டும் சத்தம். திரும்பிப் பார்த்தாள். அவன்தான்.

"இத பாரும்மா. நம்ம எடத்துல பொம்பளைகளுக்குத் தங்க இடம் கிடையாது. யார் கிட்டயும் சொல்லி வைக்காதே! இனிமே நீயே வந்தாக்கூட இங்கே இடம் கிடையாது. புரிஞ்சுதா..?" ♦

சினிமா ஸ்பெஷல்



"கனவுகளை நசுக்காதீங்க!"

-ஓர் உதவி இயக்குனரின் குமுறல்!

நடிக்க வந்தவர் போல் பளிச்சென்று இருக்கிறார் வை.பாலு. ஆனால் இணை இயக்குனர். ஷங்கரின் உதவியாளர் என்ற கம்பீரமான தகுதி கையிலிருக்கிறது. இருந்தும் வாழ்வா, சாவா போராட்டம்தான் என்று குமுறுகிறார். அப்படி என்னதான் நேர்ந்தது இவருக்கு!

"முதலில் செந்தில்நாதன், பிறகு வி.சி. குகநாதன், இறுதியாக ஷங்கர் என்று பத்தாண்டுகளைத் தொலைத்து சினிமா கலையைக் கற்றுக் கொண்டேன். ஸ்டார் விஜய் டீ.விக்காக 'ஒருதுளி' என்ற டெலிபிலிம் எடுத்தேன். அதைப் பார்த்த எனது நண்பர்கள், இனி நீ இயக்குனராகி விடலாம் என்று உற்சாகம் தந்தார்கள். துணிவோடு ஓராண்டு காலம் உழைத்து புதிய கதை தயார் செய்து கொண்டு, முதலில் பட அதிபர்களை அணுகினேன். பலர் வாய்விட்டு சிரித்தே விட்டார்கள். உன்னிடம் அஜீத், விஜய் கால்ஷீட் இருந்தால் வா என்று சொன்னார்கள். இன்னும் சில பேர் கதையைக் கேட்பதற்கு முன் ஜாதகத்தை கொடு கம்பெனி ஜோசியரிடம் காட்ட வேண்டும் என்றார்கள். நாள் நட்சத்திரம் பார்க்கிறவர்கள் பக்கம் தலை வைத்து படுக்காமல் நடிகர்களிடம் கதை சொல்ல முயற்சித்தேன்.

"முதலில் அஜீத்தை அணுகினேன். முதல் அடியே பலமாக இருந்தது. "நான் கதை கேட்க மாட்டேன். எனது மேனேஜரிடம் சொல்லுங்கள்" என்றார். பொறுத்துக் கொண்டு மேனேஜரை தேடினேன். அவர் முகத்தை பார்க்கவே மூன்று மாதம் பிடித்தது. அதன்பிறகு ஆறுமாதம் அலையவிட்டு அப்பாயின்ட்மென்ட் கொடுத்தார். பொறுமை காத்தேன். பார்த்தேன். அன்றுதான் என்னை பார்ப்பது போல் என்ன விஷயம் என்றார். கதை சொல்ல வந்தேன் என்றேன். நின்றபடியே. "எங்கே சொல்?" என்றார். முதல் காட்சியை விஷுவலோடு விவரித்தேன். "முதல் காட்சியே அஜீத்துக்கு ஒத்து வராது, இடத்தை காலி பண்ணு" என்றார். முதல் காட்சியின் தொடர்ச்சி அடுத்த காட்சி இருப்பதைப் பற்றி அவர் கவலைப்படவில்லை.

"அடுத்து விஜயை ஓராண்டு துரத்தினேன். இறுதியில் அவரது தந்தை டெலிபோனில் பதில் சொல்லக் கூட நேரமில்லை என்றார். போகட்டும்! பெரிய ரசிகர் பட்டாளம் இருக்கிற, முதல்வர் பதவியோடு இணைத்துப் பேசப்படும் நடிகரிடம் சிபாரிசோடு சென்றேன். என் மனைவியிடம் சொல்லுங்கள் என்றார். அவரைச் சந்தித்தபோது கதையின் அவுட்லைனைக் கேட்டார். அடுத்த கணம் இது என் கணவரின் எதிர்கால அரசியல் வாழ்வுக்கு எதிரான கதை என்று அறிவுஜீவியாக ஆருடம் சொன்னார்.

"சரி வளரும் கதாநாயகர்களிடமாவது முயற்சிக்கலாம் என்று ஸ்ரீகாந்த்தை சந்தித்தேன். அவரோ உங்கள் கதையை நீங்களே விவரித்து டேப்பில் பதிவு செய்து கொண்டு வாருங்கள். நேரமிருந்தால் காரில் போட்டு கேட்கிறேன் என்றார். நான் கேட்பதெல்லாம் இதுதான். ஒரு தாய் கருவை வயிற்றில் சுமப்பது போல, ஒரு கதைக்கருவை உருவாக்கி, முற்றிலும் புதிய முகத்தோடு அதை வடிவமைக்க தூக்கத்தை, உணவை, இளமையைத் தொலைத்து விட்டு வருகிற எங்கள் கனவுகளை நசுக்காதீர்கள். கதை கேட்பதற்கென்று நேரம் ஒதுக்குங்கள்."

— சுட்டு

"மலாக்காவை உருவாக்கினேன்!

மலேஷியாவில் எடுக்கப்பட்ட ஒரு சரித்திரப் படத்துக்கு, சமீபத்தில் கலை இயக்குனராகப் பணியாற்றிவிட்டு வந்திருக்கிறார் மஹி.

"சந்திரலேகா போல ஒரு பிரம்மாண்டமான அளவில் எடுக்கப்பட்ட படம் அது. இனிமேல்தான் ரிலீஸாகவிருக்கிறது. பதினான்காம் நூற்றாண்டில் நடைபெற்ற கதை. கேன்ஸ் திரைப்பட விழாவுக்கு அனுப்புவதை முக்கிய நோக்கமாக வைத்திருக்கிறார்கள். மலேஷிய நாட்டு சரித்திரத்தின் ஒரு முக்கியமான காலகட்டத்தை விளக்கும் படம் இது. அங்கு இந்து சாம்ராஜ்யம் முடிந்து, முஸ்லிம்களின் சாம்ராஜ்யம் தொடங்கும் காலகட்டம்தான் திரைப்படத்தின் முக்கியக் களன்.


அங்கு எனக்குக் காட்டிய செட் டிசைன்களில் பல குறைபாடுகள் இருந்ததை என்னால் உணர முடிந்தது. நமது தமிழ் நாட்டின் பின்னணிக்கும், பதினான்காம் நூற்றாண்டில் மலேஷியா இருந்த நிலைக்கும் நெருங்கிய சம்பந்தமுண்டு. ராஜேந்திர சோழன் அங்கு படையெடுத்து வென்றிருக்கிறான். (அதனால்தான் "கடாரம் கொண்டான்"). அவரது வாரிசான பரமேஸ்வரா என்பவர்தான் அதற்குப் பின் மலேஷியாவில் ஆட்சி செய்தார்.

"இதற்காக அங்கிருந்த ஒரு அருங்காட்சியக க்யூரேட்டர், வரலாற்றுப் பேராசிரியர் இவர்களோடு சேர்ந்து, நானும் நிறைய ஆராய்ச்சிகள் செய்தேன். செட்களுக்கான பட்ஜெட் நான்கு மடங்குக்கும் மேல் அதிகரித்துவிட்டது. என்றாலும் கதாநாயகி இதை ஏற்றுக் கொண்டார் (திகைக்க வேண்டாம், கதாநாயகியும் தயாரிப்பாளரும் ஒருவர்தான்). இந்தப் படத்துக்காக பதினான்காம் நூற்றாண்டிலிருந்த மலாக்கா என்ற முழு நகரத்தையே உருவாக்கினோம். (இப்போது அந்த நகரத்தின் பெரும் பகுதியைக் கடல் கொண்டுவிட்டது). நதிகளை உருவாக்குதல், அக்காலக் கப்பல்களை நிர்மாணித்தல் என்று பலவித முயற்சிகளை ஒரு சவாலாகவே ஏற்று செய்திருக்கிறேன். படத்துக்குப் பெயர் "புத்ரி குனுங் லெடாங்" (லெடாங் மலையின் அரசி என்று அர்த்தமாம்)".

மிக அதிக பெயரை இவருக்கு வாங்கிக் கொடுத்த படங்களைப் பற்றி கேட்டதும் சட்டென்று "குணா" என்றார்.

"கொடைகானலில்தான் செட் என்று முடிவாகிவிட்டது. படத்தின் பெரும்பகுதி நடக்கும் அந்த சர்ச் முழுக்க முழுக்க ஒரு செட். தொப்பி தூக்குப் பாறை என்ற இடத்திலிருந்து, பத்துக் கிலோமீட்டர் தள்ளியிருந்த ஒரு பள்ளத்தாக்கின் முனைப் பகுதியில் அமைந்த இடம் அது. திரைக் கதையின்படி யார் கண்ணிலும் படாத இடம். அதற்கு அந்த இடம்தான் பொருத்தமானது என்று முடிவெடுத்தபின், சுமார் ஒரு மாதகாலம் செலவழித்து

• 'குணா' செட் மாடல்



அந்த செட்டை உருவாக்கினோம். டிசம்பர் என்பதால் கடுமையான பனி. தவிர சமதளம் இல்லையென்பதால் வேலையும் அதிகம். படத்தின் பல காட்சிகள் அங்குதான் என்பதால், செட்டும் கலகலத்துப் போகாமல் இருக்க வேண்டும். பாறைப்பிரதேசம் வேறு. காற்றும் பயங்கரமாக வீசும். சுமார் எழுபது வருடங்களுக்கு முந்தைய கட்டடம் போல காட்ட வேண்டும் என்பதால் நிஜமான பாசிகளை அதன் மீது படறவிட்டோம். கூட கோதுமை மாவு பசையையும் சேர்த்தோம். இரவில் மழை பெய்து காலையில் வெயில் அடிக்கும்போது, அந்தப் பாசி அற்புதமாக வளர்ந்திருந்தது. கட்டடத்தை அடிக்கடி பெயிண்ட் செய்ய வேண்டியிருந்தது. காரணம் அவ்வப்போது பெய்து கொண்டே இருக்கும் மழையில் அது கரைந்து கொண்டே இருந்தது. ஆனால் இதுவே இயல்பான பழைய அழகை அதற்குக் கொடுத்துவிட்டது. ஸ்டண்ட் மாஸ்டர் விக்ரம் தர்மா, அந்த இடத்தை முதலில் பார்த்தபோது "பழங்காலக் கட்டடமா இருக்கே. ஸ்டண்ட் காட்சிக்குப் போதிய சப்போர்ட் வேணுமே" என்றார். அது செட் என்பதையே அவர் யூகிக்கவில்லை என்பதில் சந்தோஷமாக இருந்தது.


"பாட்ஷா படத்தில், ரஜினி சென்னையில் வசிக்கும் அத்தனை காட்சிகளும் இடம் பெறும் அவென்யூ முழுவதும் செட்தான். வாஹினி ஸ்டுடியோவில், விஜயா மருத்துவமனைக்குப் பின்புறம் இருந்த காலி மனையில் அதை உருவாக்கினோம். நிஜமாகவே ஐந்து தார்ச் சாலைகள் போட்டோம். வீடுகள், கடைகள் மட்டுமில்லாமல் கோயில், ஆட்டோ ஸ்டாண்ட், வங்கி, பார்க் என்று எல்லாவற்றையுமே உருவாக்கினோம். ஒரு மாதம் பத்துநாள் தேவைப்பட்ட இந்த மொத்த செட்டுக்கும் முப்பத்தைந்து லட்ச ரூபாய் ஆனது (அப்போது அது மிகப் பெரும் தொகை). சராசரியான மனிதர்கள் வசிக்கும் இடத்தை, சராசரியாகவே காண்பிப்பதற்கும் ஒரு கிரியேட்டிவிட்டி வேண்டும். அதை இந்த செட்டில் பயன்படுத்தினேன். ஒரு பாட்டின் பின்னணியில் "சத்யா" என்ற பெயரோடு ஒரு திரையரங்கைக் காண்பித்தோம். ஆனால் அதை சத்யம் தியேட்டர் என்றே நினைத்து, அதன் வாசலில் ரஜினியை ஆட வைத்து எப்படித்தான் சமாளித்தார்களோ என்ற கேள்வியை பலரும் எழுப்பினார்கள்.



• மஹி

கலை இயக்கத்துக்கு அதிக பட்ஜெட் ஒதுக்கப்பட வேண்டும். இப்போதெல்லாம் பிஸினஸ் நிச்சயம் என்று நம்பும் பெரிய நடிகர்களின் படங்களில் மட்டும் இந்த பட்ஜெட் அதிகமாக இருக்கிறது. இதைவிட முக்கியமாக, கஷ்டப்பட்டு உருவாக்கும் செட்டுகளில் பத்தில் இரண்டைத்தான் சரியான விதத்தில் திரையில் காட்டுகிறார்கள். இதனால் பல சமயம் எங்களது உழைப்பு போதிய அளவுக்கு வெளியில் தெரியாமல் போகிறது. இதையும் இயக்குனர்கள் மற்றும் ஒளிப்பதிவாளர்கள் கவனத்தில் கொண்டால் நன்றாக இருக்கும்" என்கிறார் மஹி.

- ஜி.எஸ்.எஸ்.





கண்கள் இரண்டும்...

உங்கள் கண்கள்தான் மிகச் சிறந்த கேமிரா. மிகச் சக்தி வாய்ந்த இந்தக் கேமிராவின் கடைக்கண் வீச்சால் சாம்ராஜ்யங்கள் சாம்பலாயின; அரசர்கள் ஆண்டிகளானார்கள்; ஆண்டிகள் அரசர்களானார்கள்.

இவ்வளவு சக்தி வாய்ந்த கண்கள், நமது மனத்தின் ஜன்னல்கள். அவற்றின் மூலமே நாம் உலகைப் பார்க்கிறோம். பிறரை எடை போடுகிறோம்; நாமும் பிறரால் எடை போடப் படுகிறோம். இந்தக் கண்களைப் பற்றி இப்போது கொஞ்சம் விரிவாகப் பார்ப்போம்.

நம்முடைய ஒவ்வொரு கண்ணுக்குப் பின்னும் நூற்று முப்பது மில்லியன் ஒலி வாங்கிகள் (optical receivers) உள்ளன. இவை அனைத்தும் மிகச் சிறிய இடத்தில் (ஒரு நகத்தின் அளவு) அமைக்கப்பட்டிருக்கின்றன. நீங்கள் ஒரு காட்சியைப் பார்ப்பதாக வைத்துக் கொள்வோம். இப்போது என்ன நிகழ்கிறது? நீங்கள் காணும் காட்சி பல கோடிக்கணக்கான ஒளிப்புள்ளிகளாகப் (தொலைக்காட்சியில் சில சமயம் தெரியுமே அதைப் போல) பிரிக்கப்பட்டு, 'டி கோட்' செய்யப்பட்டு, மூளையிலுள்ள 'ஆஸிபிடல் லோப்' என்ற பகுதிக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. அங்கு இந்தப் புள்ளிகள் இணைக்கப்பட்டு படம் உருவாக்கப்படுகிறது. மூளை அந்தப் படத்தின் பொருளை உணர்த்துகிறது. இவையனைத்தும் ஒரு நொடிக்கும் குறைவான நேரத்தில் நடைபெறுகின்றன. உலகில் மனிதனால் உருவாக்கப்பட்ட எந்தக் காமிராவும், கண் இயங்கும் வேகத்துக்குப் பக்கத்தில்கூட வர முடியாது. கண்களின் ஆற்றலைப் பற்றி இவ்வளவு விளக்கமாகக் குறிப்பிடுவதற்கு இரண்டு காரணங்கள் இருக்கின்றன.

1. நம் கண்ணின் ஆற்றலைப் பற்றி நமக்குத் தெரியாது.

2. அந்த ஆற்றலை நாம் முழுமையாகப் பயன்படுத்துவதில்லை.

சரி, இனி படிக்கும்போது கண்கள் என்ன செய்கின்றன என்று பார்ப்போம்.

வாசிக்கும்போது கண்கள் வரிகளின் மீது நகர்கின்றன. இந்த 'நகர்தல்' ஒரு நேர்க்கோட்டில் ஒரே சீராக, தண்டவாளங்களின் மேல் இரயில் ஓடுவதைப் போல் நடக்கிறது என்றுதானே நீங்கள் நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள்! ஆனால் உண்மையில் கண்கள் இவ்வாறு நகர்வதில்லை. வாசிக்கும்போது நம் கண்கள் நேர்க்கோட்டில் ஒரே சீராக நகராமல், ஒரு தவளையைப் போல் தாவித் தாவி நகர்கின்றன. இந்தத் தாவுதலை கண் வீச்சு (eye span) என்கின்றனர்.



படம் 1

உங்களின் ஒரு கண் வீச்சுக்குள் எத்தனைச் சொற்கள் அடங்குகின்றனவோ, அதைப் பொறுத்து உங்கள் வாசிக்கும் வேகம் (reading speed) அமையும். இதைச் கொஞ்சம் விரிவாகப் பார்ப்போம்.



படம் 2



படம் 3

ராஜி என்பவரின் கண்கள் நகரும் விதத்தைப் படம் 2 காட்டுகிறது. இவர் கண் வீச்சின் எல்லை குறைவாக இருப்பதால், அதில் அதிகபட்சமாக இரண்டு வார்த்தை

கள் மட்டுமே சிக்குகின்றன. படம் 3 - குமார் என்பவரின் கண்வீச்சின் எல்லை அகலமாக இருப்பதால், அதில் அதிகமான வார்த்தை கள் சிக்குகின்றன. ஒரு கை தேர்ந்த மீனவன் தன் வலையை அகலமாக வீசுவதைப் போல், நீங்கள் உங்கள் கண்களை வீச வேண்டும். கண் வீச்சின் எல்லை அதிகமா னால், அதற்குத்தகுந்தாற்போல் உங்கள் கண் களின் 'லென்ஸ்' விரிவடைந்து, அதிகமான சொற்களைக் கவ்வும்.

நீங்கள் வேகமாக வாசிக்க வேண்டுமா னால் இரண்டு விஷயங்களைச் செய்ய வேண்டும்.

1. உங்கள் கண்களை வேகமாகத் தாவிச் செல்ல வைக்க வேண்டும்.

2. உங்கள் கண்வீச்சின் எல்லையை அதி கரிக்க வேண்டும்.

வாசிக்கும் வேகத்தை அதிகரிக்கும் முயற் சிகளைத் தொடங்கும் முன்பு, தற்போது உங்கள் வாசிக்கும் வேகம் என்னவென்பதை நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டாமா? இதைத் தெரிந்து கொள்ள நீங்கள் செய்ய வேண்டியது:

சற்றே கடினமான ஒரு கட்டுரையை வாசிக்கத் தேர்வு செய்து கொள்ளுங்கள். அருகில் ஒரு கடிகாரத்தையும் வைத்துக் கொள்ளுங்கள். கடிகாரம் காட்டும் நேரத் தைக் குறித்துக் கொண்டு வாசிக்க ஆரம் பியுங்கள். ஐந்து நிமிடம் முடிந்ததும் எந்த வார்த்தையில் நிறுத்தினீர்கள் என்பதைக் குறித்துக் கொள்ளுங்கள். அடுத்தபடியாக நீங்கள் படித்த பக்கங்கள், இவற்றில் ஏதா வது ஒரு பக்கத்திலுள்ள வரிகளின் எண் ணிக்கை ஆகியவற்றைக் குறித்துக் கொள் ளுங்கள். பின்பு இந்தப் பக்கங்களில் ஏதாவது ஒரு வரியைத் தேர்ந்தெடுங்கள். இப்படித் தேர்ந்தெடுக்கப்படும் வரி, மிக அதிக/மிகக் குறைந்த சொற்கள் கொண்டதாக இல்லா மல் பார்த்துக் கொள்ளுங்கள். நீங்கள் தேர்ந் தெடுத்த வரியில் ஏழு சொற்கள் உள்ளன என்று வைத்துக் கொள்வோம். மற்றப் பக்கங் களிலும் இவ்வாறே இருப்பதாக சராசரிக் கணக்கை நாம் போட்டுக் கொள்ளலாம்.

இப்போது உங்கள் வாசிக்கும் வேகத்தை இப்படிக் கணக்கிடலாம்:

நீங்கள் படித்த பக்கங்கள் : 5

ஒரு பக்கத்தில் உள்ள வரிகள் : 30

5 பக்கங்களிலும் உள்ள மொத்த வரிகள் : 30 X 5 = 150

சராசரியாக ஒரு வரியிலுள்ள சொற்கள்: 7

150 வரிகளில் உள்ள மொத்தச் சொற்கள்: 150 X 7 = 1050

நீங்கள் படிக்க எடுத்துக் கொண்ட காலம்: 5 நிமிடங்கள்

உங்கள் வாசிக்கும் வேகம்: 1050/5= ஒரு நிமிடத்துக்கு 210 சொற்கள்.

உங்கள் வாசிக்கும் வேகம் ஒரு நிமிடத்துக்கு 250 - 350 சொற்கள் என இருக்க வேண் டும். இதற்குக் கீழ் இருந்தால், உங்கள் வேகத்தை நீங்கள் கண் டிப்பாக அதிகப்படுத்த வேண் டும். வாசிக்கும் வேகம் நிமிடத் துக்கு 250 சொற்கள் என இருந் தால் கூட, இதை நீங்கள் இன்னும் அதிகரித்தல் நல் லது.

வாசிக்கும் வேகத்தை அதிகரிக்கும் பயிற்சிகளை அடுத்த அத்தியாயத்தில் பார்ப் போம்.



படம்: ஸ்ரீஹரி

பேராசிரியர் பா.இராம்கோபால்

தத்துவத் தமிழ் மகான்

ஆனந்தி

திருவான்மியூரில் மயூரபுரம் என்று வழங்குகின்ற இடத்தில் பாம்பன் சுவாமி சமாதிக் கோயில் இருக்கிறது. பௌர்ணமிதோறும் நள்ளிரவு நேரத்தில் இந்தத் தத்துவத் தமிழ் மகானின் கோயிலில் மிக நேர்த்தியான பூஜை நடை பெறுகிறது.

'எனைத் தள்ளினாலும் எனை நம்பியவர்களைத் தள்ளேல்' என்று முருகப் பெருமானை வேண்டியவராதலால், பாம்பன் சுவாமிகளை வழிபட்டால், முருகனருள் நிச்சயம் பெறலாம் என்று பக்தர்கள் நம்புகிறார்கள். "என்னை ஆதரித்தருளிய பரம ரகசிய சக்தி என்னை நம்பினோரை ஆதரியாது நிற்குமோ" என்று அவர் கூறியதை ஒரு மந்திரமாகவே கருதுகிறார்கள்.

முருகப் பெருமானிடம் சரணடைந்த பெரியார், பதின்மூன்று வயதிலேயே ஒரு நாளைக்கு ஒரு பாடலாக எழுதி, முருகப் பெருமானுக்கு நூறு பாடல்களால் பாமாலை சாத்தினார்.

ஸ்ரீ குமரகுருதாசர் என்ற பாம்பன் சுவாமிகளின் வரலாறு அற்புதங்கள் நிறைந்தது. பக்தி என்பதே ஓர் அற்புதம்தான்.

ராமேச்வரத்தில் அவதரித்து திருவான்மியூரில் முக்தியடைந்தவர். தேவராய சுவாமிகளின் சஷ்டி கவசத்தின் மீது நம்பிக்கை வைத்தவர். அவருடைய முதல் பாடல் ஈசன், உமை, கணபதி, முருகன் நால்வரையும் புகழ்ந்து அமைந்திருக்கிறது.


"கங்கையைச் சடையில் பரித்து மறி
மழுவங் கரத்தில் தரித்து ருத்ரங்
காட்டு முனை யதன்சைத்து அணிமன்றில்
ஆடு கங்காளற்கு பின்னமாய
சங்கரி சடாதரி சருவாணி கல்யாணி
தற்பரி பவானி தந்த
தந்திமுக னோடுமற் றைந்து பெயர்நீர்மையும்
தன்னகத் துள தெய்வமே

வாழ்வுக்கும் வாழ்வாய வாழ்வினை அளிக்கும் உன்
மலரடி தியானிக்கவும்
அங்கையில் நெல்லியங் கனியெனத் திருவருளை
அடையவும் கருணைநல்காய்!
அருமறை புகழ்ந்த திருமுருக சரவணத்து
ஆதியே அமரர்கோவே!

குமரகுரு இவருக்குப் பலவிதமாக அருள்புரிந்தான். முருக பக்தர்கள் பக்தியோடு பாராயணம் செய்யும் சண்முக கவசத்தைப் பாடி மகிழ்ந்தார். பிற்காலத்தில் சுவாமிகள் மீது குதிரை வண்டி மோதி கால் முறிந்து போய்விட்டது! அவரை ஜெனரல் ஆஸ்பத்திரியில் சேர்த்தார்கள். மிகவும் வயதானபடியால் இனிமேல் எலும்பு சேர்வது கஷ்டம் என்று டாக்டர்கள் கை விரித்து விட்டார்கள். அப்போது சுவாமிகளின் சீடர் சுப்ரமணிய தாஸர், ஷண்முக கவசத்தை ஓயாமல் ஓதினார். இரவு இரண்டு மயில்கள் வந்து தோகை விரித்தாடி சுவாமிகளுக்குத் தரிசனம் கொடுத்தன. இன்னொரு நாள் தன் பக்கத்தில் ஓர் அழகான குழந்தையைக் கண்டார். பதினைந்தாவது நாள் கால் சரியாகி நடக்கவும் தொடங்கினார். இந்த 'மயூரவாகன சேவனம்', ஒவ்வொரு மார்கழி மாதமும் வளர்பிறை பிரதமையன்று, திருவான்மியூர் மயூரபுரத்தில் கொண்டாடப்படுகிறது.

பாம்பன் சுவாமிகள் தமது நாற்பத்து நான்காவது வயதில், பிரப்பன் வலசை என்ற ஊரில் தவம் செய்தார். அப்போது அருணகிரிநாதரும், அகத்தியரும் கூட வர, முருகப் பெருமான் பாம்பன் சுவாமிகளுக்குத் தரிசனம் கொடுத்தாராம். உபதேசம் செய்ததாகவும் சொல்கிறார்கள்.

முருகப் பெருமான், சுவாமிகளைச் சோதனை செய்ததும் உண்டு. பழனிக்குப் போக வேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டிருந்தார். அதைத் தம் நண்பர் ஒருவரிடம் சொன்னபோது, "இது முருகன் கட்டளையா?" என்று கேட்டாராம். "ஆமாம்! ஆண்டவன் அழைத்திருக்கிறான்" என்று சுவாமிகள்



சொல்லிவிட்டார். பொய் சொன்னார் என்று கோபம் கொண்ட முருகப் பெருமான், "நான் அழைக்கிற வரையில் நீ பழனிக்கு வரக் கூடாது" என்று தடை உத்தரவு போட்டு விட்டாராம். பக்தருக்கு இதைவிடப் பெரிய சோதனை என்ன இருக்க முடியும்?

பாம்பன் சுவாமிகள் கோயில் லக்ஷ்மி புரம் அருகில் கலாக்ஷேத்திரத்தை அடுத்து அமைந்திருக்கிறது! மடமும் கோயிலும் ஏதோ வழக்கில் அகப்பட்டுக் கொண்டிருக்கின்றன. ரொம்ப வருத்தமாக இருக்கிறது! ஒற்றுமையாக இருந்தால் எவ்வளவு சிறப்பாகப் பணியாற்ற லாம் என்று ஆதங்கமாக இருக்கிறது. திருப் பணிகள் நின்றுவிட்டன.

ஆனால் கோயிலும் தோட்டமும் துப்புர வாக இருப்பதைப் பார்த்து மகிழ்ச்சி ஏற்படு கிறது. முதலில் சிறு கோவில். அடுத்து ஒரு பெரிய மண்டபம். குமரகுருதாஸரின் படம்

நன்றாக அலங்கரிக்கப்பட்டு கம்பீரமாக இருக்கிறது. தவக்கோலத்தில் பாம்பன் சுவாமிகளைத் தரிசிக்கும்போது மனத்தில் அமைதி பரவுகிறது.

வட்டவடிவமான தோகையை விரித்த மயில், அதன் மீது கம்பீரமாக அமர்ந்திருக்கும் முருகப் பெருமான் - ஓம்கார சொரூபமாகவே தெரிகிறார்கள். ஷடாக்ஷர உபதேசம் பெற்ற குமரகுருபரதாஸரின் மனத்தைக் கவர்ந்ததில் அதிசயமே இல்லை.

இந்தப் பெயரை அவர் தாமாகவே சூட்டிக் கொண்டிருக்கலாம். மகான் குமரகுருபரரின் பாடல்களில் ஈடுபட்டுப் பரவசமாகி இருக்கலாம். அது நமக்குத் தெரியாது. ஆனால் சுவாமிகள் காசிக்குச் சென்றபோது, குமரகுருபரர் மடத்தில் தங்கியிருந்தார் என்பது வரலாறு. அங்கு காஷாயம் பெற்றதாகச் சொல்கிறார்கள்.

இசையாலும் நடனத்தாலும் இறைவனைத் தொழுகின்ற கலாக்ஷேத்திரம் ஒரு பக்கம். சின்னஞ்சிறு மதலையரும், மங்கையரும், மாணவரும் படிக்கும் பள்ளிக் கூடங்கள் ஒரு பக்கம். தமிழே மூச்சாக வாழ்ந்த பெரியார் உ.வே. சாமிநாதய்யர் நூலகம் ஒரு புறம், என்று நான்கு பக்கமும் கல்விக்கூடங்களால் சூழப்பட்டிருக்கிறது மயூரபுரி.

இளம் மரங்கள் பசுமையைப் பரப்ப, இளங் காற்று மென்மையைப் பரப்ப, இசையொலி காதுகளை நிரப்ப, தமிழ் நூல்கள் இனிமையைப் பரப்ப வீற்றிருக்கிறார் முருகப் பெருமான். அவரது பாதத்தில் வீற்றிருக்கிறார் பாம்பன் சுவாமிகள்.

நாடு முழுதும் நடந்து சென்று தெய்வ தரிசனம் பெற்றவர். செந்தூர் முருகனைக் கண்டபோது கவிதைப் பெருக்கெடுக்கிறது.

தேவர் சிகாமணி சித்தர் சிகாமணி
தெள்ளறிவுத்
தூவர் சிகாமணி யோகர் சிகாமணி
தோமில் கவி
நாவர் சிகாமணி நாதர் சிகாமணி
நண்ணும் என்னுள்
மேவு சிகாமணி செந்தியில் வாழ்வடி
வேலவனே.

(தூவர் = தூய்மையானவர், தோமில் = குற்றமில்லாத)

ஒரே சொல் மடக்கி மடக்கி வருவது சொல்வதற்குச் சுலபமாக இருக்கிறது.

ராமேச்வரத்தில் பிறந்தவராயிற்றே. அருள் மிகு ராமநாத சுவாமியையும், பர்வதவர்த்தனி அம்மையையும் தரிசித்தபோது, அவருடைய அனுபவம் எவ்வாறு இருக்கிறது?

எல்லாம் குமரப் பெருமான்
என்றோர்த்திடும் என்னகத்தே
நல்லான் பரிதிக்குல ராமன் பூசித்த
நாதனையும்
அல்லாஞ் சுரியற் பருவத வர்த்தினி
அம்மையையும்
வல்லான் சிவசண்முகன் தான்
என்றெண்ணி வணங்குவலே.

இது அல்லவா சம தரிசனம்! நமது இஷ்ட தெய்வத்தை எல்லாத் தெய்வங்களிலும் காண்பதுதான் அத்வைதம் என்று தோன்றுகிறது. இந்த அத்வைதத்தை நாம் புரிந்து கொண்டாலே போதும். சுவாமிகள் இயற்றியுள்ள "தகராலய ரகசியம்" எல்லாம் நமக்குப் புரியாது.

உபாத்தியாயராக இருந்த முனியாண்டியா பிள்ளை என்பவர், "நான் பூஜிக்கும் முனீசுவரனைப் பாடு" என்றாராம். இவர் "முருகனைத்தான் பாடுவேன்" என்று சொல்ல, ஆசிரியர், "முனியை முருகனெனப் பாடு" என்றாராம். அதுவே உபதேசமாகிவிட்டது போலும்!

அர்ச்சனை செய்வதற்காக முருகன் சந்நிதிக்குப் போகும்போது, அர்ச்சகர்

"சரவணபவ என்னும் திருமந்திரம்தனை
சதா பஜி எந்நாவே"

என்று பாடிக் கொண்டிருப்பதைக் கேட்டு மகிழ்ச்சி உண்டாயிற்று. திடீரென்று எதிரில் ஓவியர் தருமன் தோன்றினார்.


'இதுதான் திருவருள் கூட்டி வைத்தது என்கிறார்களே அது போல இருக்கிறது' என்று எண்ணமிட்டுக் கொண்டே தீபாராதனையைக் கண்டு கன்னத்தில் போட்டுக் கொள்கிறோம். ஷடாக்ஷர உபதேசம் தானாகவே கிடைத்தது என்று மகிழ்கிறோம்.

(தொடரும்)

"நம்ப ஜமீன் காளையை அடக் கிறவனுக்கு என் பெண்ணைக் கட்டி தர்றேன்னு சொல்லியும் ஒருத்தனும் முன்வர லையே..."

"அதுல தான் சிக்கல் எஜமான்... காளையை வேணா அடக்குறோம், ஆனா பெண் வேணாங்கிறாங்க."

- வி. கிருஷ்ணகுமார்



ஆட்சியைப் பிடிக்க அசத்தல் ஐடியா!



"உத்தரப் பிரதேசத் தேர்தலின் வாக்குப் பதிவு அன்று உயர் ஜாதியினர், வாக்குச் சாவடியின் முன் பெரிய ஷாமியானா போடுவார்கள். அட்டகாசமாக விருந்து தயாரிக்கப்படும். அரசு அலுவலர்கள், தேர்தல் அதிகாரிகள் ஆகியோருக்குச் சாப்பாடு போட்டு, நன்றாக கவனிப்பார்கள். வருடத்தில் பல நாட்கள் முழு அரிசிச் சோற்றையே பார்க்காத தாழ்த்தப்பட்ட மக்கள், அந்தச் சாப்பாட்டால் கவரப்பட்டு, உயர் ஜாதியினர் சொல்படி வோட்டுப் போட்டு விடுவார்கள். சமீப காலம் வரை தாழ்த்தப்பட்ட மக்களின் வோட்டு இப்படித்தான் பெறப்பட்டது. ஆனால் எங்கள் பகுஜன் சமாஜ் கட்சி களத்தில் குதித்த பிறகுதான், நிலைமை மாறியது. இருந்தாலும் உயர் ஜாதியினர் பந்தல் போட்டு விருந்து கொடுக்கின்றனர். ஆனால் தாழ்த்தப்பட்ட மக்கள் அந்த விருந்தை லட்சியம் செய்வதில்லை. அன்று முழுக்க உண்ணாவிரதம் இருந்து பகுஜன் சமாஜ் கட்சியினர் வாக்கு சேகரிக்கின்றனர். இப்படிப்பட்ட தியாகங்களைச் செய்ததால்தான் உ.பி.யின் கணிசமான இடங்களை நாம் வெல்கிறோம்'' என்றார் மாயாவதி. அதே மூச்சில் "தமிழகத்திலும் நீங்கள் இப்படிச் செயல்பட்டால் நமது ஆட்சி நிச்சயம்'' என்று அவர் முடித்தபோது காதைப் பிளந்தது கரவொலி.

சென்னையில் நடைபெற்ற தொண்டர் (?) பயிற்சி முகாமுக்காக, அலகாபாத்திலிருந்து ஸ்பெஷல் விமானத்தில் வந்திருந்தார் மாயாவதி. தாஜ் கொரமண்டலில் தங்கியிருந்த அவர் பத்திரிகையாளர்களைக் கூட சந்திக்கவில்லை. பயிற்சி முகாமில் இடைவெளியில்லாமல் மூன்று மணி நேரம் இந்தியில் பேசினார் (அதில் ஒன்றரை மணி நேரம் தமிழ் மொழி பெயர்ப்பு).

"என்னுடைய வங்கிக் கணக்கில் இரண்டு கோடி என்று பிரமாதப்படுத்துகிறது சி.பி.ஐ. அதில் உள்ள ஒவ்வொரு பைசாவும் தாழ்த்தப்பட்டவர்களுக்குச் சொந்தமானது. வர இருக்கும் என் பிறந்த நாளின் போது கட்சிக்கு எல்லோரும் நிதி கொடுக்க வேண்டும். தமிழ்நாட்டுக்கென்று குறியீடு உள்ளது. என் வங்கிக் கணக்கில் சேரும் பணத்தைப் பார்த்து சி.பி.ஐ. பிரமிக்க வேண்டும்'' என்ற மாயாவதி, பகுஜன் சமாஜ் கட்சி, வர இருக்கும் பாராளுமன்றத் தேர்தலில் காங்கிரஸ் பக்கமா இல்லை மறுபடி பா.ஜ.க. பக்கமா என்பதைப் பற்றி மூச்சு விடவில்லை!

- ஸ்ரீநி

படம் : மீடியா ராமு

வட்டமேஜை



✉ ஆர்ப்பாட்டம் மிகுந்த சென்னை மாநகருக்குள் ஆன்மிகப்பதியாக, மிக்க அடக்கமான பகுதியாகத் திகழும் 'திருமயிலை'யைப் பற்றிப் படித்து பிரமிப்பு அடைந்தேன்.
திருச்சி - 102, பறம்பை இரா.சு. பிரகாசம்.

✉ 'மெல்லிசை மன்னர்' எம்.எஸ். விஸ்வநாதனின் பேட்டி மெய் சிலிர்க்க வைத்தது. இசையைக் கற்றுக் கொள்ள அவர் இளம் வயதில்பட்ட இன்னல்களை அழகாக விளக்கியுள்ளார். அவருடைய மெட்டுக்கள் காலத்தால் அழியாதது.
பொன்னிவாடி, டி. திருமலைசாமி.

✉ குமரி அனந்தன் அவர் ஊரைப் பற்றி குறிப்பிட்டதில், புளியமரத்தடிப் பயிற்சியைப் படித்தபோது இனிப்பாகத்தானிருந்தது!
திசையன்விளை, ஆர்.ஜி.ஏ. ராமன்.

✉ கல்கி வழங்கிய குமரி மாவட்டச் சிறப்பிதழ் மூலம் பல அரிய செய்திகளை அறிந்து கொண்டதில் மகிழ்ச்சி.
மதுரை - 16, பி. ராஜசேகரன்.

✉ சுற்றுலா வரைபடத்திலிருந்து குமரி திருவள்ளுவர் படத்தை எடுத்துவிட்டது நமக்கு எந்தவித ஆச்சரியத்தையும் அளிக்கவில்லை! வாஸ்துவைக் காரணங்காட்டி உண்மையான சிலையை இதுவரை அகற்றாமலிருக்கிறார்களே என்று ஆனந்தக் கூத்தாடுவோம்... வாருங்கள் ஸ்வாமி!
சென்னை - 30, புளியரை கணேசன்.

✉ வருகின்ற பாராளுமன்றத் தேர்தலில், தமிழக அரசியல் கூட்டணி எப்படியிருக்கும் என்பதை விளக்கிய தங்கள் தலையங்கம் சரியான 'எலெக்ஷன் ட்ரெய்லர்'.
நெல்லையப்பபுரம், டி. செல்வன்.

✉ 'வாங்க சிங்கப்பூரில் படிக்கலாம்' கட்டுரை ரொம்பப் பயனுள்ளது.
நெய்வேலி, சு.ஸ்ரீகாந்த்.

✉ மூடித் திறக்கும் கூட்டணிக் கதவுகள்!' தலையங்கம் படித்தேன். பா.ஜ.க கூட்டணியிலிருந்து வெளியே வந்திருக்கும் தி.மு.கவின் காய் நகர்த்தலை வைத்துத்தான், தமிழ் நாட்டின் அரசியல் போக்கு நிர்ணயிக்கப்படும். இதை மனத்தில் வைத்து தி.மு.க செயல்பட வேண்டும். உங்களின் தலையங்க ஆலோசனைகளை அக்கட்சி மனத்தில் கொண்டு செயல்படுவது அக்கட்சிக்கும், நாட்டுக்கும் நல்லது.
மொரட்டுப்பாளையம், இரா.வி. சௌந்தர்யா விசாலினி.

✉ 'கள்ளிக்காட்டு இதிகாசம்' நாவலைப் பற்றி கு. ஞானசம்பந்தம் விவரித்திருந்த பாங்கு, நாவலை மீண்டும் ஒருமுறை படித்து பரவசமடைந்த சிலிர்ப்பை உண்டாக்கியது.
கந்திகுப்பம், க.மோ. சிவா.


✉ நாகர்கோவிலுக்கும் தக்கலைக்கும் இடையில் உள்ள 'வில்லுக்குறி' பாலம் பற்றிய செய்தி ஆச்சர்யமாக இருந்தது.
திருப்பூர் - 4, பா.சு. மணிவண்ணன்.

இது பொங்கல் வாரம்ங்க! ரூ.10000/- போட்டி இன்னொரு சர்க்கரைப் பொங்கல்! ம்... வாங்க!

10வது போட்டி, பொங்கல் பரிசு உங்களுக்குத்தான். கேள்விகளைப் படிச்சு, புரிஞ்சுக்கிட்டுப் பதில்களை நிரப்புங்க. கரும்பு கடிக்கிற மாதிரி சுலபமான G.K கேள்விகள்தான்.

கலக்குங்க!

- எல்லாக் கேள்விகளுக்கும் சரியான பதில் எழுதிய கல்கி வாசகர் ஒருவருக்கு, ரூ.10,000 பரிசு வழங்கப்படும்.
- நிறையப்பேர் சரியாக எழுதியிருந்தால், குலுக்கல் முறைதான்.
- ஆறுதல் பரிசாக 20 பேருக்குத் தலா ரூ. 100 ரொக்கப் பரிசு.
- கல்கி வாசகர்கள் எங்கிருந்தாலும் இதில் பங்கேற்கலாம்.




வாசகர்கள் அனைவருக்குமே

கல்கி

வழங்கும் கலக்கல் குவிஸ் போட்டி

- இப்பரிசுத் தொகை வருமானவரி விதி முறைகளுக்கு உட்பட்டது.
- உறையின் மீது 'ஆஹா! ரூ.10,000 (10)' என்று குறிப்பிட வேண்டும்.
- போட்டி தொடர்பாக விசாரணைகள் அனுமதிக்கப்பட மாட்டாது.
- ஆசிரியரின் தீர்ப்பே இறுதியானது.
- விடைகள் 24.1. 2004க்கு முன்னதாக கல்கி அலுவலகத்துக்கு வந்து சேர வேண்டும்.

பொங்கலோ பொங்கல்!



குவிஸ் போட்டி கூப்பன் - 10

1. செவ்வக வடிவமற்ற, வேறு வடிவத்தில் தேசியக் கொடியை உடைய நமது அண்டை நாடு ....
2. எப்போதும் காற்று வீசும் திசை நோக்கியே தலை வைத்துத் தூங்கும் வீட்டு மிருகம் ....
3. 'My Presidential Years' என்ற நூலை எழுதிய இந்திய குடியரசுத் தலைவர் ....
4. இந்திய நேரம் (IST) கணக்கிட அடிப்படையாகக் கொள்ளப்பட்டிருக்கும் இந்திய நகரம் ....
5. பிராட்கேஜ் இருப்புப்பாதையில் தண்டவாளங்களுக்கிடையே உள்ள தூரம் ....
6. 'ஆனந்த மடம்' - வங்காள நூலிலிருந்து, சுதந்திரப் போராட்டத்திற்காக எடுத்தாளப்பட்ட மந்திரச் சொற்கள் ....

பெயர் : ....

முகவரி : ....

....

கையொப்பம் : ....

முக்கூர் லக்ஷ்மி நரசிம்மாச்சார்யார்

அவ்யய: என்ற சப்தத்துக்கு அர்த்தம் சொன்னேன். பகவான் வாசுதேவன்தான் எல்லாம் என்று சொல்லக்கூடிய ஓர் உத்தமமான ஆத்மா கிடைப்பதே துர்லபம் அல்லவா! அப்படி ஒருவன் கிடைத்தானானால் அந்த பகவான் அவனை விட்டு விடுவானா? அப்படிப்பட்ட ஓர் அதிகாரியைக் கீழே தள்ளுவானா? ஒரு நாளும் தள்ள மாட்டான்! அவ்வாறு தள்ளாதவன்தான் அவ்யயன் - பரமாத்மா.

அவ்யய: என்ற பதத்துக்குப் பரமாத்மா என்று அர்த்தம் சொன்னோம். கொள்ளக் குறைவிலன் அவன் என்றும் பார்த்தோம். இதே அவ்யய சப்தம் ஜீவாத்மாவுக்கும் பொருந்தும். அதைத்தான் ஆசார்யர்கள் ஸஹஸ்ரநாம வியாக்யானத்திலே சொல்கிறார்கள் - அவ்யய: என்றால், அந்த பரமாத்மாவின் தயையினால் முக்தாத்மாவுக்கும் குறைவில்லை. முக்தாத்மாவை பகவான் திருப்பி அனுப்ப மாட்டான். மறுபடியும் பிறவி என்பது அவனுக்குக் கிடையாது. இவனும் குறைவுபடாமல் எப்போதும் அந்த எம்பெருமானை அனுபவித்துக்கொண்டே இருப்பான் என்று விளக்கிக் காட்டப்பட்டிருக்கிறது. ஆகவே அவ்யய சப்தத்தினாலே, 'பரமாத்மா, முக்தாத்மா' என்று இரண்டு பேருமே சொல்லப்படுகிறார்கள்.

அடுத்த பதம் ரொம்ப அழகான பதம் - புருஷ:

புருஷ சப்தத்தினாலே எத்தனையோ அர்த்தங்கள் காட்டித் தரப்படுகின்றன. அவற்றிலே நான்கு அர்த்தங்கள் - அந்த நான்கு அர்த்தங்களையும் மத்வாச்சார்யார் விளக்குகிறார்; அந்த நான்குக்கும் ஆதி சங்கரர் அர்த்தம் சொல்கிறார்; அதே நான்கை விசிஷ்டாத்வைத ஆசார்யரான பராசர பட்டரும் எடுத்துக் காட்டுகிறார், ராமானுஜர் எடுத்துக் காட்டுகிறார்; ஸ்வாமி தேசிகன் எடுத்துக் காட்டுகிறார்.

எல்லா ஆசார்யர்களும் போற்றும்படியான ஓர் உயர்ந்த திருநாமம், ஓம் புருஷாய நம: ஏனென்றால் புருஷாய நம: என்று சொன்னால் பகவானுக்கு அவ்வளவு சந்தோஷமாம்... விஷ்ணு புராணத்திலே சொல்கிறார்:

'புருஷன் என்று சொன்னால் அது விஷ்ணுவையே குறிக்கும்'

லக்ஷ்மி கல்யாணத்திலே நாம் பார்க்கலாம்... அமிர்தமதன காலத்திலே, பாற்கடலைக் கடைந்தபோது, மஹாலக்ஷ்மி ஆவிர்ப்பவித்தாள். அவளுக்கு விசேஷமான திருமஞ்சனம். புஷ்கலாவர்த்தம் என்கிற மேகம்... அந்த மேகத்திலேயிருந்து நீர் மொண்டு, எடுத்து, அவளுக்கு விசேஷமான திருமஞ்சனம் நடக்கிறது. விசேஷமான அலங்காரம். கையிலே மாலை, எடுத்துக் கொண்டு வருகிறாள். எல்லோரும் பார்த்துக்கொண்டு இருக்கும்போதே - அத்தனை பேரும் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் - மஹாலக்ஷ்மி அந்த மாலையை பகவான் நாராயணனுடைய உயர்ந்ததான கழுத்திலே அலங்கரித்து, அவனுடைய வக்ஷஸ்தலத்திலே ஏறி உட்கார்ந்து கொண்டு விட்டாள்.

விஷ்ணு புராண வியாக்யானத்திலே பார்த்தோமானால், ஸ்ரீதரர் என்பவர் ஸ்ரீதரீயம் என்பதிலே அழகாக வியாக்யானம் பண்ணுகிறார். விஷ்ணு சித்தர் என்பவர், விஷ்ணுசித்தீயம் என்பதாக அதை

குறையொன்றுமில்லை



வியாக்யானம் பண்ணுகிறார். இந்த விஷ்ணுசித்தருக்கு எங்கள் ஆழ்வார் என்று பெயர். அவர் கேட்கிறார். 'அந்த மஹாலக்ஷ்மிக்கு வெட்கம் இராதோ...? இத்தனை பேர் பார்க்கிறபோது, எம் பெருமானின் வக்ஷஸ்தலத்திலே ஏறி உட்காருவது என்றால், ஏகாந்தத்தில் பண்ண வேண்டியதை பகிரங்கத்திலே பண்ணுவதென்றால், மஹாலக்ஷ்மிக்கு வெட்கமாக இல்லையா?' என்று கேட்கிறார்! கேட்டுவிட்டுச் சொல்கிறார்:

'மற்றவர்களெல்லாம் இந்தக் காட்சியைப் பார்க்கிறார்களே... அவர்களெல்லாம் புருஷர்களாயிருந்தால்தானே வெட்கப்பட வேண்டும்? எல்லோருமே ஸ்த்ரீகள்தான்' என்று சொல்லிவிட்டார்! பகவான் விஷ்ணு ஒருவன்தான் புருஷன். மற்ற எல்லோரும் அவன் முன்னிலையிலே ஸ்த்ரீகள்.

சாச்வதம் சிவம் அச்சுதம் - மூவேழுலகுக்கும் நாதன் அவன். அவனே எல்லோருக்கும் பர்த்தாவானதனாலே, மஹாலக்ஷ்மி வெட்கப்படாமல் ஏறி உட்கார்ந்துகொண்டு விட்டாள்.

ஆகையினாலே, புருஷன் என்றாலே பகவானைத்தான் குறிக்கும். எல்லா ஆசார்யர்களும் சொல்லக்கூடிய விஷயம் இது!

பஹூ தானாது புருஷ:

24

புரி சயனாது புருஷ:
பூர்ணத்து வாது புருஷ:
புராணத்துவாது புருஷ:

இந்த நான்கும் புருஷ சப்தத்துக்குப் பொருள். புரு என்றால் பஹு - நிறைய - என்று அர்த்தம். இந்திரனுக்குப் புருஹூதன் என்று ஒரு பெயர் உண்டு. யக்ஞத்தில் அதிகமாக அழைக்கப்படக்கூடியவன் அவன் தான். அவனை வெறுமே கூப்பிட்டபடியே இருப்பார்கள். அடிக்கடி அழைக்கப்படக் கூடியவன் புருஹூதன்.

ஆகவே 'புரு' என்ற சப்தத்துக்கு நிறைய என்று பொருள். நிறைய, வாரி வாரி, வாரி வாரி வழங்கும்படியான வள்ளல் பரமாத்மா. கொடுக்கும் கரமேயொழிய கொள்ளும் கரமில்லை பகவானிடத்திலே.

அதனால் புருஷ சப்தத்தினால், 'வாரி வழங்கும் வள்ளல்' என்ற பொருள் கிடைக்கிறது நமக்கு. அபரிமிதமாய்க் கொடுக்கக் கூடியவர் பரமாத்மா.

வஸ்திரம் வேண்டுமா...? திரௌபதிக்குக் கொடுத்தான் பாருங்கள் வஸ்திரதானம். அவனை மாதிரி வேறு யார் பண்ண முடியும்! பார்த்தான் அவன்... நூலினால் பின்னப்பட்ட வஸ்திரத்தைக் கொடுத்து, அதை இழுத்த அத்தனை பேரின் மனைவிமார் கழுத்திலும் இருந்த நூலை அறுத்தெறிந்தான் பரமாத்மா! ஏனென்றால், அவர்கள் பண்ணிய அந்தக் காரியத்துக்காக, அன்று சங்கல்பம் பண்ணிக்கொண்டான் பரமாத்மா. அந்த கிருத்தியத்தைத் தாள முடியவில்லை அவனுக்கு... 'கிருஷ்ணாவாம் தூரவாஸினம்' என்று கதறி அழுதிருக்கிறான். அப்போதும் திரௌபதியை அவன் போய் ரக்ஷிக்கவில்லை. அவன் திருநாமம் ரக்ஷித்தது. - இதை பகவானே பேசியிருக்கிறான். கோவிந்தா என்ற திருநாமம் ரக்ஷித்தது. அப்படிப்பட்ட ரீதியிலே பகவான் வஸ்திரதானம் பண்ணினான். விசேஷமாக அன்னதானம் பண்ணினான். உயர்ந்ததான தீர்த்த தானமும் பண்ணினான்.

அன்னதானம் என்றால், தன்னையே அன்னமாக எல்லோருக்கும் காட்டிக் கொடுத்தான்.

விரஜா நதி தீர்த்தத்தை, எல்லோருக்கும் மோக்ஷ கதியிலே கொடுக்கிறான்.

ஆகவே வஸ்திரதானம், அன்னதானம், தீர்த்த தானம் எல்லாம் பகவான்தான் அளிக்கிறான் நமக்கு.

எல்லா தேவதைகளும் நம் வஸ்திரத்திலே இருக்கிறார்கள். அதனால், இந்த வஸ்திரத்தினிடத்திலே நமக்கு ரொம்ப கௌரவ புத்தி இருக்க வேண்டும். ரொம்ப ஜாக்கிரதையாக நாம் நடந்து கொள்ள வேண்டும்.

வஸ்திரத்திலே சகல 'தேவதைகளும் இருக்கிறார்கள். நமக்கு வியர்வை கொட்டுகிறது, வெயில் காலத்தில்... தாள முடியவில்லை. அப்போது வஸ்திரத்தை எடுத்து விசிறிக் கொள்ளக் கூடாது என்கிறது சாஸ்திரம். வேறு விசிறியைத்தான் கையில் வைத்துக் கொள்ள வேண்டும். வஸ்திரத்தை விசிறியாக்குவது தவறு என்று காட்டித் தருகிறது. அவ்வளவு விவரித்துச் சொல்லப் படுகிறது, வஸ்திரத்தைப் பற்றிய விஷ

திரைக் கவிதை!



• நூல் வெளியீட்டு விழாவில்...

யங்கள்.

வேஷ்டியை உடுத்திக் கொள்ளும்போது, கச்சம் சரியாக வர வேண்டுமென்பதற்காக, அதன் முனையைக் கால்கட்டை விரலில் போட்டு அழுக்கி இருப்பார்கள். அந்த கால் கட்டை விரலால் இழுப்பது மகா அபசாரம் என்கிறது! அவிழ்த்துப் போட்ட வஸ்திரத்தைக் காலாலே ஒரு மூலையில் தள்ளுவது - இதெல்லாம் தப்பு. சர்வ தேவதைகளும் வஸ்திரத்திலே இருக்கிறார்கள். பீதாம்பரத்தைத் தரித்துக் கொண்டிருக்கிறான், பரமாத்மா. சர்வ தேவதைகளும் அதனிடத்தில் இருப்பதால் அந்த வஸ்திரத்திடம் நமக்கு ரொம்ப மதிப்பு வேண்டும்.

அப்படிப்பட்ட உயர்ந்ததான வஸ்

திரத்தை தானம் பண்ணினான் பரமாத்மா.

ஆகவே பஹுதானாத் புருஷ: - எல்லாவற்றையும் எல்லோருக்கும் கொடுக்கக் கூடியவன் அவன்.

புரி சயனாது புருஷ: 'பன்னென்று பட்டிணம் காப்பே என்கிறார் பெரியாழ்வார். 'பன்' என்றால் இந்த சரீரம். 'புரி' என்றால் சரீரம். இந்த சரீரத்துக்குள்ளே இந்தப் பரமாத்மா இருக்கிறான்.

ஊன் இடைச் சுவர் வைத்து, என்பு
தூண் நாட்டி
உரோமம் வேய்ந்து, ஒன்பது
வாசல் -
தான் உடைக் குரம்பை பிரியும்போது.

'ஒற்றையிலையென' என்ற கவிதை நூல் வெளியீட்டு விழாவில், தமது ஒரு கவிதைக்கான விஷுவலை (திரைக் கவிதை) ஒளிபரப்பினார் லீனா மணிமேகலை.

"சர்வதேச திரைப்பட விழாக்களில் இதற்கென்றே ஒரு பிரிவை வைத்திருக்கிறார்கள். ஆனால் டாக்குமென்டரி, திரைக் கவிதை போன்றவற்றை மக்களிடம் கொண்டு செல்ல தமிழகத்தில் வழியில்லாமல் இருக்கிறது" என்று கவலைப்படுகிறார் லீனா!

'தீர்ந்து போயிருந்தது காதல்' என்ற இந்த ஐந்து நிமிடத் திரைக் கவிதைக்கான மொத்த செலவு முப்பதாயிரம் ரூபாயாம்!

- கார்க்கி

உன் - தன்
சரணமே சரணம் என்று இருந்தேன்;
தேன் உடைக் கமலத் திருவினுக்கு
அரசே!
திரை கொள் மா நெடுங் கடல்
கிடந்தாய்
தான் உடைத் தவத்தால் திருவடி
அடைந்தேன் -
நைமிசாரண்யத்துள் எந்தாய்!

மாமிச ரத்தத்தினால் பிசையப்பட்ட சுவர்; எலும்புகளால் அமைந்த தூண்கள்; ரோமத்தினால் மேலே கூரை. அதற்கும் மேலே வாஸ்து சாஸ்திர ரீதியாக ஒன்பது வாசல்! ஒற்றைப்படை ரீதியிலே வாசல் அமைய வேண்டும் என்பது வாஸ்து சாஸ்திரம். ஆகவே உடலில் ஒன்பது வாசல்!

நாம் க்ஷேமமாக அந்தந்த வாசற்படி வழியாகப் போக வேண்டும், வர வேண்டும் அல்லவா... அதற்காகத்தான் அவை எவ்வாறு அமைய வேண்டும் என்பதை சாஸ்திரம் சொல்கிறது. ஒரு ஆசார்யனுக்கு சிஷ்யன் பண்ணக்கூடிய கடமை என்னவென்றால், விக்ரஹம் பண்ணி கோயில் கட்டுவது கூட இரண்டாவது பட்சம்தான். ஆனால் முக்கியமாக அவர் இருந்த இடத்தை, அவர் வாழ்ந்த இடத்தை ரக்ஷிக்க வேண்டும் என்கிறது சாஸ்திரம். அதை மாற்றிவிடக் கூடாது. அவர் எப்படி உட்கார்ந்திருந்தார், எதையெதை உபயோகித்தார் என்று பார்த்து, எல்லாவற்றையும் அப்படியே வைத்திருக்க வேண்டும். அந்த இடத்தை ரக்ஷிக்க வேண்டும். அவரால் இயற்றப்பட்ட கிரந்தம் இருக்கிறது பாருங்கள்... அதை நன்கு கற்று, மற்றவர்களுக்கும் எடுத்துச் சொல்ல வேண்டும். பரவச் செய்ய வேண்டும். அப்படிச் செய்கிறவன்தான் உத்தமமான சிஷ்யன்.

இவ்வாறாக நம் உடலில் ஒன்பது வாயிற்படிகள்... நவதுவாரபுரே...! ஒன்பது வாயில் படிகளையுடைய திவ்யமான, அழகான கட்டடம்.

அழகான வீட்டைக் கட்டிக் கொடுத்து க்ஷேத்திரக்ஞனான ஜீவாத்மாவைக் கொண்டு வந்து அதிலே வைத்திருக்கிறான் பகவான். இப்போது கிருஹப் பிரவேசத்தையும் நடத்துகிறான் பரமாத்மா - புதுமனை புகுவிழா! நூதன கிரஹப்பிரவேசம். இதற்குள்ளே உட்கார வைத்து, 'ஜாக்கிரதையாக இரு; பார்த்துக் கொள்' என்று சொல்கிறான். அவனும் பக்கத்திலேயே உட்கார்ந்திருக்கிறான்.

ஆனால் கட்டிக் கொடுத்த உடனே இந்த ஷேத்ரக்ஞன் பண்ணுகிற காரியம் என்ன தெரியுமோ...? கட்டிக் கொடுத்தவனை மறப்பதுதான்!

கிருதக்ஞர்களாக, யார் இதை நமக்குக் கொடுத்தார்களோ, அவனிடம் அடியோடு பற்று இல்லாமல் போகும்போது, இந்த வீட்டிலே மமகாரம், ஆங்காரம் ஜாஸ்தியாகப் போய்விடுகிறது. இதைப் பேணி வளர்ப்பதிலேயும், அலங்காரம் பண்ணிக் கொள்வதிலேயும், வெறுமே தீனி போட்டு வளர்ப்பதிலேயும் வெறுமே பொழுது கழிகிறது!

(வளரும்)

அறிமுகம்-1

'நாஸா'வை உதறிய பரணி!

'நம்ம ஏரியாவில் பார்த்திருக்கோமே' என்று எண்ணத் தோன்றும் தோழமையான தோற்றம் பரணிக்கு. 'விஜய், தனுஷ் வரிசையிலே, உன்னையும் தமிழ் மக்களுக்குப் பிடிக்கும் டான்னு எல்லோரும் சொன்னதாலே நடிக்க வந்துட்டேன்'' என்று சொல்லும் பரணி, 'என்னவோ பிடிச்சிருக்கு' படத்தின் ஹீரோ. முதல்படம் பொங்கல் வெளியீட்டுக்குத் தயாராகிக் கொண்டிருக்கும்போதே, லுக், ஸ்வீட் ராஸ்கல், என்று பிஸியாகிவிட்டார். அமெரிக்காவில் வருட ஊதியமாக முப்பது லட்சம் கிடைத்து வந்த டேட்டா பேஸ் அட்மினிஸ்ட்ரேட்டில் வேலையை, அம்மாவின் வேண்டுகோளுக்கு இணங்க விட்டு விட்டு, நாடு திரும்பிய நல்லப் பையன்.

"சினிமாவைப் படித்துவிட்டு வா என்று அமெரிக்கா அனுப்பி வைத்தார்கள். எனக்கு விருப்பமில்லை. டொரெண்டோ பல்கலையில் மாஸ்டர் இன் சயின்ஸ் பட்டத்துக்காக 'மிலிட்டரி செக்யூரிட்டி'யை விரும்பிப் படித்தேன். நாஸாவில் சேர வேண்டும் என்ற விருப்பம் இருந்தது. ஆனால் சினிமா பாசமாக அரவணைத்துக் கொண்டது'' எனும் பரணியின் குடும்பத் திற்கும், சினிமாவுக்கும் ஏதேனும் தொடர் பிருக்கிறதா? நிறைய! தாத்தா கே.ஆர். பாலன் அரை சதம் தமிழ்ப் படங்களைத் தயாரித்தவர். பிதாமகன் படத்தில் கோமதி அக்கா பாத்திரத் தில் வாழ்ந்து காட்டிய சங்கீதா இவரது தங்கை.

"நேர்மை, கடுமையான உழைப்பு, தியாகம் இந்த மூணு விஷயங்களை அப்படியே தங்கை கிட்டே கத்துகிட்டேன். வயசுலே சின்னவ. ஆனால் கத்துக்க அவகிட்ட நிறைய இருக்கு'' என்கிறார் அடக்கமாக. ஒவ்வொருவருக்கும் ஒரு பிரச்னை என்றால், பரணிக்குப் புதுமாதிரியான பிரச்னை. தாத்தா தயாரிப்பாளர் என்பதால், கதை சொல்ல வருகிற உதவி இயக்குனர்கள், படத்திற்கு நிதி உதவியும் கோருகிறார்களாம். "இது போன்று வரும் வாய்ப்புகளை மறுத்து விடுகிறேன். நடிப்பு அல்லது தயாரிப்பு, இரண்டில் ஒன்றில்தான் ஈடுபட முடியும். இப்போதைக்கு நடிப்புத்தான் பிடித்திருக்கிறது" என்று தீர்மானமாகச் சொல்லும் பரணி, "ஒரு நடிகனின் எதிர்காலம் அவனது கையில் இல்லை. அதை நிர்ணயிக்கும் தகுதி இயக்குனர்களுக்குத்தான் உண்டு'' என இயக்குனர்களின் தலையில் பெரிய ஐஸ் கட்டிகளைத் தூக்கி வைக்கிறார்.



இப்போது நடித்து வரும் 'லுக்' படத்தில் ஒரு குப்பத்துப் பையன் பாத்திரம். 'ஸ்வீட் ராஸ்கல்' படத்திலோ 'புதிய பாதை' பார்த்திபன் போல எல்லோர் மனத்திலும் இடம் பிடிக்கிற பாத்திரம் என்று சந்தோஷப்படும் இவர், நிஜத்திலும் இதே கேரக்டர்தானாம். சமீபத்தில் இவர் செய்திருக்கும் ஒரு ஸ்வீட் ராஸ்கல்தனம், தன்னிடம் பிச்சை கேட்ட பத்து வயது சாலையோரச் சிறுவனை அழைத்துப் போய், டான்பாஸ்கோ இல்லத்தில் சேர்த்துவிட்டு வந்திருப்பது.

- ஜெய்


சினிமா ஸ்பெஷல்

அறிமுகம்-2

அதிரவைக்கும் ஆர்யன்!



நீண்ட முகம். அதில் அடர்த்தியான தாடி. கூர்மையான ஸ்பெஷல் சைஸ் மூக்கு. அதில் தெறிக்கும் மூர்க்கம். நீள் சதுரக் கண்களில் தேக்கி வைத்திருக்கும் மெஸ்மரிஸப் பார்வை. தடித்த உதடுகளில் ஒளிந்து கிடக்கும் சூட்சுமமௌனம். போதாக்குறைக்குத் தோள்களில் புரளும் தலைமுடி! ஆர்யனைப் பார்த்தாலே அடிவயிறு கலங்குகிறது. பேச்சுக் கொடுத்தால் குழந்தை மாதிரி அந்நியோன்யம் காட்டுகிறார்.



"நிஜத்துலே நான் சாஃப்ட், கேமரா முன்னாடி ஹாட்" என்று முஷ்டியை மடக்கிக் காட்டும் ஆர்யன், 'ட்ரீம்ஸ்' படத்தில் தனுஷைத் தாக்கும் வில்லன். கஸ்தூரி ராஜாவின் கண்டுபிடிப்பு.

மும்பை மெயிலைப் பிடித்துப் போய் பாலிவுட்டில் இறங்கினால், அடுத்த நாளே அமிதாப்பச்சனுடன் மோதுவதற்கு வாய்ப்புக் கிடைத்துவிடும், ஆறடி நான்கு அங்குல உயரம் கொண்ட இந்த வேலூர் இளைஞர், சினிமாவுக்குள் அங்குலம் அங்குலமாக நுழைந்திருக்கிறார்.

"ஒன்பதாம் வகுப்பு படிக்கும்போதே வீட்டை விட்டு, நடிப்பு ஆசையிலே சென்னைக்கு ஓடி வந்துட்டேன். இங்கே ஹோட்டல்லே வேலை செஞ்சுகிட்டு இருந்த என்னை, தேடிக் கண்டுபிடிச்சு அப்பா கூட்டிக்கிட்டுப் போயிட்டார். அப்பா, அம்மா இரண்டு பேருமே தலைமை ஆசிரியர்கள். நானும் ஒரு ஆசிரியர் ஆகணும்னு பி.எட். படிக்கச் சொன்னாங்க. பணம்தான் வீணாகும்னு சொல்லிட்டு சென்னைக்கு வீறாப்பா ஓடி வந்துட்டேன். மறுபடியும் ஹோட்டல்தான். ஆனால் வாய்ப்புத் தேட நேரம் கிடைக்காதுன்னு தெரிஞ்ச பிறகு ஹோட்டலை விட்டு வெளியே வந்து, வடபழனி கோவில்கிட்டே பிளாட்பார வாசிகளோடு தங்கிகிட்டே, வாய்ப்புத் தேட ஆரம்பிச்சேன். வயித்துப்பாட்டுக்கு கல்யாண சமையல் வேலைக்கு, அப்பப்போ போவேன். ஒருவழியா இந்த கேர் ஆஃப் பிளாட்பாரம் வாழ்க்கை முடிவுக்கு வந்துடுச்சி. தனுஷ்கூட சரிக்கு சரி நிக்குற ஒரு அப்கம்மிங் தாதாவா நடிக்கிறேன். இப்படியொரு பெரிய ஓபனிங் கிடைக்கும்னு நான் கனவுலேகூட நினைக்கலே. இந்த வாய்ப்பைக் கொடுத்த கஸ்தூரி ராஜாதான் எனக்குக் கடவுள்" என்று நெகிழ்கிறார் ஆர்யன்.

"நான் நல்லா நடிக்க மாட்டேன். நல்லா நடிக்கணும் என்று பதற்றப் படவும் மாட்டேன். ஆனால் எனது கதாபாத்திரம் என்ன செய்யுமோ, அதை மட்டும் செய்வேன்" என்று சொல்லும் இந்த இளம் வில்லன், பள்ளிப் பருவத்தில் தனது வீட்டுக்கு வரும் விருந்தாளிகள், அக்கம்பக்கத்தினரை அப்படியே இமிடேட் செய்துகாட்ட, அதைப் பார்த்த இவரது அம்மா, "நீ சினிமாவுக்குப் போனா சிவாஜி மாதிரி வருவேடா!" என்று ஒருமுறை சொன்னதுதான் இவருக்கு நடிப்பு மீதான காதலுக்கு விதை போட்டிருக்கிறது.

- ஸ்ரீசக்கரம்

செவ்வாயில் முதல் பதிவு!

"சந்திரனில் ஒரு விண் வெளி நிலையம் அமைக்கப் போகிறோம். செவ்வாய் கிரகத்தில் எங்கள் விண் வெளி வீரர்களை இறக்கப் போகிறோம்" என்று கூறியிருக்





கிறார்கள் அமெரிக்க அதிகாரிகள்.

விரைவில் ஜனாதிபதி புஷ் இது குறித்து அறிவிக்கப் போகிறாராம்!

செவ்வாயில் விண்வெளி வீரர்களை இறக்குவது என்பது அவர்களின் நீண்ட காலத் திட்டமாகத்தான் இருக்க முடியும். என்றாலும், விண்வெளித் துறையில் அமெரிக்கா இப்போதைக்குச் சந்தோஷப் பட்டுக் கொள்ள, வேறொரு விஷயம் இருக்கிறது.

அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான நாஸா அனுப்பிய 'ஸ்பிரிட்' என்ற பெயர் கொண்ட ரோபோ, செவ்வாய் கிரகத்தில் வெற்றிகரமாக சமீபத்தில் இறங்கியிருக்கிறது. அது இறங்கிய இடத்திற்கு 'கொலம்பியா' என்ற பெயர் வைக்கப் போகிறார்கள். சென்ற வருடம் ஜனவரி மாதம் (நம் கல்பனா சாவ்லா உள்ளிட்ட) ஏழு விண்வெளி வீரர்களைச் சுமந்து சென்று, வரும்போது வெடித்துச் சிதறிய விண் வெளிக்கலத்தின் பெயர் அது, என்பது நினைவிருக்கலாம். இதற்காக 'கொலம்பியா' என்ற பெயர் செதுக்கிய அலுமினியத் தகடு ஒன்றை அந்த ரோபோ சுமந்து சென்றது. அந்தத் தகடு இப்போது செவ்வாயில் பதிக்கப்பட்டிருக்கிறது.

ஆக மனித முயற்சியின் தோல்விதான் செவ்வாய் கிரகத்தில் முதலில் பதிவு செய்யப்பட்டிருக்கிறது! (அல்லது அது வெற்றிப் பாதையின் முதல் படி!)

இந்தப் பெயரிடும் நிகழ்வு விரைவில் சட்டபூர்வமாக்கப்படுமாம். அதாவது, சர்வதேச விண்வெளி ஆராய்ச்சியாளர்கள் கூட்டமைப்பில், இது விரைவில் ஒப்புதல் பெறும்.

அமெரிக்கா இந்த விஷயத்தில் ஆனந்தப்பட்டாலும், பிரிட்டனுக்குச் செவ்வாயைப் பொறுத்தவரை வருத்தம்தான். செவ்வாய்க்கு அனுப்பப்பட்ட அவர்களது ரோபோவான 'பீகிள் 2'வுக்கு என்ன ஆயிற்று என்று தெரியவில்லை. பத்து நாட்களுக்கு முன்புவரை கூட அதைக் கண்டுபிடித்து உயிர்ப்பித்து விட முடியும் என்ற நம்பிக்கை, பிரிட்டிஷ் விஞ்ஞானிகளுக்கு இருந்தது. அதற்காக அந்த ரோபோக் குழந்தையின் தாய்க் கருவியான மார்ஸ் எக்ஸ்ப்ரஸ் என்ற பெயரிட்ட இயந்திரத்தை, செவ்வாய் கிரகத்தின் சில பகுதிகளைச் சுற்ற வைத்தார்கள். பலவிதமாக முயற்சித்தும் தாயின் கதறலுக்கு, குழந்தை ஒரு முனகலைக் கூட, பதிலாகத் தரவில்லை. 'இது எங்களுக்குப் பெரும் பின்னடைவுதான் என்றாலும், இன்னமும் கூட நாங்கள் முழு நம்பிக்கையை இழந்துவிடவில்லை' என்கிறார்கள் விஞ்ஞானிகள், ஸ்ருதி குறைந்த தொனியில்.

அதுசரி, அமெரிக்க விண்வெளி வீரர்கள் செவ்வாயில் காலடி வைக்கும் பயணத்துக்கு எவ்வளவு செலவாகும்? சுமார் ஒரு ட்ரில்லியன் டாலர்கள் ஆகும் என்கிறார்கள். (அதாவது நூறாயிரம் கோடி டாலர்கள் மட்டுமே).

- **ஜி.எஸ்.எஸ்.**

வலை விரித்தபோது...

● நினைத்த மாதிரியெல்லாம் ஊர் சுற்ற வேண்டுமா? பெட்ரோலுக்கு அப்பா அம்மாவிடம் பணம் கறக்க எட்டு வழிகள், பிடிக்காத ஆசிரியரிடம் பிடிச்ச மாதிரி நடிக்கவும், நமக்குப் பிடித்தவர்கள் நம்மை விட்டு விலகிச் செல்வதற்கும் உள்ள தலா பதினெட்டு வாய்ப்புகள், அலுவலகம் தாமதமாகச் செல்ல காரணம் வேண்டுமா, பிடியுங்கள் இருபத்தியொரு விதமான பதில்கள்' என்று இன்டர்நெட்டில் குண்டக்க மண்டக்க நூற்றுக்கணக்கான தலைப்புகள் தோன்றி, நம் தலையைச் சுற்ற வைக்கின்றன.

எதைக் கிளிக் செய்தாலும் இருபத்தியொரு உட்பிரிவுகள், முப்பத்திரண்டு உப தலைப்புகள், 'இனிமையாக வாழ எளிமையான வழிகள்' என்று ஜோக் ஆர்ச்சிவ் டாட் காமில் ஒரு உட்பிரிவு. அதில் ஓர் உபதலைப்பு - எப்பொழுதுமே பெண் ஆணைப் புரிந்து கொள்ள முடியாததற்கான பத்துக் காரணங்கள். மாதிரிக்கு ஒன்று -

'எப்பொழுதுமே நாம் தவறாகத்தான் பயிற்றுவிக்கப்பட்டிருக்கிறோம். உதாரணமாக, சூப்பர் மார்க்கெட்டுகள் ஆணுக்கு கேலிக்குரிய பிரம்மாண்ட கடற்பறவையைப் போலத்தான் காட்சியளிக்கின்றன. அவனிடம் போய் முட்டை வாங்கி வா, ரொட்டி வாங்கி வா, சர்க்கரை வாங்கி வா என்று சொன்னால், பாவம் அவன் என்ன செய்வான். ஒரு கேஸ் பியரோ, ஒரு ஜோடி ஜீன்ஸோ அவனுக்குப் பிடித்த ஒரு மரத்தையோ ஏன் வாங்கி வரச் சொல்வதில்லை...!' (ரொம்பக் கொழுப்புதான்!)

● அமெரிக்காவில் 'சைடுவாக் ஸான்டா' என்றொரு நன்னார்வத் தொண்டு நிறுவனம் உள்ளது. இதன் சேவைகளை பட்டியலில் அடக்குவது சிரமம். ஞாயிறு விடுமுறைகளில் மார்க்கெட் தெருக்களில் மக்கள் கூட்டத்தை நெறிப்படுத்துவதிலிருந்து, கர்ப்பிணிப் பெண்களுக்குப் பேறுகால உதவிகள் ஆற்றுவது வரை, பல்வேறு உபயோகங்கள். புறக்கணிக்கப்பட்ட குழந்தைகளுக்குத் தஞ்சம், நிம்மதி தேடும் முதியவர்களுக்குப் புகலிடம், பள்ளிக்கு அப்பால் குழந்தைகளின் ஈடுபாடுகளை வளர்த்தெடுத்தல், வீடில்லாதவர்களுக்குப் பாதுகாப்பு, யாருக்கு வேண்டுமானாலும் அவசரப் பிரச்னைகள் தீர்க்க முன் வருதல், அவரவர்க்கு விருப்பமான புத்தகங்களை தருவித்து வழங்குதல், என நாடு தழுவிய சேவை. வருமானத்தை எதிர்காணாத பணிவிடையே இதன் சிறப்பு. லாஸ் ஏஞ்சல்ஸ் தெருக்களில் 1900-ல் துவங்கி நூற்றிமூன்று ஆண்டுகளைக் கடந்த சேவை. சம்பள அடிப்படையில் பன்னிரெண்டாயிரம் பேர், ஓய்வு நேரம், விடுமுறை தினங்கள் என சம்பளமில்லாமல் வந்து உழைப்பை நல்குபவர்கள், நாற்பத்தியோராயிரம் பேர். ஜெயகாந்தன் கணக்குப்படி ஊருக்கு நூறு பேர் என்றால்கூட, அமெரிக்க மக்கள் தொகையில் இது அதிகம்தான்... ஆனால் நம் ஊரில்...?

● நடந்த முடிந்த ஆங்கிலப் புத்தாண்டு இரவை கோவா, பூனா வந்து ரசனையோடு கொண்டாடிய பல இளந்தம்பதிகளின் பேட்டி, போட்டோ என்று கலக்கியிருக்கிறது ஷாதி டாட் காம். " என் வருங்காலக் கணவரோடு வெளியிடத்திற்கு வரும் முதல் நியூ இயர் இது என்பதால் இந்த இடமும் நாளும், என் வாழ்க்கையில்



ஊருக்கு நூறுககக?

சிறப்பு மிகுந்ததாக இருக்கிறது. என்னைப் பொறுத்தவரையில் புத்தாண்டு என்பது புதிய வளையத்திற்குள் செல்வதல்ல, பழைய மனஸ்தாபங்களை மறந்து, மன்னித்து, இணக்கமாகி விடுவதுதான்" என்கிறார் தன் காதலர் ஜெய்வீர் பன்வரோடு வந்திருந்த டிசைனர் அன்னாசிங். கோவாவுக்கு வந்து ஒரு மாதம் டேரா போட்டிருக்கும் எம். டி.வி. காம்பியர் நிகில் சின்னப்பா "என் காதலி பியர்ல்-க்கு நான் தரும் புத்தாண்டுப் பரிசு இது" என்கிறார். திருமண வரன் பொருத்தம் பார்த்துக் கொடுக்கும் இந்த டாட் காம், புதிய தம்பதிகள் தவிர, திருமணமாகாமலேயே கோவா, பூனா வந்த ஜோடிகளையும் பேட்டி கண்டு வெளியிட்டதுதான் இதில் ஆச்சரியம்!

- பால் நிலவன்

“வணக்கம், முன்னாள் அமைச்சரே!”

“யாரு? செம்பியனா? வாப்பா, வா!... ஃபோன்ல பேசறதுதானே உன் வழக்கம்? நேரிலேயே வந்துட்டே...?” என்றார் மோகன்.

“கல்யாணத்துல கலந்துக்கலேன்னாலும் துக்கத்துல விட்டுக் கொடுக்கக் கூடாதுன்னு சொல்வாங்க..”

“பதவி போனதுல என்னப்பா துயரம்? அம்மா கொடுத்தாங்க; அம்மாவே திருப்பி எடுத்துக்கிட்டாங்க..”

“அதை ஏன் இவ்வளவு சோகமா சொல் றீங்க?... பதவியைப் பறிச்சதுக்கு அம்மாவுக்கு நன்றி தெரிவிச்சீங்களா?”

“நன்றியா? என்னப்பா, இண்டலா...?”

“சேச்சே! பதவி பறிக்கப்பட்டதால் தானே, மோகன், சம்பத் என்கிற பெயர்கள் சட்டமும் இருக்கத்தானே செய்யுது...?”

“இருக்கட்டுமே! வாய்தா வாங்கிக் கிட்டே இருந்தா, வழக்கு முடியறதுக் குள்ளே இந்த ஆட்சியே மாறிடும்!”

“ஆட்சி மாறினா, வழக்குகள் வாபஸ் பெறப்படும்; அல்லது நீர்த்துப் போகும்படி செய்யப்படும்!”

“கண்டுபிடிச்சுட்டியே!”

“அப்ப, இன்னிக்கு உள்ள ஆட்சிக்கும் இனி வரப் போறதா நீங்க நினைக்கிற ஆட்சிக்கும் இடையே என்ன வித்தியாசம்?”

“இடக்கு மடக்கா கேள்வி கேட்கிற உன்னை பொடாவிலே பிடிச்சு உள்ளே தள்ளினா என்ன!” என்று கூறி நெடுமாறன் சிரிக்கவே, கழன்று கொண்டேன்.

• • •

செய்திகள், திரிப்பது செம்பியன்!

பேப்பர்ல பிரசுரமாகி, “ஓ! இப்படி ரெண்டு அமைச்சருங்க அ.தி.மு.க அமைச்சரவையில் இருந்தாங்களா”ன்னு ஜனங்களைப் பேச வைச்சிருக்கு...! அம்மா பதவியைப் பறிக்கலேன்னா இப்படி பிரபலமாகி யிருப்பீங்களா...?”

“ஆகா! அம்மாவுடைய கருணையே கருணை!” என்று முன்னாள் அமைச்சர் மோகன் பரவசமாகிவிட, அங்கிருந்து புறப்பட்டேன்.

• • •

நெடுமாறனைச் சந்தித்து வாழ்த்துச் சொன்னேன். “ஒரு வழியா ஜாமீன்ல வெளியே வந்துட்டீங்க; ஆனா வழக்கு நிலுவையிலேதானே இருக்கு; பொடா

பிரிட்னி ஸ்பியர்ஸுக்கு ஒரு ஐ.எஸ்.டி. போட்டேன். “கங்கிராட்ஸ்!”

“எதுக்கு?”

“எனக்கு உங்க பாட்டு அவ்வளவா பிடிக் காது; ஆனாலும் உங்களோட பேசும்படி செய்துட்டீங்களே, அதுக்காகத்தான்!”

“கல்யாணம் பண்ணி முப்பத்தாறு மணி நேரத்துலே விவாகரத்து செய்திருக்கேனே, அதுக்காக பாராட்டுறேன்னு நினைச்சேன்?”

“நான்கூட இதுக்காக நீங்க கின்னஸ் புத்தகத்திலே இடம் பெறப் போறீங்கன்னு தான் முதல்ல நினைச்சேன். ஆனா, உங்களைவிடப் பெரிய சாகசக்காரி ஒருவர் இருந்திருக்கிறார்!”

“யார் அது?”

“ஹாலிவுட் நட்சத்திரம் ஸா ஸா கேபோர் (Za Za Gabour) கல்யாணமாகி இருபத்திநாலு மணி நேரத்துல விவாகரத்து வாங்கி இருக்கார்!”

“அப்படியா! அடுத்த கல்யாணத்

• சம்பத்



• மோகன்



• நெடுமாறன்



தின்போது அவரை ஜெயித்துக் காட்டுறேன்!''

''அது கஷ்டம் மேடம்!''

''ஏன்?''

''ஸா ஸா கேபோர் கல்யாணமாகி இருபத்திநாலு மணி நேரத்துல விவாகரத்து வாங்கினது அவருடைய ஏழாவது கணவரிடமிருந்து!

• • •

அடுத்ததாக வலையில் சிக்கினார் கங்குலி. ''நீங்க ஃபாலோ ஆன் கொடுத்திருக்கணும்னு சில நிபுணர்களும், ஃபாலோ ஆன் தராமல் ஆடினதே சரின்னு வேறு சில நிபுணர்களும் ரெண்டுவிதமாயும் பேசியிருக்காங்களே?''

''எனக்கு அந்தச் சமயம் எது சரின்னு தோணிச்சோ, அதைச் செய்தேன்...''

''எனக்கு ஒண்ணு தோணுது...''

''என்ன...?''

''இந்த மாட்சிலே இந்தியா ஜெயிச்சிருந்தா ஆஸ்திரேலியா காப்டன் தன்னோட கடைசி மாட்சிலே தோற்றது மட்டுமின்றி, தொடரையும் கோட்டை விட்டிருப்பார்... அதனால... பெருந்தன்மையா அவர் டிரா பண்ணுவதற்கு ஒரு வாய்ப்புத் தந்து நடந்துக்கிட்டீங்க...''

''அப்படின்னு நீதான் சொல்றே, நானில்லே! அதை ஞாபகம் வைச்சுக்கிட்டு சரியா எழுது!'' என்றார் கங்குலி.

• • •



• பிரிட்னி ஸ்பியர்ஸ்



• ஸா ஸா கேபோர்

''வெங்கைய நாயுடு காரு, ஏமி செப்புதுனாரு?'' என்று எஸ்.டி.டி. போட்டுக் கேட்டேன்.

''ஏனுய்யா என்னோட சுந்தரத் தெலுங்க கொலை பண்றீங்க? இங்கிலீஷிலேயே பேசித் தொலை! அதைக் கொலை பண்ணினா இங்க யாரும் கண்டுக்க மாட்டாங்க!''

''தேர்தல் சீக்கிரமே வந்துடும்; வரிச் சலுகைகள் வேற ரகம் ரகமா அறிவிச்சாச்சு.... முக்கியமா மத்திய தர வகுப்பினர், தொழிலதிபர்கள்... சந்தோஷப்படற மாதிரி...''

''தேர்தலுக்கும் அதுக்கும் முடிச்சுப் போடாதே. தே.ஜ.கூ. ஆட்சியில் பொருளாதாரம் கொழிக்குது; சலுகைகள் கிடைக்குது. ஆனா, தேர்தலுக்கும் பி.ஜே.பி ரெடி!''

"அம்மா உங்களைத் திரும்பிப் பார்க்கக் காணோமே?"

"காலம் கனியும், காத்திரு."

"எப்படிங்க கனியும்? சி.பி. ராதா கிருஷ்ணன் அழைப்பு விடுத்தா அம்மா மனம் இறங்குவாங்களா? அந்தப்பக்கம் பாருங்க, மன்மோகன்சிங் வர்றாரு; சோனியா ஃபோனிலே பேசினாங்க..."

"இந்தப் பக்கம் வாஜ்பாய் பிரதமர்; அந்தப்பக்கம் கேள்விக்குறி பிரதமர்! அதுவே போதாதா?"

"கேள்விக்குறி ஆச்சரியக் குறியா மாறிடப் போகுது, கவனமாயிருங்க!"

ஆய்வு அறிக்கை வந்துட்டுதே!" என்றேன்.

"பாலங்கள் தரமாகக் கட்டப்பட்டு உள்ளன என்பதால் ஊழலே நடக்கலைன்னு அர்த்தமில்லை" என்று பதில் வந்தபோது, கம்ப்யூட்டரின் நடுக்கம் அதிகரித்தது.

"அது சரி, இப்ப கடல் நீரைக் குடி நீராக மாற்றும் திட்டம் ஆரம்பமாவதற்கு முன்னாலேயே ஊழல் நாற்றம் அடிக்குதே..."

"ஹூம்! நான் மட்டும் நாளைக்கு பிரதமராக வந்தால் முதல் காரியமா, ரஷ்ய நாட்டுடன் உறவைத் துண்டித்து, நமது தூதரை வாபஸ் பெற்று..."

கம்ப்யூட்டர் உஷ்ணம் தாங்காமல் வெடித்தேவிட்டது!

• • •

போயஸ் தோட்டத்துடன் ஈமெயில் தொடர்பு கொண்டால் கம்ப்யூட்டரே கிடுகிடுவென்று ஆடியது!

"சென்னையில், மேயர் ஸ்டாலின் காலத்தில் கட்டப்பட்ட மேம்பாலங்கள் (flyover) எல்லாம் தரமான விதத்தில்தான் அமைக்கப்பட்டுள்ளன என்று



• கங்குலி

• • •

கலைஞரிடம் ஃபோனில் தொடர்பு கொண்டேன்.

"மன்மோகன்சிங் வந்து பேசிட்டுத் திரும்பிட்டாரு. தொகுதி உடன்பாடெல்லாம் சுமுகமா முடியணும். ராமதாஸ் என்னன்னா 10-8-ன்னு மெல்ல நிதானமா இறங்கி வராரு..."

"எல்லாம் நல்ல படியா முடியும், கவலைப் படாதே!"

"அதைவிட முக்கியம், தி.மு.க. தொண்டர்கள், தொகுதி தங்களை விட்டுப் போய் விட்டதாக நினைக்காமல், காங்கிரஸ் வேட்பாளருக்காக ஆங்காங்கே கடுமையாக உழைக்கணும்"

"எனக்கு அந்தக் கவலை இல்லை..."

"பின்னே...?"

"காங்கிரஸ் தொண்டர்கள் கோஷ்டிப் பூசலில், தங்கள் வேட்பாளருக்கு எதிராக வேலை செய்யாமல் இருந்தால், அதுவே பெரிய உபகாரம்!" என்று கூறி டக்கென்று ரிஸீவரை வைத்தார் கலைஞர்.

"கூட்டணி என்பதே சந்தர்ப்பவாதம்தான்!"

"**கா**மராஜர் மாதிரியான தலைவர்கள் இந்த மண்ணில்தான் வாழ்ந்தார்களா என்ற சந்தேகம் வருகிறது. யார் யாரையெல்லாம் புகழ்கிறோமோ, அவர்களுக்கெல்லாம் நடைமுறை வாழ்வில் துரோகம் செய்கிறோம். நாம் லாயக்கற்றவர்களாக இருப்பதால்தான் லாயக்கற்ற தலைவர்கள் கிடைத்திருக்கிறார்கள். சர்வாதிகாரத்துக்குத் தகுந்த சூழலை ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறோம்"

- எழுத்தாளர் மணா எழுதிய கனவின் பாதை, 'தமிழ் மண்ணின் சாமிகள்', சாவித்ரி கண்ணன் 'துக்ளக்'கில் எழுதிய 'கண்டதும் கேட்டதும்', 'உலக நாடுகளில் தமிழர்கள்', கோபண்ணாவின் 'காமராஜர் ஒரு சகாப்தம்' ஆகிய நூல்களின் வெளியீட்டு விழா கடந்த வாரம் சென்னையில் நடந்தது.

இந்த விழாவில் பேசிய ஜெயகாந்தன்தான் இப்படிக் கொதித்தார்.

"அரசியலில் சந்தர்ப்பவாதக் கூட்டணி பற்றியெல்லாம் பேசுகிறார்கள். உண்மையில் கூட்டணி என்பதே ஒரு சந்தர்ப்பவாதம்தான். இதை வெளிப்படையாகச் சொல்ல யாருக்கும் தைரியமில்லை. இந்திய அரசியலே கடைந்தெடுத்த சந்தர்ப்பவாதம்தான்" என்று அவர் தொடர்ந்தபோது கூட்டத்தில் கைதட்டல்!

ஜெயகாந்தன் அரசியலை ஒரு பிடி பிடிக்க, முன்னாள் துணை வேந்தர் க.ப. அறவாணன் சினிமாவைச் சாடினார்.

"தமிழகத்தில் அரசியல் அழிவுக்கும் தமிழர்களின் வளர்ச்சிக்கும் தடையாக இருப்பது சினிமாதான். இந்த சினிமாவால் மக்களுக்கு பிரச்னைகள் ஏற்பட்டதுதான் அதிகம்" என்றார் அறவாணன்.

இலக்கிய, புத்தக வெளியீட்டுக் கூட்டங்களை நடத்துபவர்களுக்கும் வருபவர்களுக்கும் இரண்டு அறிவுரைகள் :

1. கூட்டத்தை ஒரு சாக்காக வைத்து சந்தித்துக் கொள்ளும் நண்பர்கள் அரங்கத்துக்கு வெளியே அடிக்கும் லூட்டி, மேடைப்பேச்சை மிகவும் பாதிக்கிறது. தவிர்க்கலாம்.

2. பேச்சாளர்களுக்குப் பத்து நிமிடம் என்று குறித்துக் கொண்டு பேசச் சொல்லுங்கள். சிலர் மைக்கைப் பிடித்தால் மணியைப் பற்றிக் கவலைப்படுவதில்லை. இருக்கைகள் காலியாவதுதான் மிச்சம்!

- ஸ்ரீநி



சேலை கட்ட பயிற்சி!





திவ்யாவாக பெயர் மாற்றம் பெற்றிருக்கிற தீபுவுக்கு இரட்டை ஜடை வயசு! அதற்குள் 'அன்பு', 'நீ மட்டும்', 'உள்ளம்' என்று மூன்று படங்களில் நாயகியாக நடித்து முடித்து விட்டார்.

சாவகாசமான ஒரு மாலையில் அவரது வீட்டுக்குள் நுழைந்தால் 'டியூஷன் போயிட்டு இப்பதான் வந்தேன்' என்றார்.

"டியூஷனா?"

ஆமாம். வடபழனி பள்ளியொன்றில் ப்ளஸ் ஒன் படிக்கிறார்.

"பாஸாயிடுவீங்களா?" என்று வம்பை ஆரம்பித்தோம்.

"அதுக்குத்தான் ஒ.பி. அடிக்கிற குரூப் எடுத்திருக்கேன். நடிச்சுக்கிட்டே படிக்கணும், படிச்சுகிட்டே நடிக்கணும்னா சும்மாவா?" என்றார்.

ஒரு முடிவோடுதான் களமிறங்கி இருக்கிறார் என்பது புரிந்தது.

இவர் திரைக்குள் தலைகாட்ட சித்திதான் காரணமாம்!

"சித்தி விஜயலக்ஷ்மி டான்ஸரா இருக்காங்க. 'அழகி' தயாரிப்பாளர் அடுத்தப் படம் பண்ணப் போறார்னு கேள்விப்பட்டதும், யதேச்சையா என் ஃபோட்டோவைக் காட்டினாங்க சித்தி. அவருக்குப் பிடிச்சிருந்தது. எனக்கு யோசிக்கவே நேரமில்லை. ஷூட்டிங்குக்கு ரெடியாயிட்டேன். அந்தப்படம் அன்பு" என்கிற திவ்யா, நடிப்பதற்காக நிறையக் கற்றுக் கொண்டாராம்.

"டான்ஸ் கத்துக்கறேன். சின்னச் சின்னதா முகபாவனைகள் காட்டறதுக்கு வீட்டிலேயே பயிற்சி எடுக்கறேன். வழுக்கி விழாம சேலை கட்டறதுக்கும் கத்துக்கறேன்" என்றவர்,

"ஷூட்டிங் ஸ்பாட்டுல எந்த மாதிரியான காட்சியானாலும், முதல்ல டைரக்டரை நடிச்சுக் காட்டச் சொல்லுவேன். ஒருத்தர் செஞ்சுகாண்பிச்சா அதைக் காப்பியடிக்கறது ஈஸியில்லையா?" என்று நம்மைப் பார்த்தார்.

"காப்பியடிக்கற பழக்கம் இன்னும் போகலையா?" என்றதும் முறைப்பு.

'கவர்ச்சி' என்று ஆரம்பித்ததுமே "அய்யய்யோ" என்று அலறுகிறார். 'ஸ்கூல் குழந்தைகளை அழ வைப்பது பாவம்டா' என்று யாரோ ஒரு ஞானி சொன்னது ஞாபகத்துக்கு வர, நகர்ந்தோம்!

- மொக்கராசு

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / PMG (CCR) 572 / 03 - 05 *
Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 358 * Registered as a Newspaper in Srilanka